விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆவணி 12 புதன்கிழமை (28.08.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 252

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## கொளுத்தும் வெயிலில் கதறினர் உறவுகள் 'காணாமல் போனார்' நவநீதம்பிள்ளை

### சந்திப்பைத் தடுத்தனரா தமிழ் அதிகாரிகள்?

(யாழ்ப்பாணம்)

காணாமல் போன மற்றும் கடத்தப்பட்ட தமது உறவுகளை மீட்டுத்தருமாறு கோரி யாழ்.பொது நூலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தியவர்களை சந்திக்காது திடீரெனக் காணாமல் போனார் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை.



காணாமல் போன மற்றும் கடத்தப்பட்டவர்களின் கவனயீர்ப்புப் போராட்டம் குறித்து நவநீதம்பிள்ளைக்கு தகவல் கொடுக்காது தமிழ் அரச உயர் அதிகாரிகள் மறைத்ததாகவும் இந் நிலையில் ஜனாதி (19ஆம் பக்கம் பார்க்க)

## வேட்பாளர்களிடையே துப்பாக்கிச்சூடு!

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர்கள் இருவருக்கிடையே இடம்பெற்ற கருத்து முரண்பாடு துப்பாக்கிச் சூட்டில் முடிபடைந்தது.

சாவகச்சேரி மிருசுவில் பகுதியில் நேற்றிரவு 7.30 மணியளவில் மேற்படி துப்பாக்கிச்சூடு இடம் பெற்றுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வட மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் அங்கஜன் இராமநாதனின் சகாக்களுக்கும் அதே கட்சியில் போட்டியிடும் சர்வானந்தாவின் சகாக்களுக்கும் இடையே மேற்படித் துப்பாக்கிச் சூட்டுச் (19ஆம் பக்கம் பார்க்க)

## நவநீதம்பிள்ளைக்கு கேட்காத அண்ணனைத் தொலைத்த சிறுமியின் கதறல்

(யாழ்ப்பாணம்)

என்னைச் சுட்டாலும் பரவாயில்லை என் அண்ணனைத் தாருங்கள் என சிறுமியொருவர் கதறி அழுத சம்பவம் அனைவரையும் உறையவைத்தது.

யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு (20ஆம் பக்கம் பார்க்க)



## தமிழருக்குத் தீர்வு கிடைக்கும்வரை அதிகாரத்தைப் பயன்படுத்துவேன்

### நவநீதம்பிள்ளை உறுதியளிப்பு



[யாழ்ப்பாணம்]

தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும்வரை எனது அதிகாரத்தை பிரயோகிப்பேன் என முள்ளிவாய்க்காலில் வைத்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்தார். [19ஆம் பக்கம் பார்க்க]

## முள்ளிவாய்க்காலுடன் நிறைவு பெற்றது பயணம்

(யாழ்ப்பாணம்)

இறுதிக்கட்டப் போரின் போது பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்ட முள்ளிவாய்க்கால் மற்றும் புதுமாத்தளன் பகுதிகளுக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை மக்களுடனும் சந்திப்பினை மேற்கொண்டு அவர்களின் நிலைவரங்களைக் கேட்டறிந்து கொண்டார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தார்.

இந் நிலையில் நேற்றைய தினம் பிற்பகல் 2 மணியளவில் 30 இற்கும் மேற்பட்ட வாகனத் தொடரணியுடன் முல்லைத்தீவு மாவட் (20ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ ஆட்சியின் கீழேயே நாம் வாழ்ந்து வருகிறோம்

### புதுமாத்தளன் மக்கள் முறையீடு

(யாழ்ப்பாணம்)

யுத்தம் நிறைவடைந்து விட்டதாக கூறுகிறார்கள். ஆனால் நாம் இராணுவ ஆட்சியின் கீழேயே வாழ்ந்து வருகிறோம் என புதுமாத்தளன் பகுதி மக்கள் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் தெரிவித்துள்ளனர்.

காணாமல்போன எமது பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் பற்றியும் இராணுவத்திடம் ஒப்படைத்தவர்கள் தொடர்பாகவும் இந்த அரசாங்கம் உரிய பதிலளிக்க வேண்டும். இல்லையேல் எமது உறவுகளைக் கொன்ற கொலைகாரன் என்பதை சர்வதேசத்திடம் ஒப்புக்கொள்ள வேண்டுமென முள்ளிவாய்க்காலில் வைத்து ஐ.நா. ஆணையாளரிடம் காணாமல் போன (19ஆம் பக்கம் பார்க்க)





ஐக்கிய தேசியக் கட்சி
தியாகராஜா
துவாரகேஸ்வரன்
வடமாகாண சபை
முதலமைச்சர் வேட்பாளரும்
முதன்மை வேட்பாளரும்



5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இராணுவத் தளபதி தயா ரத்நாயக்க முல்லைத்தீவுக்குத் திடீர் விஜயம்

இராணுவத் தளபதிலெப். ஜெனரல் தயா ரத்நாயக்க நேற்று முன்தினம் வன்னிக்கு திடீர் பயணம் ஒன்றை மேற்கொண்டார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனி தவுரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை நேற்று இறுதிக்கட்டப் போர் இடம்பெற்ற முள்ளிவாய்க் காலுக்கு பயணம் செய்யவிருந்த நிலையில் படைத் தளபதி லெப். ஜென்றல் தயா ரத்நாயக்க நேற்று முன் தினம்முல்லைத்தீவுக்குச் சென்றுள்ளார்.

முல்லைத்தீவுப் படைத்தலை மையகம், புதுக்குடியிருப்பில் உள்ள 68-வது படைப்பிரிவின் தலைமையகம், ஒட்டுசுட்டானில் உள்ள 64-வது படைப்பிரிவின் தலைமையகம் மற்றும் வெலிஓயா வில் உள்ள 59-வது படைப்பிரி வின் தலைமையகம் ஆகியவற்றுக் குச் சென்று உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடியஅவர், படைத்தரப் பினர் மத்தியிலும் உரையாற்றியு ள்ளார்.

அத்துடன் இந்தப் பயணத்தின் போது முல்லைத்தீவில் உள்ள படையதிகாரிகளுடன் கலந்துரை யாடிய அவர், நவநீதம்பிள்ளை செல்லவுள்ள பகுதிகளுக்கும் சென்று பொதுமக்கள் சிலரையும் சந்தித் துப் பேசியுள்ளார்.

நவநீதம்பிள்ளை முள்ளிவாய் க்கால் பகுதிக்கு பயணம் செய்யவுள் ளமை முன்னிட்டு அங்கு போரின் தடயங்களை அழிக்கும் முயற்சிக ளில் படையினர் ஈடுபட்டிருந்ததாக சில தினங்களுக்கு முன்னர் செய் திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் போரின் தடயங் களை மறைக்கும் நடவடிக்கைக ளை உறுதிப்படுத்திக் கொள்ளவும். படையினர் மத்தியில் நவநீதம்பிள் ளை தொடர்பில் எழுந்துள்ள சந் தேகங்களுக்கு விளக்கம் அளிக் கும்நோக்கிலுமே படைத்தளபதிலெப். ஜெனரல் தயா ரத்நாயக்க முல்லை த்தீவுக்கு சென்றதாக தெரியவரு கின்றது. (எ-11)

## அரியநேத்திரன் எம்.பி 4-ம் மாடிக்கு அழைப்பு

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாரா ளுமன்ற உறுப்பினர் பா.அரிய நேத்திரனை விசாரணைக்காக கொழும்பு 4-ம் மாடிக்கு வருமாறு பயங்கரவாத குற்றத்தடுப்பு புலனாய் வாளர்களால் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணசபைத் தேர்த லுக்கான தமிழ்த் தேசிய கூட்டமை ப்பின் தேர்தல் பரப்புரைகளுக்காக வடக்கில் நிற்பதாகவும் இன்று தனது மட்டக்களப்பில் உள்ள இல்லத்திற்கு சென்றபோது பயங்கரவாத குற்றத் தடுப்பு புலனாய்வாளர்கள் தனது குடும்பத்தாரிடம் சிங்களத்தினால் எழுதப்பட்ட அழைப்பாணை ஒன்றை வழங்கிவிட்டு எதிர்வரும் 3-ம் திகதி கொழும்பில் உள்ள 4-ம் மாடிக்கு தன்னை விசாரணைக்காக வருமாறு கூறிவிட்டுச் சென்றதாக அரியநேத் திரன் கூறினார். (எ-11)

## பரந்தனில் தடுக்கப்பட்டனர் காணாமல் போனோரின் உறவுகள்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை கள் ஆணையாளர் நவநீதம்பிள் ளையின் வருகையை முன்னிட்டு பரந்தன் சந்தியில் காணாமல் போனவர்கள் உறவினர்களினால் நடத்தப்படவிருந்த கவனயீர்ப்பு போராட்டம் இராணுவப் புலனாய் வுப் பிரிவினராலும் பொலிஸாரால் தடுக்கப்பட்டதோடு கலைந்து போக வில்லை என்றால் கைது செய்யப்ப டுவீர்கள் எனவும் எச்சரிக்கப்பட்டனர்.

ஐ.நா.ஆணையாளர் நேற்றைய தினம் முள்ளிவாய்க்கால் பகுதிக்கு சென்றுள்ளார் என தெரியவந்த தையடுத்து கிளிநொச்சி மாவட்டத்தி ற்குட்பட்ட பரந்தன் சந்தியில் காலை 9 மணியளவில் காணாமல் போன வர்களின் உறவினர்கள் ஒன்று கூடினர்.

கைகளில் புகைப்படங்கள் மற் றும் காணாமல் போன தமது உற வினர்கள் தொடர்பான தகவல்க ளுடன் காத்திருந்தபோது நண்பகல் 12.45 மணியளவில் அவர்கள் அங்கி ருந்து கலைக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸார் மற்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் தலையி ட்டினால் காணாமல் போனவர்களின் உறவினர்கள் அங்கிருந்து அகற்ற ப்பட்டதோடு தடியடி நடத்தவும் பொலிஸார் தயாராக நிறுத்தப்பட்டி ருந்தனர்.

இதனை விட உடனடியாக அவ் விடத்தை விட்டு எல்லோரும் கலை ந்து செல்லாவிட்டால் கைது செய்யப் படுவீர்கள் எனவும் பொலிஸாரி னால் கூறப்பட்டுள்ளது இதனை யடுத்து அவர்கள் கலைந்து சென் றனர். (எ-6)

## திருவெண்காட்டில் சங்காபிஷேகம்

(மண்டைதீவு)

மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது.

நாளைக் காலை 8 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகும்.

இரவு விநாயகப் பெருமான் வீதியுலா வருதலும் இடம்பெறும். (ந)

# தமிழர்களின் பிரச்சினை எனக்கு நன்கு தெரியும்

## அனந்தியுடனான சந்திப்பில் மனம் திறந்தார் நவநீதம் அம்மையார்

தமிழர்களின் பிரச்சினை என்ன வென்று எனக்குத் தெரியும், நான் ஐ.நா சென்றவுடன் ஆராய்ந்து நல்ல முடிவு தருவேன் என ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை உறுதியளித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளி எழிலனின் மனைவியும் வடமாகாண சபை வேட்பாளருமான அனந்தி சசிதர னை சந்தித்து பேசிய போதே அவர் மேற்கண்டவாறு உறுதியளி த்துள்ளார்.

யாழ்ப்பாணம் நல்லூர் கோவி லுக்கு அருகாமையிலுள்ள யு.என்.எச்.சி.ஆர் நிலையத் தில் வைத்தே இச்சந்திப்பு நடைபெற்றுள்ளது.சந்திப்பின் போது போர் முடிந்து 4 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் இன்னும் காணா மல் போனவர்களின தகவல் கள் எமக்கு தெரியவில்லை.

நல்லிணக்க ஆணை க்குழுவிடம் முறையிட்டோம் நீதிம ன்றில் வழக்கு தொடர்ந்தோம் ஆனால் எமக்கு எதுவிதபதிலும் வழங்கப்படவில்லை. ஆகையினால் நீங்கள்தான் எமது உறவுகளினை மீட்டுத்தரவேண்டும் என அனந்தி சசிதரன் கோரியிருந்தார்.

இதற்கு பதிலளித்த மனிதவு ரிமை ஆணையாளர், எனக்கு உங் களின் பிரச்சினை நன்றாகவே தெரியும் சென்று ஒரு நல்ல முடிபு தருவேன் என பதிலளித்துள்ளார்.

இதேவேளை இச்சந்தர்ப்பத்தில் போது வடமாகாண பிரஜைகள் குழுவினை சந்தித்த ஆணையாளர் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச் சினைகளுக்கு விரைவில் தீர்வைப் பெற்றுத்தர முடியும் என தெரிவித் துள்ளார்.

மேலும் போருக்கு பிந்திய கால த்தில் இடம்பெற்றுவரும் காணி அபகரிப்பு, திட்டமிடப்பட்ட குடியேற் றங்கள், காணாமல் போனோர் விவ காரம், தமிழ்க் கைதிகளின், விடுத லை மற்றும் உயர் பாதுகாப்பு வலயம் உள்ளிட்ட பல்வேறு விடய ங்கள் தொடர்பிலும் நவநீதம்பிள் ளைக்கு பிரஜைகள் குழு தெளிவு படுத்தியிருந்தது.

இதனை செவிமடுத்த அவர் இவை தொடர்பில் நான் நன்கு அறிந்துள்ளேன் இவை தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கலந் துரையாடி விரைவில் தீர்வினை பெற்று தருவேன் என உறுதியளி த்துள்ளார்.

இதேவேளை யு.என்.எச்.சி.ஆர் அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப் பின் போது காணாமல் போன வர்களின் உறவினர்கள் சிலர் ஐ.நா. ஆணையாளருடன் தமது உள்ளக் கதறல்களை வெளிப்படுத் தியதுடன் அவர்களுக்கு ஆணை யாளர் ஆறுதல் வார்த்தைகளையும் தெரிவித்தார். (எ-4)

## நவநீதம்பிள்ளையிடம் மகஜர் கையளிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போதைய நிலைவரம் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித வுரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளையிடம் மனித உரிமை ஆர் வலர் யோ.யூட் நிமலன் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளார்.

முல்லைத்தீவுக்கு விஜயம் செய்த அம்மையாரிடம் நவநீதம்பிள்ளை அம்மையாரிடம் முல்லைத்தீவு மக் கள் சார்பாக 18 கோரிக்கைகள் அட ங்கிய மகஜர் ஒன்றை அவர் கைய ளித்துள்ளார்.

சிங்கள மக்களைப் போல் தமிழ் மக்களும் சுயாட்சியுடன் சகல உரி மைகளையும் பெற்று வடக்குக்கி ழக்கில் சுதந்திரமாக வாழ வழி செய்ய ஐ.நா.சபை நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவரது மனு வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)


## வீடு வாடகைக்கு உண்டு

தட்டாதெருச் சந்தியில் நவீன வசதிகளுடன் ஐந்து அறைகள் கொண்ட புதிய வீடு (குளியலறை வசதியுடன்) பாதுகாப்பான சூழ லில் உடன் வாடகைக்கு உண்டு. (3805)

தொடர்பு:-0771932430



## பிள்ளையார் இன்

சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும். 6 - 10 pm - 250 /=


தினமும் **12 மணிமுதல் 3 மணிவரை** மிகச் சிறந்த சைவ, அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.

**சைவ உணவு: 150/-** **அசைவ உணவு 180/-**

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

(C-4477)


## மரண அறிவித்தல்



அரியாலையைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளி பரியோ வான் ஆலயத்தின் உதவி சபைக்குருவாகவும், சென்.ஜோன்ஸ் கல்லூரியில் ஆசிரியராகவும் பணியாற்றிய அருள்பணி V.P தனே ந்திரா (B.A Sri Lanka Dip.in Psy) அடிகளார் 26.08.2013 திங் கட்கிழமை கொழும்பில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் பரமசாமி, காலஞ்சென்ற றோசாமலரின் புதல் வரும், காலஞ்சென்ற S.E இரத்தினசிங்கம், புஸ்பராணியின் வளர்ப்பு மகனும், சந்தியேந்திரா, பியூட்டன், மைதிலி, சுகிர்தா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயசூரியா, துவாரகன், அனுஷா, கிறிஸ்ரீனா ஆகியோரின் மைத்துனரும், பானுஷா, யேசுதாசன், செரீனா ஆகியோரின் மாமனாரும் , கனிலீசா, சுசான் அம்புரோஸ் அசான் அங்கலி பெரிடில்ஷான், அரோன், டில்ஷான் ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாருடைய பூதவுடல் இன்று (28.08.2013) புதன்கிழமை அரியாலையில் உள்ள இவரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (29.08.2013) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சுண்டுக்குளி பரியோ வான் ஆலயத்தில் நல்லடக்க ஆராதனை நடைபெற்று அதனைத் தொடர்ந்து நல்லூர் பரி.யாக்கோபு ஆலயத்திற்குப் பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நடைபெறும் நல்லடக்க ஆராதனையின் பின்னர் பரி.யாக்கோபு ஆலயத்தின் (நல்லூர்) சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 233,
ஆசீர்வாதப்பர் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

(3807)

தகவல்: குடும்பத்தினர்.





வட்டக்கச்சி - கிளிநொச்சி
ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவில்
பிரமோற்சவம் - 2013

இன்று வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவிலில் 9-ம் திருவிழாவாகிய தேர்த்திருவிழா எம் பெருமான் ஸ்ரீதேவி பூமிதேவியுடன் அழகுற அருள்பாலிக்கும் அற்புதத் திருநாள். காலைப்பூசைகள் காலை 5 மணிக்கு ஆரம்பமாகி மதியம் 12 மணிக்கு நிறைவுறும். மாலைப் பூசைகள் 5 மணிக்கு ஆரம்பமாகி 8 மணிக்கு நிறைவுறும்.

(C-4487) —பரிபாலன சபையினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் முகம். மேனி. பளபளக்கவேண்டுமா?
எரிகாயங்களினால் ஏற்பட்ட தழும்புகள்
மாறவேண்டுமா?
இன்றே பாவியுங்கள்

'றோயல் ஒலிவ் ஒயில்'
Product of Spain

உணவுத் தேவைகளுக்கு ஏற்ற சுத்தமான ஒலிவ் ஒயில்

ஏக விநியோகஸ்தர்:
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567

Re packed By :
**Royal Industries**
No.221/1, Adamally Building,
Wolfendhal Street,
Colombo - 12, T.P: 0777277670
அனைத்து பாமசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். (சி/4169)





# வடக்கு தேர்தலில் இராணுவம் தலையிடக்கூடாது- விக்கிரமபாகு

(கொழும்பு)

வடக்கில் சிவில் நிர்வாகம் கிடையாது என புதிய இடதுசாரி கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார். வடக்கில் இராணுவ ஆட்சியே நிலவி வருகின்றது. இராணுவ ஆட்சியின் கீழ் தேர்தல் நடத்தப்படுவது குறித்து தேர்தல் ஆணையாளர் கவனம் செலுத்தியுள்ளார்.

தேர்தல் விடயங்களில் இராணுவத்தினர் தலையீடு செய்வது ஜனநாயக விரோதமானது. வடமாகாண சபைத்தேர்தல் ஜனநாயக விரோத சூழ்நிலையில் முன்னெடுக்கப்படுகின்றது. ஏனைய இரண்டு மாகாணங்களிலும் ஜனநாயக ரீதியான நிர்வாகக் கட்டமைப்பு காணப்படுகின்றது.

ஆளும் கட்சியினருக்கு இடையில் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர வேறு கட்சி உறுப்பினரினால் சுட்டுக்கொல்லப்படவில்லை.

ஆளும் கட்சிக்குள் இடம்பெற்ற மோதலின் காரணமாகவே பாரத லக்ஸ்மன் பிரேமச் சந்திர கொல்லப்பட்டார்.

அரசாங்கத்தின் பிழைகள் காரணமாகவே சர்வதேச முதலாளித்துவ அமைப்பான ஐக்கிய நாடுகள் அமைப்பு இலங்கையில் விசாரணை நடத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள் ளது.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் சர்வதேசம் தலையீடு செய்யும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இலங்கையின் நிலைமை பற்றி நவநீதம்பிள்ளை கேட்டால் நாட்டில் பாசிச ஆட்சி நடத்தப்படுவதாக குறிப்பிடுவேன் என விக்கிரமபாகு கருணாராட்ன தெரிவித்துள்ளார். (அ-2)


# வடமாகாண சபைத் தேர்தல் 2013



## கிளிநொச்சி மாவட்டம்

ஆசிரியராக நியமனம் பெற்று
பூநகரி மகா வித்தியாலயத்திற்கு
உழவு இயந்திரத்தில்
வந்து பதவியேற்ற
**வீ.ஆனந்தசங்கரி**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழரசுக் கட்சி)

| வீடு | X | 2 |
|---|---|---|

(CE4911)


## யாழ்ப்பாணத்தில் அதிகளவான காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணத்தில் அதிகளவான காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாக இராணுவப்பேச்சாளர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண குடாநாட்டில் அமைக்கப் பட்டிருந்த பல இராணுவ முகாம்கள் மூடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். சுமார் 30 ஏக்கர் காணியும் பத்துவீடுகளும் தென்மராட்சிப் பகுதியில் மக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தக் காணிகளும் வீடுகளும் இராணுவத்தினர் பயன்படுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. காணி உரிமையாளர்களிடம் இவை ஒப்படைக்கப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். கிரமமான முறையில் இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் பயன்படுத்தி வந்த தனியார் காணிகளையும் வீடுகளையும் ஒப்படைத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)


மனத் தளர்வா? தனிமையா?
**வாழ்க்கையில் வெறுப்பா?**
உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.
உடனே அழையுங்கள். இரகசியங்களை
முழுமையாகப் பாதுகாப்போம்.
**கை கொடுக்கும் நண்பர்கள்**
**021 222 8117**
(4463)



## மாடுகள் ஏல விற்பனை அறிவித்தல்

அல்வாய் வடமேற்கு, கமக்காரர் அமைப்பினால் கட்டாக் காலி மாடுகள் இரண்டு இதுவரை உரிமை கோரப்படாத பட்சத்தில் எதிர்வரும் 05.09.2013 அன்று காலை 10.30 மணியளவில் ஏல விற்பனை செய்யப்படும்.
04.09.2013 வரை உரிமைக்காரர்களுக்கு அவகாசம் வழங்கப்படும்.
கமக்காரர் அமைப்பு அல்வாய் வடமேற்கு (திக்கம்)
அல்வாய், வட்டவிதானையார் முகவரி, தம்பியையா,
மாறாப்புலம், அல்வாய் வடமேற்கு, அல்வாய்
(சி-4486)



# வடக்கு மாகாணசபைத் தேர்தல்- 2013

படையினரே உங்கள் வீடுகளுக்கு செல்லுங்கள்!
நாங்கள் எங்கள் வீடுகளுக்கு செல்ல வேண்டும்!

யாழ்.மாவட்டம்



**எம்.கே.சிவாஜிலிங்கம்**
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

9

| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | வீடு | X |
|---|---|---|

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | |

(E-011)



# கல்வி நிர்வாக சேவை பரீட்சை
## வழிகாட்டல் சுற்று 6 இறுதிச் சுற்று

செப்டெம்பர் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள மேற்படி பரீட்சைக்கான பயில்வுகள் தொடர்கின்றன. அநேக புதிய ஆர்வலர்களின் வேண்டுகோளுக்கிணங்க அனைவருக்குமான விசேட நிபுணத்துவ வழிகாட்டல்

**காலம் : 31.08.2013, 01.09.2013, 07.09.2013, 08.09.2013**
**இடம் : யா/வைத்தீஸ்வரா கல்லூரி**

பா.தனபாலன் (பணிப்பாளர்)
ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம்,
528, பலாலி வீதி, திருநெல்வேலி.
**தொ.பே: 0779360607**
(3802)






நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் நேஷன்ஸ் லீஸிங் சேவையின் மூலம் உங்களுக்கு தேவையான வாகனம் அல்லது இயந்திர உபகரணத்தை குறைந்த கொடுப்பனவு முறையில் துரித கதியில் பெற்றுக்கொள்ளுங்கள்.
இன்றே அழையுங்கள்: (011) 4 218 218 நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாகும் / Nations Trust Bank PLC - PQ 118
Nations Trust Bank
Nations Leasing






**புதிய சுவை! புதிய அனுபவம்! புதிய தொழில்நுட்பம்!**
அதிநவீன Pasteurized And Homogenized முறைப்படி தயாரிக்கப்பட்ட 100% சுகாதாரமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஐஸ்கிறீம் வகைகள் எமது அறிமுக விலையில் நல்லூர் விற்பனை நிலையத்தில் சுவைத்து மகிழலாம். பெறுமதி மிக்க பரிசில்கள் உங்களுக்காக காத்திருக்கின்றன.

**ஷைலோ ஐஸ்கிறீம்**
No.231, Temple Road, Nallur, Jaffna.
T.P. 021 4926003
(3587)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## கருப்பையின் உள்ளே...

நாம் இந்த உலகத்திற்கு வருவதற்குமுன் கொஞ்சநாள் ஒரு இடத்தில் தங்கி இருந்தோமே அந்த இடம் உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? அது தான் கருப்பை. பத்து மாதம் அங்கு தான் இருந்திருக்கிறோம். இருந்தாலும் அங்கே என்ன நடக்கிறது என்பதைப்பற்றி யாருக்காவது நினைவிருக்கிறதா? நிச்சயமாக இருக்காது.

இப்போது கேளா ஒலி வரைவுகள் மூலமாக அங்கு நடப்பதெல்லாம் விபரமாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

கருப்பைக்குள் இருக்கும் குழந்தை கொட்டாவி விடுகிறது. விரல்களைச் சப்புகிறது.கைக்கு எட்டுவதை பிடிக்கிறது. சோம்பல் முறிக்கிறது! கொட்டக் கொட்ட விழிக்கிறது!

இவை அனைத்தையும் ஒரு டெலிவிஷன் திரையில் பார்க்க முடிகிறது. அந்த அளவுக்கு விஞ்ஞானம் வளர்ச்சி கண்டுள்ளது.

கருப்பைக்குள் ஒரு திரவத்துக்குள் மிதந்து கொண்டிருக்கும் குழந்தை கொட்டாவி விட்டுக்கொண்டே கை,கால்களை உதைக்கிறது! கைகளை நீட்டி தொப்புள் கொடியை பிடிக்கிறது! அதனுடன் கொஞ்ச நேரம் விளையாடுகிறது. அதற்குப் பிறகு கைக்கட்டை விரலை வாயில் வைத்துக் கொண்டிருக்கிறது!

தாயின் இதயத் துடிப்பு, சமிபாட்டுப் பாதையில் ஏற்படும் சத்தங்கள் இதையெல்லாம் கேட்டுக் கொண்டோ? தாயின் குரலையும் உணர்ந்து அதைக் கவனிக்கிறது.

தாய் எழுந்து நடக்கும் போது கருப்பை நீரின் லேசான குழுக்கலில் மெய்மறந்து மறுபடியும் தூங்கிப்போகிறது! கருப்பைக்குள் மிகவும் அமைதியாக இருக்கிறது என்று எண்ணி விடாதீர்கள். ஒரு மைக் மூலமாக அங்கே உள்ள சத்தத்தை பதிவு செய்து பார்த்ததில்,

தாயின் இதயத்துடிப்பு, சுவாசம் மற்றும் வயிற்றிலிருந்தும் குடலிலிருந்தும் வரும் பலவிதமான சத்தங்கள், வெளி உலக சத்தம் எல்லாம் உள்ளே கேட்கிறதாம்! அதனால்தான் கருவுற்ற தாய்மார்கள் இருக்கும் அறையில் ரேடியோவும்- ரீ.வியும் அலறும் அளவுக்கு வைக்கக்கூடாது என்பார்கள். சத்தம் போட்டுக் கதைப்பதும், சண்டை போடுவதும் தவறு! சத்தமான இடங்களில் அவர்கள் இருக்கக் கூடாது.

கருப்பைக்குள் இருக்கும் சிசு வெளி உலகத்திற்கு வந்த பிறகு சந்திக்க வேண்டிய சூழ் நிலைகளுக்கு ஏற்ப உள்ளே அது தன்னை தயார்படுத்திக் கொள்கிறது.

சாதாரணமாக உள்ளே இருக்கும் குழந்தைக்கு பசியோ தாகமோ ஏற்படாது. ஆனாலும் தாயார் சாப்பிடும் ஆகாரத்தில் சத்துப் பற்றாக்குறை இருந்தால் குழந்தைக்கும் சத்துப் பற்றாக்குறை ஏற்படும்.

ஒரு சிசு கருப்பையில் இருக்கும் போது ஒரு குறிப்பிட்ட தாலாட்டுப் பாட்டைப் பாடிக்கொண்டே இருந்தால் அந்த பாட்டுக்கேற்ற வகையில் கை, கால்களை ஒரு குறிப்பிட்ட வகையில் ஆட்டக் கற்றுக் கொள்ளுமாம். குழந்தை பிறந்த பிறகு அதே பாட்டைப்பாடி அழும் குழந்தையை அமைதிப்படுத்தி விடலாமாம்.

இது வரைக்கும் மருத்துவர்கள் சொன்னதைப் பார்த்தோம். இனி நம் கதைக்கு வருவோம். குழந்தை வயிற்றில் இருக்கும் போது தாயார் தாலாட்டுப் பாடுவது தான் நல்லது. அப்போதுதான் அது சுகமாக காலை ஆட்டும். அப்பாக்கள் தாலாட்டுப் பாடினால் என்ன நடக்கும் தெரியுமா?

வயிற்றிலிருக்கும் போதே குழந்தை ஒரு தீர்மானத்துக்கு வந்துவிடும்.வெளியில் வந்த பிறகு காலாட்டுவதற்குப் பதிலாக உதைக்க ஆரம்பித்து விடும்.

ஒரு வீட்டில் தொட்டிலிலிருந்து குழந்தை சத்தம் போட்டு அலறிக் கொண்டிருந்தது. அப்பா தொட்டிலை ஆட்டிக் கொண்டிருந்தார். வெளியே போயிருந்த அம்மா திரும்பி வந்தார்.

“சும்மா தொட்டிலை ஆட்டிக் கொண்டிருக்கிறீர்களே! ஒரு தாலாட்டுப் பாடக்கூடாதா?” என்றார். அதற்கு, “நான் தாலாட்டுப்பாட ஆரம்பிச்ச பிறகுதானே தூங்கிக் கொண்டிருந்த குழந்தை இப்படி அலறவே ஆரம்பித்தது” என்றார் அப்பா.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# தமிழக மீனவர்களை விடுவிக்க உடன் நடவடிக்கை எடுங்கள்

## பா.ஜ.கட்சி வலியுறுத்தல்

(சென்னை)

இலங்கை சிறையிலுள்ள தமிழக மீனவர்களை உடனடியாக மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய மாநில அரசுகளை தமிழக பா.ஜனதா கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து பா.ஜனதா மாநில தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து கொலை வெறி தாக்குதலுக்கு ஆளாவதும் சிறைபிடிக்கப்படுவதும் வாடிக்கையாகிவிட்ட நிலையில் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக தமிழகத்தை சேர்ந்த 100 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு இலங்கை சிறையில் வாடி வருகிறார்கள்.

மத்திய மாநில அரசாங்கங்கள் உரிய நேரத்தில் அவர்களை மீட்க தகுந்த நடவடிக்கைகளை எடுக்கத் தவறியதன் காரணமாக நேற்று முன்தினம் அதிகாலை தமிழகத்தைச் சேர்ந்த 35 மீனவர்களை 4 படகுகளோடு இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இதுவரை தமிழகத்தின் வடக்கு கடலோர பகுதிகளில் மட்டுமே செயற்பாடுகளை முன்னெடுக்க இலங்கை கடற்படையினர் தற்போது முதன்முதலாக தமிழகத்தின் தெற்கு கடலோரப் பகுதியில் வைத்து மீனவர்களை கைது செய்து சென்றுள்ளனர் என்ற செய்தி இந்தியாவை அலட்சியப்படுத்தி அச்சுறுத்தும் செயலாக இலங்கை அரசின் துணிச்சலான முடிவினை காட்டுகிறது.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள கேட்டு இலங்கை அமைச்சர் பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்த நேரத்தில் கூட இலங்கை சிறைகளிலே வாடும் தமிழக மீனவர்களை விடுதலை செய்யும் படியான எந்த ஒரு கோரிக்கையும் மத்திய அரசாங்கத்தால் வைக்கப்படவில்லை.

இலங்கை இனப்படுகொலையின் போது இலங்கை இராணுவத்தால் ஈழத்தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட போர் குற்றச்செயல்களை விசாரிக்க ஐ.நா.வின் மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை தற்போது இலங்கையில் விசாரணை நடத்தி வரும் நிலையில் தமிழக மீனவர்களை கைது செய்திருப்பது இலங்கை ஐக்கிய நாடுகள் சபையைக் கூட அலட்சியப்படுத்தி இருப்பதை வெளிப்படுத்தியுள்ளது.

பொதுநலவாய நாடுகளில் தலைவர்கள் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளாது என்ற அறிவிப்பை வெளியிட வேண்டும். பிரதமர் மன்மோகன்சிங் மௌனத்தை கலைத்து கொமன் வெலத் மாநாடு குறித்த இந்தியாவின் நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும்.

மத்திய மாநில அரசுகள் உடனடி கவனம் செலுத்தி இலங்கையின் செயலுக்கு கண்டனம் தெரிவிப்பதோடு கைது செய்யப்பட்டுள்ள அனைத்து தமிழக மீனவர்களையும் உடனடியாக மீட்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தமிழக பா.ஜனதா கட்சியின் சார்பாக வலியுறுத்துகிறேன் என பொன்.ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார். (அ-2)

# வடமாகாணத்தின் தமிழ் இலக்கியப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் தமிழ் இலக்கிய பெருவிழா நடத்தப்படவுள்ளது.இத் தமிழ் இலக்கியப் பெருவிழா வித்தியானந்தாக் கல்லூரியில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம், இரண்டாம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

இரு தினங்களும் இரு பிரிவுகளாக நடைபெறவுள்ள இவ் விழாவில் காலையில் ஆய்வரங்கமும் மாலையில் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இவ்வாண்டுக்கான ஆய்வரங்கு இலங்கை தமிழ் இலக்கியங்களினூடாக மொழித்திறனும் இலக்கியப் பயில்வும் என்னும் கருப்பொருளில் நடைபெறவுள்ளது.இவ் ஆய்வரங்கில் 12 ஆய்வாளர்கள் தமது ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பிக்கவுள்ளனர்.

இந் நிகழ்வில் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு கலை நிகழ்வுகளும் மறுநாள் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தண்ணீரூற்று சி.சி.ரி.எம்.எஸ் பாடசாலை முன்றலில் இருந்து பண்பாட்டுப் பேரணி ஆரம்பமாகி வேட்புனைவாளர்கள், கலைஞர்கள், பாரம்பரிய நடனங்கள் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் ஊர்திகள் சகிதம் மண்டபத்தைச் சென்றடையவுள்ளது.

அன்றைய தினம் மாலை நிகழ்வில் வடமாகாணத்தின் உயரிய விருதான கௌரவ ஆளுநர் விருது 20 கலைஞர்களுக்கு வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது. அத்துடன் 2012 ஆம் ஆண்டின் சிறந்த இலக்கியப் படைப்புக்கான விருதை 10 இலக்கியவாதிகள் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

மேலும் இந்நிகழ்வில் வடமாகாண கலை பண்பாட்டுப் பாரம்பரியங்களை பிரதிபலிக்கும் பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 - 150 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 80 | 100 |
| தக்காளி | 60 | 40 | 60 | 80 |
| மரவள்ளிக் கிழங்கு | 35 | 50 | 60 | 60 |
| கோவா | 50 | 70 | 80 | 80 |
| கரட் | 80 | 80 | 120 | 120 |
| பூசணி | 25 | 30 | 40 | 40 |
| புடோல் | 20 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 40 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 165 | 120 | 140-160 | 200 |
| பெரிய வெங்காயம் | 110 | 130 | 140 | 160 |
| பாகற்காய் | 40 | 80 | 40 | 80 |
| வெண்டிக்காய் | 20 | 40 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 80 | 80 |
| பயற்றங்காய் | 30 | 60 | 80 | 60 |
| லீக்ஸ் | 80 | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 15 | 30 | 40 | 40 |
| கறிமிளகாய் | 60 | 60 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 40 | 80 | 120 | 80 |
| போஞ்சி | 160 | 110 | 100 | 200 |
| கத்தரிதம்புள்ள | 20 | - | — | — |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 350 | 250 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 40-50 | 40 | 35-40 |
| இராசவள்ளி | 80 | 70 | 120 | 120 |

# இராசி பலன்

28.08.2013
(ஆவணி 12, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
அட்டமி முழுவதும்
கார்த்திகை பிற்பகல் 4.14 மணிவரை
இராகுகாலம் 12.05-1.35 மணிவரை
சுபநேரம் 4.35-6.05 மணிவரை
கிருஸ்ண ஜெயந்தி
ஜன்மாஷ்டமி

**மேடம்** விடியும் பொழுதே சுப செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட்கள் வாங்க எடுத்த முயற்சி வெற்றி தரும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும்.

**இடபம்** விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், கனிவாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

**மிதுனம்** அன்பு நண்பர்கள் சந்திப்பு இடம் பெறலாம், சுப செலவுகள் அதிகரிக்கும், சயன சுகக்குறைவான நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**கடகம்** வருமானம் அதிகரிக்கும் நாள், மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதாகச் செய்து முடிப்பீர்கள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள்.

**சிங்கம்** சந்தோசமான சம்பவங்கள் இடம்பெறலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பணியில் தீவிரம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள், போசன சுகமுண்டு.

**கன்னி** அதிகம் செலவாகும் என நினைத்த காரியம் ஒன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, மறைமுக எதிர்ப்புக்கள் மாறும்.

**துலாம்** சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, சேமிப்புக்கள் கரையக்கூடிய சூழ்நிலை உருவாகலாம், கூட்டாளிகளிடம் விழிப்புணர்ச்சி தேவை.

**விருச்சிகம்** திடீர் பயணம் தித்திக்க வைக்கும், தெய்வீக சிந்தனை மேலோங்கும், உடன்பிறப்புக்கள் உதவி செய்ய முன்வரலாம், பணத் தேவைகள் பூர்த்தியாகும்.

**தனுசு** அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், வியாபார விரோதம் விலகும், கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இனத்தார் பகை மாறும்.

**மகரம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், எதிர்கால முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்** நல்ல தகவல்கள் நாடி வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், ரோக பயமுண்டு, பிரயாண சுகமுண்டு.

**மீனம்** தொழில் முயற்சியில் எதிர்பார்த்த சில நல்ல திருப்பங்களைக் காணலாம், கௌரவமான நாள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம், பிரயாண சுகமுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் மன உணர்வை மதிப்பீடு செய்து நவிபிள்ளை அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்

## ம.தி.மு.க. செயலாளர் வைகோ அறிக்கை

நவநீதம்பிள்ளையின் பயணம் நீதியை வழங்குமா என உலகத் தமிழர்கள் எதிர்ப்பார்த்திருப்பதாக மதிமுக பொதுச் செயலர் வைகோ தெரிவிததுள்ளார்.இது குறித்து அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில கூறியிருப்பதாவது,

இலங்கை அரசு, ஈழத்தமிழர்கள் மீது நடத்திய இனப்படுகொலைத் தாக்குதல்கள், மனித உரிமைகள் அழிபபுக் குற்றங்கள் குறித்து, அனைத்து உலக மன்றத்தில் தமிழர்களுக்கு நீதி கிடைக்குமா? என்ற கேள்வி எழுந்துள்ள சூழலில், இலங்கையில்நேரடி ஆய்வு விசாரணை நடத்துவதற்காகச் சென்றுள்ள ஐ.நா. மனித உரிமைகள்ஆணையத்தின் தலைவர் திருமதி நவநீதம் பிள்ளையின் முயற்சியை வரவேற்கிறோம்.

இலங்கை அரசின் இனக் கொலைக் குற்றங்கள் குறித்து, துணிச்சலாகவும நேர்மையாகவும் கருத்துகளைக் கூறுகின்ற அம்மையாருக்கு, தமிழ்க் குலம் நன்றி கூறுகிறது. இலங்கை அரசின் தூண்டுதலால் எதிர்ப்பும் கண்டனமும் காட்டப்பட்டு வருகிறது. கடந்த கால நிகழ்வுகளைக் கணக்கில் கொண்டால், அவரது இப்போதைய பயணத்தாலும், தமிழர்களுக்கு, நீதி மறுக்கப்பட்டு விடுமோ? என்ற அச்சம் எழுகிறது.

2008 இல் இலங்கைப் பிரச்சினையைக் கண்காணிக்கின்ற ஐ.நா. குழுவில், மனித உரிமைகள் ஆணையத்தின் பிரதிநிதிகள் இடம்பெற வேண்டும் என்ற கோரிக்கை, ஐ.நா. பொதுச்செயலாளரின் ஆலோசகர் விஜய் நம்பியார் உள்ளிட்டவர்களால் நிராகரிக்கப்பட்டது.

ஐ.நா. விதிகளைப் பயன்படுததுவதற்குப் பதிலாக, 'இலங்கை அரசே விசாரணை நடத்த வேண்டும்' என்று, ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூன் கூறியது. தமிழர்களுக்குக் கிடைக்க வேண்டிய நீதியை மறுத்தது ஆகும்.

தமிழ் இனக்கொலை குறித்து, ஐ.நா.வில் நீதி இல்லை என்ற கண்டனம், பல நாடுகளில் எழுந்ததால், வேறு வழி இன்றி, பான கீ மூன், மார்சுகி தாருஸ்மான் தலைமையில், மூவர் குழுவை அமைத்தார். அந்தக் குழு, தமிழ் இனப் பேரழிவு குறித்த உண்மைகளை, உலகுக்குக்கூறியது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணையகத்தின் பரிந்துரைகளை செயறபடுத்த வேணடும் என ஜெனீவா மனித உரிமைக் குழுவில் ஒரு தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வந்தது கண்துடைப்பே ஆகும்.

இந்தப் பின்னணியில், நல்லிணக்க ஆணையகத்தின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கிறதா? என்கிற ஒற்றைக் குறிக்கோளுடன், நவநீதம்பிள்ளையின் பயணம் அமையும் என்றால், அது தமிழர்களுக்கு எவ்விதத்திலும் நீதியை வழங்காது. தமிழர்களால் முற்றிலும் நிராகரிக்கப்படும் என்பதை கனத்த இதயத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எனவே, ஐ.நா.வின் மனித உரிமைகள் ஆணையர், தமிழர்களின் பிரதிநிதிகள், போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் உள்ளிட்ட பொதுமக்கள், நிலங்களை இழந்தவர்கள், காணாமற் போனவர்களின் உறவினர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோரையும் யுத்தத்தில் தமிழ்ப் பெண்களுக்கு ஏற்பட்ட கொடுமைகள் குறித்துப் பதிவு செய்ய விரும்பும் மகளிர் பிரதிநிதிகளையும் நேரடியாகச் சந்திக்க வேண்டும் என்று, துயரத்தில் தவிக்கும் தமிழர்கள் சார்பில் வேண்டுகிறேன்.

இது ஒன்றுதான், குறைந்த பட்ச நேர்மையான விசாரணைக்கான நடவடிக்கை ஆகும் என்பதை நவநீதம் பிள்ளை நன்கு அறிவார்.

நீதிக்கான பாதையை, நவநீதம் பிள்ளை அம்மையார் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என, ஈழத்தமிழர்களும், உலகெங்கும் உள்ள தமிழர்களும், மனித உரிமை ஆர்வலர்களும் எதிர்பார்க்கிறார்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில், அதிகளவான இலங்கை இராணுவத்தினர் இருப்பது தமிழர் பகுதிகளைச் சிங்களமயமாக்குதல், சிங்களச் சிறைகளில் சித்திரவதைக்கு உள்ளாக கபபட்ட தமிழர்கள், கொல்லப்பட்டவர்கள், காணாமற் போனவர்கள் குறித்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையும் தமிழர் தாயகத்தில் நிலை கொண்டு உள்ள இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும் என்பதையும் உலகுக்குத் தெரியப்படுத்திட, மனித உரிமைகள் ஆணையர் முன்வர வேண்டுகிறேன்.

மாணவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள், இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதைத் தடுக்கும் இராணுவ அடக்குமுறைகள், இறந்தவர்களின் கல்லறைகளையும், புதைகபப்பட்ட இடங்களையும் அழித்து, அங்கே இராணுவத்துக்கான கட்டடங்களைக் கட்டுதல், வெற்றித் தூண்களை நிறுவுதல், யுத்த அருங் காட்சியகம் அமைத்தல், தமிழர் மடிந்த பகுதிகளில் கேளிக்கை விடுதிகள் கட்டுதல், இவை அனைத்தையும் குறித்து விசாரணை நடத்த, மனித உரிமை ஆணையர், உலகுக்கு அறிக்கை தர வேண்டுகிறேன்.

தங்கள் தாயக விடுதலைக்காக, இனக்கொலைக் களத்தில் பலியான ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 679 தமிழர்களையும் நெஞ்சில் நிறுத்தி, தமிழ் ஈழத்தின் விடுதலைக்கான, பொது வாக்கெடுப்பை நடத்துவதற்கும் இலங்கை அரசு மீது, இனப படுகொலைக்கான விசாரணையை, ஐ.நா. மன்றமும், அனைத்து உலக நாடுகளும் மேற்கொள்வதற்கும், நீதியின் வெளிச்சம் தமிழர்களுக்கு நிரந்தரமாகக் கிடைப்பதற்கும், தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இப்போதைய பயணத்தின்மூலம், மனித உரிமைகள் ஆணையர் நவநீதம்பிள்ளை நிறை வேற்றிட வேணடும் எனக் கேட்டுக் கொள்கின்றேன் என அந்தக் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# நல்லூர் ஆலய சூழலில்...

நல்லூர் முருகன் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு மாலை 6.45 மணி முதல் 8.15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. இதற்கமைய இன்று புதன்கிழமை திருமதி யசோதா ஸ்ரீகுமரன், திருமதி கவிதா தில்லைராசா ஆகியோரின் இசையரங்கம் இடம்பெறும். இந்நிகழ்வில் அணிசெய்கலைஞர்களாக வயலின் திருமதி எம்.பிரவீணா, மிருதங்கம் என்.மாதவன், முகர்சிங் எஸ்.தில்லைராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீக சிந்தனை, சமய சொற்பொழிவு, கலை நிகழ்வுகள் என்பன பிற்பகல் 3 மணி முதல் 6 மணி வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. இந்நிகழ்வில் இன்று புதன்கிழமை பு.சந்திரவேல் வழங்கும் **பகவத்கீதை காட்டும் வாழ்வியல்** என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவு இடம்பெறும். தொடர்ந்து மல்லாகம் பழம்பதி அறநெறிப் பாடசாலை, நீர்வேலி ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலை, அச்செழு மதுரை மீனாட்சி அம்மன் அறநெறிப் பாடசாலை, வல்வெட்டித்துறை வல்லை ஸ்ரீ முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.


நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு சைவத் தமிழ் பண்பாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் தெய்வீகப் பேருரை, கலை நிகழ்வு, மாணவர் சொற்பொழிவு, கலைஞர் கௌரவிப்பு நிகழ்வுகள் என்பன பிற்பகல் 6.30 மணி முதல் இரவு 8 மணி வரை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராஜா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் நடைபெறும். இதன்படி இன்று புதன்கிழமை சிவத்திரு எஸ்.கே.என்.தவராசா வழங்கும் ஆலயமும் ஆன்மீகமும் என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவு இடம்பெறும்.

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு சர்வதேச இந்துகுருமார் ஒன்றியத்தின் ப்ரம்மகான சபா நடத்தும் தெய்வீக இசைச் சங்கமம் நிகழ்வு மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீன புதிய மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. இதன்படி இன்று நல்லூர் கலா வித்தகர் திருமதி குமுதா உமாகாந்தன் வழங்கும் வீணை இசைக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு மாலை 7.15 மணி தொடக்கம் 7.45 மணி வரையும் யாழ்.சின்மயா மிஷன் ஆச்சிரம வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் சொற்பொழிவு ஆற்றி வருகின்றார். இந் நிகழ்வில் இன்று புதன்கிழமை **இறை நாம மகிமை** என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதா வாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா வழங்கும் **பாரதவம்சம்** பற்றிய இசைப் பேருரை பக்கவாத்திய சகிதம் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் இன்று புதன்கிழமை **சுபத்திரை கல்யாணம்** என்னும் விடயப் பொருளிலான இசைப் பேருரை இடம்பெறவுள்ளது.

# நல்லூரான் திருவடிக்கு பதினேழாம் திருவிழா



## நல்லூர் முருகா தெய்வ செங்கோல் ஆட்சிஅருளே!

யாழ்ப்பாணம் நல்லூரின் அருள்வேல்- நல்லூர் முருகா
யாமிருக்க பயம்ஏன் என்பாய்
பாழ்போன தமிழரும் வாழ அருள்-நல்லூர் முருகா
பாவியரும் திருந்திடவே காத்தருளே
வாழ்வாதாரம் இல்லாத ஈழத்திலே-நல்லூர் முருகா
வாழ்வாங்கு நிதம்வாழ வைத்துவிடு
கூழ் இல்லா வறியோரும் மாட்சிபெறவே-நல்லூர் முருகா
கந்தவேல் செங்கோல் ஆட்சிஅருளே!

எஸ்.என்.தமிழ்மகன் நந்தகுமார் பீ.ஏ.
நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதி, நல்லூர்.

## தங்கம யில்மீதி லிருந் தருள்வாயே

சங்கர னார்தந்த சடாட் சரனே
மங்கள நல்லூர்மே வியசண் முகனே
பங்கமே துமினி யெமக்கு வராமலே
தங்கம யில்மீதி லிருள் தருள்வாயே

சுந்தர வடிவேலா சூரனை தடிந்தோனே
மந்திர வடிவோனே மாயன்தன் மருகோனே
இந்திரன் மகளின் இனிய மணாளனே
சுந்தர கோவிலில் தோன்றிடுநல் லூரானே

கலைஞர் பா.பாலச்சந்திரன்
ஷண்முக பவளம்,மயிலணி, சுன்னாகம்.

## அடியார்கள் குறை தீர்ப்பவன் நீ!

அழகின் வடிவமே முருகா நீ ஆதி சக்தியின் குழந்தை நீ
சூரனை அழித்த சுப்ரமணியன் நீ தந்தைக்கு உபதேசம் செய்தவன் நீ
சரவணப் பொய்கையில்வந்தவன் நீ சுந்தர நல்லூரில் இருப்பவன் நீ
சேவற் கொடியுடை சண்முகன் நீ வந்திடும் அடியார் குறை தீர்ப்பவன் நீ!

செ.பரத்கிருஷ்ணா,
அரியாலை.

## நல்லூரை நீ நாடு

நல்லூர் பதியினை நீ நாடு-மன
நல்நிலை பதிந்திடும் நீ நம்பு
முருகா என்று சுற்றிவிடு-உன்
மனச் சோர்வே ஓடிடும் நீ சுற்று

படியேறும் வேதனையைத் துரத்திவிடு-முருகன்
பாலகன்ன உன் நெஞ்சில் பதித்துவிடு
குருபர மூர்த்தி என்று வணங்கிவிடு -அவன்
குருவாகி போதிப்பதை ஏற்றுவிடு

எல்லையில்லா அன்பே என்றுவிடு-உன்
இதயத்தில் நுழைவான் பார்த்துவிடு
வெள்ளை மனத்தோடு அழைத்துவிடு-முருகா
என்றதும் முன்னுதிப்பான் கண்டுவிடு

மலர் சின்னையா
நல்லூர்.

## நல்லூர் கந்தன் அநுபூதி

இன்னற் படுமென் னிதயந் தனிலே
இன்பத் தொடுநிம் மதிகள் மருவத்
துன்பத் திடர்கள் துயர்கள் களையும்
அன்புச் சுடர்சண் முகநல் லூரா!

கலாபூஷணம், சந்தக் கவிஞர். நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகன தரிப்பிடத்திற்குள்
# உத்தியோகத்தர்களின் பொதுக்கூட்டம் நிறைவு

(காரைநகர்)

சமுர்த்தி அபிவிருத்தி உத்யோகத்தர் சங்கப் பொதுக்கூட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட நல்லூர் பிரதேச செயலக மண்படத்தில் தீடீரென அனுமதி மறுக்கப்பட்டதனால், நல்லூர் பிரதேச செயலக சைக்கிள் நிறுத்தம் கொட்டகைக்குள்ளும், வேப்பமர நிழலிலும் பொதுக் கூட்டத்தை நடத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டதாக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் நல்லூர் பிரதேச செயலகத்தில் மேற்படி பொதுக் கூட்டம் நடத்துவதற்கு யாழ்.மாவட்ட செயலகத்தினூடாக அனுமதி பெறப்பட்ட போதிலும் இறுதி நேரத்தில் அனுமதி தரமுடியாது எனவும் நல்லூர் பிரதேச செயலக தேநீர்ச்சாலைக் கட்டடத்தை குறித்த பொதுக் கூட்டத்திற்கு பயன்படுத்துமாறு பிரதேச செயலாளரினால் கூறப்பட்டது.

இந்நிலையில் அக்கட்டடம் பொதுக் கூட்டத்திற்கு போதாமையினால் நல்லூர் பிரதேச செயலக துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையத்திற்குள்ளும் வேப்பமர நிழலிலும் பொதுக் கூட்டம் கூட்டப்பட்டு நிறைவடைந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கருத்து வெளியிடுகையில், அகில இலங்கை ரீதியாக வறுமை ஒழிப்பில் முக்கிய பங்காற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளின் முடக்கும் செயலாகவே இது கருதப்படுவதாகவும் இம் மண்டபத்தை வழங்க முடியாது என முன்னறிவித்தல் வழங்கியிருந்தால் தாம் வேறு மண்டபத்தை தெரிவு செய்து கூட்டத்தை நடத்தியிருக்கலாமெனவும் தெரிவித்தனர். (அ-9-60-246)

# முறிந்த மின் கம்பம் மாற்றப்படுமா?

(கரணவாய்)

கரணவாய் கிழக்கு காவில் வீதியிலுள்ள மின் கம்பம் முறிந்து ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது.

இரண்டு வாரங்களுக்கு மேலாக முறிந்து விழும் நிலையிலுள்ள மின் கம்பம் மாற்றப்படாமல் உள்ளதால் ஆபத்தான சம்பவம் இடம்பெற வாய்ப்புக்கள் உள்ளன.

இவ்வாறாக முறிந்த நிலையில் காணப்படும் இம்மின் கம்பத்தை கம்பிகளே தாங்கி நிற்கின்றன.



தற்போதும் இக்கம்பத்தினூடாகவே மின் சாரம் வழங்கப்பட்டு வருவதனால் இக்கம்பத்தை மாற்றியமைக்க மின்சார சபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-60)

# சிந்தாத்திரை மாதா ஆலய கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

சாட்டி புனித சிந்தாத்திரை மாதா திரு விழா எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 5 ஆம்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நவநாள் வழிபாடுகள் நடைபெறும். தினமும் நவநாள் வழிபாடுகள் மாலை 4.30 மணிக்கு திருச் செப மாலையுடன் ஆரம்பமாகும்.


எதிர்வரும் 13 ஆம் திகதி காலை 9 மணிக்கு நற்கருணைத் திருவிழாத் திருப்பலி இடம் பெற்று அதனைத் தொடர்ந்து நற்கருணை ஆராதனை இடம் பெறும். அன்றைய தினம் பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை குணமாக்கல் வழிபாடு நடைபெற்று மாலை 5 மணிக்கு நற்கருணை வழிபாடும் பவனியும் இடம்பெறும். எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 7 மணிக்கு யாழ்.மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் திருவிழாத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். (அ-2)

# வினாத்தாள் திருத்தும் பணிக்காக பாடசாலை மூடப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் திருத்தும் பணிகள் நடைபெறவுள்ளதால் பாடசாலை மூன்றாம் தவணைக்காக எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும் என பாடசாலை அதிபர் எஸ். சேதுராஜா அறிவித்துள்ளார்.

எனினும் தரம் 11 மாணவர்களுக்கான வகுப்புக்கள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி ஆரம்ப மாகவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-7)




# நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட நபர்கள் தொடர்பு கொள்க

மாற்று சிறுநீரகம் பொருத்தப்பட்டவர்கள், பொருத்தப்பட வேண்டிய நிலையில் உள்ளவர்கள் மற்றும் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டு 4ஆவது, 5ஆவது நிலையில் உள்ளவர்களுக்கு மருந்துகளைப் பெற்றுக் கொள்ள மாதாந்தம் 500 ரூபா வீதம் பணத்தொகை வழங்கப்படவுள்ளது.

மேற்படி நிலையில் உள்ளவர்கள் அரச வைத்தியசாலையில் வழங்கப்படும் மருத்துவ அத்தாட்சி பத்திரத்தையும் மருந்துகள் தனியார் மருந்தகங்களில் பெற்றிருந்தால் அதற்கான சான்றுகளையும் சமூக சேவைத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்க வேண்டும்.

எனவே குறித்த நோயாளர்களை கரவெட்டி பிரதேச செயலகத்திலுள்ள சமூக சேவைத் திணைக்களத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலர் எஸ்.சிவசிறி அறிவித்துள்ளார். (அ-9-60)

# மாற்றுத்திறனாளிகளுக்கான உதவுதொகை அதிகரிப்பு

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்த உதவித்தொகை அதிகரிக்கப்படவுள்ளது.

மகிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த மாதாந்த உதவித் தொகை தற்போது மூவாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

எனவே வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகளில் ஒருவருக்கு மட்டுமே இவ் உதவித் தொகை வழங்கப்படவுள்ளது.

இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதவர்களை கரவெட்டி பிரதேச செயலகத்திலுள்ள சமூக சேவைத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலர் எஸ்.சிவசிறி அறிவித்துள்ளார். (அ- 9-60)

# தேர்தல் காலங்களில் இணைப்பு அலுவலகம்

(தும்பளை)

வடமாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு தேர்தல் ஆணையாளரின் பி.சி.ஈ./2013/6 ஆம் இலக்க கடிதத்திற்கு அமைய பிரதேச செயலகங்கள் தோறும் தேர்தல் காலங்களில் விசேட இணைப்பு அலுவலகம் ஒன்று பேணப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் விசேட அலுவலகத்தில் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் 1, நிர்வாக கிராம அலுவலர் 1, சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் 1, எழுதுநர் 1, அலுவலக பணியாளர் 1 ஆகிய அலுவலர் உள்ளடங்க இவ் அலுவலகம் அமையப்பட வேண்டும் என யாழ். மாவட்ட பிரதி தேர்தல்கள் ஆணையாளர் எஸ்.அச்சுதன் தெரிவித்துள்ளார். (அ-19)






ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் யாழ்.மாவட்ட விஜயத்தின் போது...

(படங்கள்:- உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவநீதம்பிள்ளையின் அறிக்கைக்காக உலக தமிழினம் காத்திருக்கின்றது

## செந்தமிழன் சீமான் அறிக்கை



(சென்னை)

**இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் வாழ்க்கை நிலையை நேரில் கண்டறிவதற்காக அந்நாட்டிற்கு வருகை தந்துள்ள ஐ.நா.மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையை வெளி யேறக்கோரி பௌத்த பிக்குகள் நடத்தியுள்ள போராட்டமானது அரசியலின் முகத்தை அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளது. ராவண பலயா என்ற அமைப்பின் பின்னால் இருப்பது இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசுதான் என்பது இலங்கை அரசியலை புரிந்தவர்கள் நன்கு அறிவார்கள்.**

கொழும்பிலுள்ள ஐ.நா. தூதரக அலுவலகத்திற்குள் இந்த அமைப்பைச் சேர்ந்த பௌத்த பிக்குகளும் சிங்கள இனத்தவர்களும் உள்ளே புகுந்து வன்முறை வெறியாட்டத்தை நிகழ்த்த முயன்றுள்ளனர்.

எப்போதெல்லாம் தமிழர்களுக்கு நியாயம் வழங்கும் நிலை உருவாகிறதோ அப்போதெல்லாம் இப்படிப்பட்ட சக்திகள்தான் போராட்டத்தையும் வன்முறையையும் கட்ட விழ்த்து வந்துள்ளன என்பதே இலங்கையின் அரசியல் வரலாறாகும்.

இப்போது இப்படிப்பட்ட போராட்டத்தை பௌத்த பிக்குகள் நடத்துவதற்கு காரணம், நவிபிள்ளையின் பயணம். இவர்கள் இதுவரை சர்வதேசத்திற்கு காட்டாமல் மறைத்து வரும் தமிழின அழித்தல் இரகசியங்கள் எங்கே வெளிப்பட்டு விடுமோ என்கிற அச்சமே.

இலங்கையை பொறுத்தவரை இப்படிப்பட்ட பௌத்த சக்திகளே அந்நாட்டு அரசியலின் போக்கை நிர்ணயிக்கின்றன என்பதை ஐ.நா. மனிதவுரிமை ஆணையாளர் புரிந்து கொள்ள வேண்டும்.

நவநீதம்பிள்ளையை திசை திருப்பும் மற்றொரு செய்தியும் வெளியாகியுள்ளது. அதாவது யாழ்ப்பாணத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் இராணுவப் படைகள் இருந்த முகாம்கள் அகற்றப்பட்டு அங்கு மக்கள் குடியேற வழி செய்யப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ளது. இது அப்பட்ட மான பொய்ப்பரப்புரையா கும்.

யாழ்ப்பாணத்திற்கு பயணம் மேற்கொண்ட நவநீதம்பிள்ளை வலிகாமம் பகுதிக்குச் சென்றால், தமிழ் மக்களை தங்கள் வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றும் இப்படிப்பட்ட நடவடிக்கைகளை பற்றி தமிழ் மக்கள் ஏராளமான தகவல்களைத் தருவார்கள்.

மக்கள் வாழும் பகுதிகளிலுள்ள சிறிய இராணுவ முகாம்களை மூட வேண்டும் என்று இலங்கை ஜனாதிபதி கற்ற பாடங்களும் இணக்கப் பாடும் ஆணையம் கொடுத்த பரிந்துரைகளைக் கூட இலங்கை அரசு நிறைவேற்றவில்லை எனும் உண்மையை நவநீதம்பிள்ளை கண்கூடாகக் காணலாம்.

இறுதிக்கட்ட போர் நடத்தப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு உள்ளிட்ட இடங்களில் நவநீதம் பிள்ளை நேரில் சென்று மக்களை சந்திப்பது என்பது மிகுந்த ஆறுதலாக உள்ளது.

தங்கள் குடும்பத் தலைவரையும் இளம் பிள்ளைகளையும் பெற்ற குழந்தைகளையும் பலிகொடுத்து விட்டுநிற்கும் அப்பகுதி மக்கள் கூறப் போகும் உண்மைகளே, அங்கு தமிழினம் திட்டமிட்டு இன அழித்தலுக்கு உள்ளாக்கப்பட்டதையும் தமிழர் பகுதிகளில் சிங்கள குடியேற்றம் செய்யப்பட்டிருப்பதையும் தமிழர் நகரங்களின் பெயர்கள் சிங்கள பெயர்களாக மாற்றப்படிருப்பதையும் காணும் வாய்ப்பு அவருக்கு கிடைக்கும்.

போருக்குப் பின்னர் தமிழர்களின் பூர்வீக மண்ணில் ஒரு திட்டமிடப்பட்ட இன அழித்தல் தொடர்வதை உறுதி செய்யும் சான்றுகள் பலவும் கிட்டும்.

அதனடிப்படையில் நவிபிள்ளை கொடுக்கப்போகும் அறிக்கையே உலகத் தமிழினம் எதிர்பார்க்கும் நியாயத்தை வழங்கக்கூடிய சுதந்திரமான சர்வதேச விசாரணைக்கு வழி கோலும். எனவே உலகத் தமிழினம் நவிபிள்ளையின் பயணத்தை மிகுந்த எதிர்பார்ப்புடன் உற்று நோக்குகிறது. (அ-2)



தெஹிவளை வை.எம்.சி.ஏ.யின் ஏற்பாட்டில் மாற்றுத் திறனாளிகளின் கலை நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது...

# மோப்ப நாய்களுக்கு திருமணம்; கலாசாரத்தை சீரழிக்கும் செயல்

## விசாரணை நடத்த கோருகிறது கலாசார அமைச்சு

(கண்டி)

கண்டியில் கலாசாரப் பெருமை மிக்க மணப்பந்தலில் மோப்ப நாய்களுக்கு திருமணம் செய்து வைத்துள்ளமை கலாசார விழுமியங்களை அவமதிக்கும் செயல் எனவும் இத்தகைய கலாசார சீர்கேடான நிகழ்வு தொடர்பில் விசாரணை நடத்தி உடனடியாக தமக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு கலாசார அமைச்சர் டி.பி. ஏக்கநாயக்க பொலிஸ்மா அதிபரை பணித்துள்ளார்.

பாரம்பரிய பெருமை மிக்க மணப்பந்தலில் நாய்களுக்குத் திருமணம் செய்து வைக்கப்பட்டமை தொடர்பில் நாம் மிகுந்த வேதனையடைவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனை நாம் முற்றாக நிராகரிப்பதாகவும் இது தொடர்பில் பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கையின் தேசிய கலாசார சொத்தான பாரம்பரிய மணப் பந்தல் இதன் மூலம் கேலிக்குட்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள அமைச்சர், இது போன்ற சம்பவங்கள் எதிர்வரும் காலங்களில் இடம்பெறாதிருக்க உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமெனவும் அவர் பொலிஸ்மா அதிபரைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

வெளிநாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ள மூன்று சோடி நாய்களுக்குத் திருமணம் செய்து அது பதியப்பட்டு பின்னர் கலாசார பெருமை மிக்க மணப்பந்தலில் ஏற்றி வைத்து அவற்றுக்கு திருமண சடங்குகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இச் சம்பவம் கண்டி பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் இடம் பெற்றுள்ளது.

இதனையடுத்து திருமணத்திற்கு அலங்கரிக்கப்பட்ட வாகனமாக பொலிஸ் ஜீப் வண்டி ஒழுங் கமைக்கப்பட்டு நாய் ஜோடிகள் அதில் ஏற்றப்பட்டு ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டுள்ளன. இந்த பொலிஸ் ஜீப் வண்டியை பொலிஸ் நாய் ஒன்றே செலுத்தி யுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மனிதர்களுக்கு நடத்திவைப்பதை போன்று நாய்களுக்கும் திருமணம் செய்து வைப்பது சிங்கள மக்களை புண்படுத்தும் செயல் என்று சிஹல ராவய குற்றம் சுமத்தியுள்ளது.

இந்தச் சம்பவத்துக்கு எதிராக சிஹல ராவய இன்று புதன்கிழமையன்று பொலிஸ் தலைமையகம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்தச் சம்பவத்துக்காக பொலிஸார் பகிரங்க மன்னிப்பு கோரவுள்ளதாக சிஹல ராவய குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# தனது தம்பிக்காக புலமைப்பரிசில் பரீட்சையை தவறவிட்ட அக்கா

தனது தம்பிக்காக ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையை அவரது அக்கா தவறவிட்ட சம்பவம் ஒன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடா பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

நடைபெற்று முடிவடைந்த ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சைக்கு தோற்றாமல் வீடுகளில் மறைந்திருந்தாகக் கூறப்படும் 7 மாணவர்களை பொலிஸார் அழைத்துச் சென்று பரீட்சை நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடா பொலிஸ் பிரிவிலேயே இந்தச் சம்பவங்கள் பரீட்சை தினமான நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது என்று கல்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

கல்குடா நாமகள் வித்தியாலயத்தில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது மாணவர்கள் சிலர் பரீட்சை நிலையத்திற்கு சமுகமளிக்காத நிலைமை காணப்பட்டது.

இது தொடர்பில் பரீட்சை நிலையத்திற்கு பொறுப்பான அதிகாரி ஒருவர் பாதுகாப்புக்கடமைக்கு வந்த பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டு வந்தார். இதனைத் தொடர்ந்து கல்குடா பொலிஸார் இப்பகுதி சிவில் பாதுகாப்பு குழுக்களின் உதவியுடன் இந்த மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களை பரீட்சை நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இது இவ்வாறிருக்க, ஒரு வீட்டில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவி ஒருவர் தனது தாய் வீட்டில் இல்லாததன் காரணமாகத்தானே தனது இளைய தம்பியை பாராமரித்துக் கொண்டிருந்தார்.

இந்நிலையில் பொலிஸார் இந்தச் சிறுமியை மாத்திரம் விட்டு விட்டு ஏனைய 7 மாணவர்களையும் பரீட்சை நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர். (அ-2)

# தங்கம் கடத்த முயன்றவர் கட்டுநாயக்கவில் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுமார் 30 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக விமான நிலைய சுங்க அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட குறித்த நபரிடமிருந்து 600 கிராம் எடையுடைய தங்க நகைகள் நேற்றுமுன்தினம் இரவு கைப்பற்றப்பட்டதாக தெரிவித்துள்ளனர்.

நீர்கொழும்பைச் சேர்ந்த குறித்த நபர் இந்தியாவின் மும்பை நோக்கி பயணிக்கவிருந்த நிலையிலே கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக விமான நிலைய சுங்கப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

559

## இனாமாகக் கிடைத்த குதிரை



நிற்கவே முடியவில்லை. அதன் ஒரு கண் குருடாக இருந்தது. அதன் பின்னங் கால்கள் இரண்டும் வளைந்து இருந்தன. ஒன்றோடு ஒன்று முட்டிக் கொண்டு நின்றன. அதன் முன்னங் கால்களில் ஒன்று உடைந்து இருந்தது. நடக்கவே முடியாத நொண்டிக் குதிரையாக அது இருந்தது.

குருவும் சீடர்களும் அந்தக் குதிரையைச் சுற்றி வந்து பார்த்தார்கள். அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

"குருவே! உங்கள் தவ வலிமையை யாரால் சொல்ல முடியும்? அதனால் தான் எந்த முயற்சியும் இல்லாமல் குதிரை கிடைத்தது. எங்களுக்கும் அருளாசி வழங்குங்கள் என்று பணி வன்புடன் வேண்டினான் மூடன்.

"நம் எண்ணம் நிறைவேறியது. குருவிற்குக் குதிரை கிடைத்து விட்டது. இனி அவர் நடந்து செல்ல வேண்டாம். சேணம் இருந்தால்தானே குதிரையை ஓட்ட முடியும்" என்று கேட்டான் மடையன். உழவன் தன்னிடமிருந்த பழைய சேணத்தை அவர்களிடம் தந்தான்.

குருவின் புலம்பலைக்கேட்டான் அந்த உழவன். அவர் மீது இரக்கப் பட்டான். "குருவே! வீட்டில் கிழட்டுக் குதிரை ஒன்று உள்ளது. அதை உங்களுக்கு இனாமாகத் தருகிறேன். என் ஊர் அருகில்தான் உள்ளது வாருங்கள்" என்று அன்புடன் அழைத்தான். அவனுடன் குருவும் சீடர்களும் சென்றார்கள். அந்த ஊர் மக்கள் பராமார்த்த குரு வந்திருப்பதை அறிந்தார்கள். காணிக்கைப் பொருள்களுடன் வந்து அவரை வணங்கினார்கள். மகிழ்ந்த அவர் எல்லோர்க்கும் ஆசி வழங்கினார்.

அன்றிரவு அவரும் சீடர்களும் அந்த ஊரிலேயே தங்கினார்கள். பொழுது விடிந்தது. தன் குதிரையை இழுத்து வந்தான் உழவன். "குருவே! இந்தக் குதிரையை என் காணிக்கையாக ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று வேண்டினான். கிழட்டுக் குதிரையாக அது இருந்தது. அதனால்

கடிவாளத்திற்கு என்ன செய்வது என்று சிந்தித்தான் மிலேச்சன். அருகில் இருந்த மரத்தில் ஏறினான். அங்கே படர்ந்திருந்த கொடிகளை அறுத்தான். "இவற்றைக் கடிவாளமாகப் பயன்படுத்தாலாம்" என்றான்.

மற்ற சீடர்கள் அந்தக் கொடிகளைக் கயிறு போலத் திரிந்தார்கள். சேணத்தில் அதைக் கடிவாளமாகக் கட்டினார்கள். பிறகு குதிரையின் தலையில் சேணத்தை மாட்டினார்கள்.

சவாரிக்கு தயாராகக் குதிரை இருப்பதைச் சீடர்கள் கண்டார்கள். மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள். பயணம் புறப்படத் தயாரானார் பரமார்த்தகுரு. ஊர் மக்கள் எல்லோரும் வழி அனுப்ப வந்திருந்தார்கள். குருவின் அருகே குதிரையைக் கொண்டு வந்தார்கள் சீடர்கள். அவரைத் தூக்கிக் குதிரையின் மேல் அமர வைத்தார்கள். "பரமார்த்தகுரு வாழ்க" என்று சீடர்கள் முழக்கம் செய்தார்கள்.

குதிரையோ அந்த இடத்தை விட்டு அசையவே இல்லை. என்ன செய்வது என்று குழம்பினார்கள் சீடர்கள். ஐவரும் ஒன்று சேர்ந்து பேசினார்கள்.

குதிரையின் முன்னால் சென்ற மூடன் கடிவாளத்தைப் பிடித்து இழுத்தான். குதிரையின் இரண்டு பக்கமும் மட்டியும் மடையனும் நின்றார்கள். அதைத் தள்ளினார்கள். குதிரையின் பின்னாலிருந்து பேதையும் மிலேச்சனும் தள்ளினார்கள். குதிரை மெல்ல நடக்கத் தொடங்கியது. இப்படியே ஐவரும் தள்ள குதிரை அசைந்து அசைந்து சென்றது. நன்பகல் நேரம் வந்தது. குதிரையின் வாயில் நுரை தள்ளத் தொடங்கியது. இதைப் பார்த்த சீடர்கள் "குருவே! ஓய்வு எடுத்துக் கொள்ளலாம்" என்றார்கள். "சரி" என்றார் குரு.

அருகிலிருந்த பெரிய மரத்தின் நிழலில் குதிரையை நிறுத்தினார்கள். குருவைக் கீழே இறக்கினார்கள்.

குருவும் சீடர்களும் அங்கே ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார்கள். முரடன் போலத் தோற்றமளித்த ஒருவன் அங்கு வந்தான். ஒரு கையில் பையும் இன்னொரு கையில் பிரம்பும் வைத்திருந்தான். அவர்களை வணங்கினான். "என்ன? என்று கேட்டார் குரு. "ஐயா! வரி வசூலிப்பவன் நான். இந்த வழியாக வரும் ஆடு, மாடு, குதிரகளுக்கு வரி செலுத்த வேண்டும். இந்தக் குதிரைக்கான வரிப்பணத்தைத் தருகிறீர்களா?" என்று கேட்டான்.

"எவ்வளவு வரி?" என்று கேட்டான் மூடன். "ஐந்து காசு" என்றான் அவன்.

"என்ன? ஐந்து காசா வரி?" என்று அதிர்ச்சியுடன் கேட்டார் குரு. "ஆமாம்" என்றான் அவன். இந்தக் குதிரை கிழட்டுக்குதிரை. எனக்கு அன்பளிப்பாகக் கிடைத்தது. இதற்காவரி கேட்கிறாய். அதெல்லாம் எனக்குத் தெரியாது. வரி செலுத்தினால் தான் நீங்கள் இங்கிருந்து போகலாம்" என்று கண்டிப்புடன் சொன்னான் அவன்.

குருவும் சீடர்களும் கெஞ்சினார்கள். ஆனால் அவனோ மசிவதாக இல்லை. "எல்லாம் நம் தலைவிதி. இந்தக் குதிரை ஐந்து காசு பெறாது. இதற்கு ஐந்து காசு வரியா? இப்படி வரி வாங்கும் இந்த ஊர் நாசமாகப் போக" என்று சபித்தார். அவனிடம் ஐந்து காசுகளை எரிச்சலுடன் தந்தார். அவனும் அங்கிருந்து சென்றான். சீடர்கள் மீண்டும் குருவைக் குதிரையில் அமரவைத்தார்கள். குதிரையைத் தள்ளிக் கொண்டு புறப்பட்டாக்ள். அங்கு வந்த வழிப்போக்கன் ஒருவன் அவர்களுடன் சேர்ந்து கொண்டான். அந்த வழிப்போக்கனிடம் குரு, இனாமாகக் கிடைத்த இந்தக் குதிரையில் இன்று தான் ஏறினேன். குதிரைக்காக ஐந்து காசு வரி வாங்கிவிட்டான். குருவிடமே வசூலித்த அந்தப் பாவி நரகத்திற்குத்தான் போவான். குருவின் சாபம் பலிக்கும் என்று புலம்பினார்.

"குருவே! நாம் கலி காலத்தில் வாழ்கிறோம். இந்தக் காலத்தில் காசுக்கே மதிப்பு. குருவாக இருந்தா் என்ன? வரி வசூலிப்பவன் காசு வாங்காமல் விடுவானா?" என்று கேட்டான் அவன்.

"நீ சொல்வதும் சரிதான். இந்தக் காலத்தில் எல்லாம் அறிந்த குருவிற்கு மதிப்பு இல்லை. காசுக்குத்தான் மதிப்பு" என்று வேதனையுடன் சொன்னார் அவர். "குருவே! பணத்திற்கு உரியமதிப்பு எதற்கும் இல்லை. இதை விளக்க ஒரு கதை சொல்வாங்கள்." "என்ன கதை? சொல்" என்று ஆர்வத்துடன் கேட்டார் அவர்.

**பரமார்த்த குரு கதைகள்**

## வழிப்போக்கன் சொன்ன கதை



கதை என்றதும் சீடர்களும் ஆர்வத்துடன் வழிப்போக்கனைச் சூழ்ந்து நின்றார்கள். "குருவே! ஒரு நாட்டைக் கொடுமையான அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். மக்களைக் கசக்கிப் பிழிந்து வரி வாங்கினான். இதனால் அவன் கருவூலம் நிரம்பி வழிந்தது. இருந்தும் அவன் ஆசை அடங்கவில்லை. இன்னும் என்ன வரி விதிக்கலாம் என்று சிந்தித்தான். "எல்லா வரிகளும் போட்டாயிற்று. சிறுநீருக்கு வரி போடவில்லை" என்று நினைத்தான். சிறுநீர் கழித்தால் ஒரு காசு வரி செலுத்த வேண்டும். மீறுபவர்களுக்கு ஒரு மாத சிறைத்தண்டனை என்று நாடெங்கும் தெரிவித்தான் அவன். மக்கள் அழுது புலம்பிக் கொண்டே வரி செலுத்தினார்கள். சிறுநீருக்கு வரி போட்டது இளவரசனுக்குப் பிடிக்கவில்லை.

அரசனிடம் வந்த அவன், "தந்தையே! சிறுநீருக்கு வரி போட்டு இருக்கிறீர்களே? கேட்பதற்கே அருவருப்பாக உள்ளது. அந்த வரியை மட்டும் நீக்கி விடுங்கள் என்றான்.

அவனைக் கருவூல அறைக்கு அழைத்துச் சென்றான் அரசன். அங்கே ஓரிடத்தில் குவிக்கப்பட்டு இருந்த பொற்காசுகளைக் காட்டினான்.

"இந்தப் பொற்காசுகளுக்கும் ஏதேனும் வேறுபாடு உள்ளதா? இதில் ஒரு பொற்காசை எடுத்து முகர்ந்து பார். ஏதேனும் நாற்றம் ஏதும் வீசுகிறதா?" என்று கேட்டான். பொற்காசுகளை முகர்ந்து பார்த்த இளவரசன், "தந்தையே! இந்தப் பொற்காசுகளில் நாற்றம் ஏதும் வீசவில்லை" என்றான்.

"மகனே! நீ அருவருப்பானவரி என்று சொன்னாயே. அந்தச் சிறுநீர்வரியால் கிடைத்த பொற்காசுகள் இவை. நாய் விற்ற காசு குரைக்காது. இதை நீ புரிந்து கொள். நீயும் என்னைப்போல அரசன் ஆவாய். அப்பொழுது இது போலப்புதிய வரிகள் போடவேண்டும் என்று அறிவுரை சொன்னான் அரசன் என்றான் வழிப்போக்கன்.

"நல்ல கதை சொன்னாய்" என்று அவனைப் பாராட்டினார் குரு.

"குருவே! மாலைப் பொழுது வந்துவிட்டது. பக்கத்தில் ஓர் ஊர் உள்ளது. நீங்கள் அங்கே சென்று தங்குங்கள். நான் அதிக தொலைவு செல்ல வேண்டும்" என்று விடை பெற்றான் அவன். குருவும் சீடர்களும் அந்த ஊருக்குள் நுழைந்தார்கள். அங்கிருந்த மக்கள் அவர்களை வரவேற்றார்கள்.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்த்தமலை



ஆன்மீகம் 99

இங்கு காணப்படும் சப்த கன்னியரின் சிலைகள் நீண்ட காலங்களைக் கடந்து மிகவும் தேய்வுற்ற நிலைமையில் காணப்படுகின்றன.

இங்கு ஒரு ஆஞ்சநேயரின் அழகுச் சிலையும் கோயில் கொண்டிருக்கிறது. இக்கோயிலின் பின்புறம் ஸ்ரீஅகத்தியலிங்கம் எனும் சிவலிங்கமும் அதனன் பின்புறம் அகத்திய தீர்த்தம் எனும் புனித தீர்த்தம் சொட்டுசொட்டாக இடைவிடாமல் வீழ்ந்து கொண்டிருக்கிறது.

இதற்கு பத்து அடிகள் தொலைவில் அக்கினி தீர்த்தம் பாதாளத்தில் காட்சி கொடுக்கிறது. அதற்கு அருகில் ஸ்ரீ இராமர் தீர்த்தமும் ஸ்ரீ குமார தீர்த்தமும் கௌரி தீர்த்தமும் நம்மை வரவேற்கின்றன. மேலும் எம தீர்த்தம், வசிட்டர் தீர்த்தம், போன்ற புனித தீர்த்தங்களும் இருக்கின்றன.

இவைகளில் நீராடும் முன்னர் அடிவாரத்திலேயே ஸ்ரீ அனுமந்த தீர்த்தம் எனும் புண்ணிய தீர்த்தம் இருக்கிறது.

அடிவாரத்தில் ஓடும் ஆற்றின் நடுவே ஒரு நான்கடி தொட்டியிலிருந்து இந்த தீர்த்தம் வந்து கொண்டிருக்கிறது. இந்த தீர்த்தத்திற்கு ஒரு புராதன வரலாறு இருக்கிறது.

இந்த தீர்த்த மலை மிகவும் புனிதமான மலையாகும். கங்கை, யமுனை, சரஸ்வதி, காவேரி போன்ற தீர்த்த தேவதைகள் பூஜை செய்த தெய்வீக மலை என்கிறது வரலாறும். இராவண வதம், முடிந்த பின் அயோத்தி திரும்பும் வழியில் பிரமனின் பேரனான இலங்கேஸ்வரனைக் கொன்றதால் தம்மைப் பற்றும் பிரமஹத்தி தோஷம் நீங்கிட, இராமேஸ்வரத்தில் ஈசனை பூஜித்தது போல இங்கு பூஜித்து யாகம்செய்ய ஸ்ரீ இராமர் முடிவு செய்தாராம்.



தீர்த்த மலையில் பாறையில் அன்னதானம்

பூஜைக்கு நீ தேவைப்பட்டதால் ஆஞ்சநேயர் ஆகாய மார்க்கத்தல் காற்று வேகத்தில் விரைந்து கங்கை நீரைக்கொண்டு வந்தாராம். அவர் வர காலதாமதம் ஏற்பட்டதால் பூஜைக்கான நேரத்தில் பூஜையை நடத்த வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தால் அவசரப்பட்ட ஸ்ரீ இராமபிரான் கோதண்டத்தை வளைத்து பாறையின் மீது எய்ய, பாறை பிளந்து கொண்டு தீர்த்தம் வந்தது. தம் பூஜையை நேரத்தில் ஸ்ரீ இராமர் செய்து முடித்தார். பூஜை முடியும் நேரத்தில் அங்கு கங்கை நீருடன் திரும்பிய ஆஞ்சநேயர் பூஜை முடிந்து விட்டதைக் கண்டு நேரத்தில் வராதது போனமைக்கு தம்மையே வருந்தியவராய் அந்நீரை அருகில் ஓடிய ஆற்றில் விட்டாராம்

நடந்ததை உணர்ந்த இராமபிரான் தன் பக்தனை அருகழைத்து அன்புடன் சந்தர்ப்பசூழ்நிலையால் நீ கொணர்ந்த கங்கை தீர்த்தத்தை பூஜைக்கு உபயோகிக்க முடியவில்லை. இதற்காக வருந்தாதே எல்லாம் நன்மைக்கே! இனி இந்த தீர்த்தம் உன் பெயரிலேயே ஸ்ரீ அனும தீர்த்தம் என்று அழைக்கப்படும். இங்குவரும் பக்தர்கள் இங்கு ஸ்நானம் செய்யும் போது இனி அவர்களுக்கு காசியில் கங்கையில் தீர்த்தமாடிய புண்ணி பலன் கிட்டும் என்று அருளினார். இதைக்கேட்டு ஆஞ்சநேய பெருமான் பெருமகிழ்ச்சி அடைந்ததாயும் வரலாறு. அதுதான் அனும தீர்த்தம் எனும் பெயரில் அந்த நதி இன்றும் இருக்கிறது. தீர்த்த மலைக்கு செல்லும் முன் இங்கு நீராடித்தான் செல்ல வேண்டும்.

தொடரும்

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

# தற்காலிக அமைதியைக் கொடுக்கும் நவநீதம்பிள்ளையின் வருகை

மனித உரிமை ஆணையாளர் இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு திரும்பிய பின்னரே பலரது எதிர்பார்ப்பும், சிலரது ஏமாற்றங்களும் தெரியவரும். அதற்காக, அடுத்த மாதம் மனித உரிமை ஆணையகக் கூட்டம் வரை காத்திருக்க வேண்டி வராது. நடந்து முடிந்த இரண்டு மனித உரிமை கூட்டத் தொடர்களில் இலங்கையின் போர்க் குற்றங்கள் சம்பந்தமான பிரேரணைகள் அமெரிக்காவால் கொண்டுவரப்பட்டபோது ஆணையாளரினால் வெளியிடப்பட்ட ஆரம்ப உரையானது, இறுதிக்கட்டப் போரில் இலங்கைப் படைகளால் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்களையும், அதற்கான பொறுப்புக்கூறலையும் வலியுறுத்துவதாக அமைந்திருந்தது.

அவரது அந்த உரை வெளியானதிலிருந்து நவநீதம்பிள்ளை என்றாலே இலங்கை அரசுக்கு கதிகலங்கியதுபோல் ஆகிவிட்டது. இலங்கை அரசின் உயர்மட்டத்தினரும், இனவாத அரசியல்வாதிகளும் அநாகரீக முகத்தை காட்ட ஆரம்பித்துவிட்டார்கள்.

உலக அரங்கில், உன்னதமான உயர் பதவியில், அதுவும் ஒரு தமிழ்பெண் தம்மை சிக்க வைக்கிறாரே என்ற அச்சம் இவ்வளவு தூரம் இனவாதிகளை கொதிப்படைய வைத்தது. ஆனால், அந்த உயர் பதவியில் யார் அமர்ந்திருந்தாலும் அநியாயமாக ஒரு இனம் அழிக்கப்பட்டது என்ற வகையில் இதே மாதிரியான ஒரு அணுகுமுறையைத்தான் கடைப்பிடிப்பார்கள் என்பதை இலங்கை போன்ற அரசுகளால் உணர்ந்துகொள்ள முடியாது.

அதேபோல், இவ்வளவு தூரம் கொடுமைகள் தமிழருக்கு இழைக்கப்பட்ட பின்பும் இலங்கையை இன்றும் நட்புநாடாக கருதும் இந்தியாவின் பிரதிநிதி ஒருவர் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளராக வீற்றிருக்கும் பட்சத்தில், இதே மாதிரியான நடவடிக்கைகளைத்தான் எடுத்திருப்பார் என்று சொல்லி விட முடியாது.

ஏனெனில், இறுதிப் போரின்போது ஐ.நா செயலாளர் நாயகத்தின் ஆலோசகராக இருந்த விஜய் நம்பியார் நடந்து கொண்ட விதத்தையே உதாரணமாக கொள்ளலாம். அது மட்டுமல்ல, இன்றும் இந்திய அரசினதும், காங்கிரஸ் கட்சியினதும் துரோகம் தொடரவே செய்கிறது.

அண்மையில் சத்தியமூர்த்தி பவனில் வைத்து ஊடகவியலாளர்களிடம் பேசிய இந்திய காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாட்டு தலைவர் ஞானதேசிகன் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய வார்த்தைகள், இந்திய அரசின் ஒட்டுமொத்த சிந்தனையையும் வெளிப்படுத்தியிருந்தது. மஹிந்த ராஜபக்ச ஆட்சியில் இலங்கைத் தமிழர்கள் பாதுகாப்பாக இருப்பதாக உணர்கிறார்கள்! என்ற அவரது வார்த்தைகளால் புண்பட்ட ஈழத்தமிழர்களின் நெஞ்சங்கள் மீண்டும் பற்றி எரிவது போலாகிவிட்டது.

ஞானதேசிகன் ஒன்றை மறந்து விட்டார். இலங்கை அரசு இந்தியாவை எவ்வளவு தூரம் ஏமாற்றுகிறது என்பதையோ, இந்தியாவுக்கு எதிரான நாடுகளுக்கு இலங்கை எவ்வளவு தூரம் களம் அமைத்துக் கொடுத்திருக்கிறது என்பதன் பாதிப்பைக் கூட உணராதவராகவே தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

மகிந்தா அரசினால் தமிழர்கள் பாதுக்காக்கப்படுவதாக இந்தியாவில் இருந்தபடி ஞானதேசிகன் சொல்கிறார். ஆனால், இந்தியா சென்றிருந்த ரணில் விக்கிரமசிங்க இலங்கை அரசாங்கத்தால் அனைத்து மக்களுக்கும் பாதிப்பு என்று அதே காலப்பகுதியில் சொல்லியிருக்கிறார்.

இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவரை விடவா எங்கோ இருந்து வால்பிடிக்கும் ஞானதேசிகனுக்கு [illegible] விடப் போகிறது? [illegible] வத்தை அறிந்த பின்பும் இப்படி ஒரு கருத்தை ஞானதேசிகன் போன்றவர்கள வெளியிடுகிறார்கள் என்றால், இவர்களிடம் எப்படி மனித உரிமைகளை எதிர்பார்ப்பது?

உலக அரங்கில் எமக்கு இருக்கும் அற்ப சொற்ப நம்பிக்கைக்கும் எதிர்பார்ப்புக்கும் அமைவாகவே நவநீதம்பிள்ளை அவர்களின் பதவிக்காலம் நீடிப்பதாகக் கருதவேண்டியுள்ளது. இலங்கை அரசாலும் அரச படைகளாலும் எமக்கு ஏற்படுத்தப்பட்ட அதி உச்ச அழிப்புக்கு நீதி கிடைக்க வேண்டும். ஈழத்தமிழ் மக்களின் வாழ்வில் விடியல் பிறக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பின் ஒரு விடயமாகவே நவநீதம்பிள்ளை அவர்களின் வரவை அனைத்து தமிழினமும் ஆவலோடு எதிர்பார்த்து நிற்கிறது.

கடந்த சில ஆண்டுகளாகவே அவரின் வரவை எதிர்பார்ப்பதாக சொல்லிக்கொண்டு கூடவே அவரது பயணத்துக்கு நிபந்தனைகளையும் விதித்தபடி மறைமுக எதிர்ப்பைக் காட்டிவந்தது இலங்கை அரசு. அவை எதையும் கண்டுகொள்ளாமலும் காரணம் எதுவும் சொல்லாமலும் தனது பயணத்தைப் பிற்போட்டு வந்த ஆணையாளர் தனது பிரதிநிதிகளை மட்டும் காலத்துக்குக் காலம் இலங்கைக்கு அனுப்பி தகவல்களை பெற்றுவந்தார்.

சரியானதொரு தருணம் கிடைத்ததும் தனது பயணத்தைத் திட்டமிட்டார். வடபகுதித் தேர்தல் மனித உரிமைகள் கூட்டத் தொடர், இலங்கையில் இடம்பெறவுள்ள பொதுநலவாய மாகாநாடு ஆகியவற்றை மையப்படுத்தியதாக ஆணையாளரின் பயணம் அமைந்ததுதான் இலங்கை அரசுக்கு எதிர்பாராத ஒன்றாக அமைந்துவிட்டது.

கூடவே வெலிவேரியாவில் பொதுமக்கள் மீது படைகள் நடாத்திய சூட்டுச் சம்பவமும் ஆணையாளரின் விசாரணைகளுக்கு வலுச் சேர்ப்பதாக அமைந்துவிட்டது. சிங்கள் மக்க[illegible] இந்தநிலை என்றால் முள்ளிவாய்க்காலில் அன்று தமிழ் மக்களின் நிலை...? என்று சிந்திப்பதற்கான கதவை அரச படைகளே திறந்துவிட்டுள்ளார்கள்.



ஆணையாளரின் வரவையிட்டு இலங்கை அரச தலைவர்களும் இனவாத புத்த பிக்குகளும் அவருக்கு இருக்கும் சர்வதேச வல்லமையைப் புரிந்துகொண்டதாகத் தெரிகிறது. வெலிவேரிய சம்பவம்போல் இந்த இடையில் அசம்பாவிதங்கள் எதுவும் நடந்து விடக்கூடாது என்பதாலும் வடக்கு தேர்தல் களத்தில் வன்முறைகள் எதுவும் நடக்காதபடியும் போர் இடம்பெற்ற பகுதிகளில் தமிழ் மக்களின் மனித எச்சங்கள் தடயங்கள் என்பனவற்றை அழிப்பதிலும் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது. அண்மையில் இடம்பெற்ற சிறைச்சாலை போராட்டங்களின்போது நடாத்திய தாக்குதல்களின் தடயங்களையும் அழிப்பதாகத் தெரிய வருகிறது.

ஆனாலும் ஆணையாளரின் பயணத்தின் பின் இலங்கை அரசின் மிதவாதப்போக்கு தொடர்வதற்கான அறிகுறிகளே காணப்படுகின்றன. அதுவும் வடக்குத் தேர்தலில் அரசின் கெடுபிடிகள் மேலும் மோசமாகலாம். ஆணையாளரின் வரவு நாட்டில் ஒரு தற்காலிக அமைதியை மட்டுமே கொடுக்கும்.

இணையம் | முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவைக்கொண்டு அரசைக் கவிழ்க்க முனைப்பு

## நாமல் எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேர்தல் பிரசார நடவடிக்கைகளைக்கூட பொருட்படுத்தாது எதிர்க்கட்சிகள் போலி மனித வுரிமை மீறல்கள் குறித்து அறிக்கை தயா ரித்து வருவதாக ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள் ளார்.

கண்டியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற் படுத்த சில கட்சிகள் முயற்சிக்கின்றன.

பயங்கரவாதத்தை இல்லாதொழித்து நாட் டின் ஒருமைப்பாட்டை நிறுவிய நாட்டுத் தலை வரை காட்டிக்கொடுக்க முயற்சிக்கப்படுகின் றது. மனிதவுரிமை மீறல்கள் குறித்து அறி க்கை சமர்ப்பிக்கத்துடிக்கும் தரப்பினர் 1988 களில் 60 ஆயிரம் இளைஞர் யுவதிகளை டயர்களைக் கொண்டு எரித்தனர்.

மக்கள் பலத்தினால் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை தோற்கடிக்க முடியாது என் பதனை ஐக்கிய தேசியக் கட்சி விளங்கிக் கொண்டுள்ளது. இதனால் அமெரிக்காவைக் கொண்டு அரசாங்கத்தை கவிழ்க்க முயற் சிக்கப்படுகின்றது.

மக்கள் அரசாங்கத்துடன் இருக்கும் வரை யில் எந்தவொரு சக்தியினாலும் சதித்திட்டங் கள் தீட்டமுடியாது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மட்டுமன்றி நாட்டின் எந்தப் பகுதியிலாவது மனிதவுரி மைகள் மீறப்பட்டுள்ளனவா என்பதனை நவநீதம்பிள்ளை பார்க்கமுடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# சீனப் பெருஞ்சுவர் இலங்கையை சுற்றியமைக்கப்பட்டு விட்டதோ?

## பேராசிரியர் தம்மரத்ன தேரர்

(கொழும்பு)


சீனப்பெருஞ்சுவர் இலங்கையைச் சுற்றி யமைக்கப்பட்டு விட்டதோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக களனி பல்கலைக்கழகத் தின் பேராசிரியர் இந்துராகாரே தம்மரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

குருநாகல் பிரதேசத்தில் நடைபெற்ற வைப வம் ஒன்றில் கலந்து கொண்டபோதே அவர் இதனைக் கூறி யுள்ளார்.

எதிர்காலத்தில் சீனமொழியை அறியாமல் எதனைச் செய்ய முடியாத நிலைமை உரு வாகும். நாட்டிலுள்ள நாம் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்றுக் கொண்டாலும் எதிர்காலத்தில் சீன மொழியை கற்கவேண்டிய கட்டாயம் ஏற்படும்.

யாழ்ப்பாணம், திருகோணமலை, புத்த ளம், நுரைச்சோலை, அக்கரைப்பற்று, அம்பாந் தோட்டை பிரதேசங்களில் சீனர்கள் நிறைந்து காணப்படுகின்றனர். அத்துடன் நாட்டின் அனைத்து இடங்களிலும் சீனர்கள் உள்ளனர்.

இன்னும் இரண்டு தசாப்தங்களில் இல ங்கை முற்றாக மாறிவிடும். மக்கள் தொகை மாத்திரமல்ல மொழியும் மாறிவிடும். எதிர் காலத்தில் இரண்டு ஆக்கிரமிப்புக்கள் நடக்க லாம். அது மிகப் பயங்கரமான ஆக்கிரமிப் பாக இருக்கப்போகிறது. நாட்டில் உள்ள பிரச்சினைகளுக்கு இன்று தீர்வில்லை என தம்மரத்ன தேரர் கூறியுள்ளார். (அ-2)




சம்பத் வங்கி யாழ் கிளையின் 4 ஆம் வருட நிறைவை முன் னிட்டு Vision Care ஸ்தாபனத்துடன் இணைந்து இலவச கண் சிகிச்சை மருத் துவ முகாமை அண் மையில் நடத்தியது. சம்பத் வங்கி யாழ். கிளையில் மருத்துவ முகாம் நடைபெற்ற போது...

# தென்கொரிய பிரதமர் இன்று இலங்கைக்கு விஜயம்

தென்கொரிய பிரதமர் சன்ங் ஹொன்ங் வொன் இருநாள் உத்தியோகபூர்வ சுற்றுப் பயணம் மேற்கொண்டு இன்று புதன்கிழமை இலங்கை வருகிறார்.

1977 ஆம் ஆண்டுக்கு பின்னர் தென் கொரிய பிரதமர் ஒருவர் இலங்கைக்கு வரு வது இதுவே முதல் தடவை என்பது குறிப்பி டத்தக்கது.

இவ்விஜயத்தின் போது தென் கொரிய பிரதமர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட அரசியல் உயர் அதிகாரிகள் பலரையும் கண்டு கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளமை குறிப்பி டத்தக்கது.

அதன் போது இரு நாடுகளுக்கிடையி லான உறவினை மேம்படுத்துவது தொடர் பில் அதிக கவனம் செலுத்தப்படும் என தெரி விக்கப்படுகின்றது.

இச்சுற்று பயணத்தின் போது தென்கொ ரிய பிரதமர் இலங்கை- கொரிய சுற்றுச் சூழல் அழகுபடுத்தல் தொடர்பான நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளதுடன் கொழும்பு துறைமுகத் தையும் சென்று பார்வையிடவுள்ளார். (அ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## துத்தி

**Botanical Name:- Abutilon Indicum**

**Family:-Malvaceae**

இதனை வட்டத்துத்தி, பெருந்துத்தி என வும் அழைப்பார்கள். இச் செடி சுமார் ஒன்று, ஒன்றரை மீற்றர் உயரத்துக்கு பல கிளைக ளுடன் நன்கு வளரும். போலியான குச்சிக ளில் விருத்தமான சுமார் 5-10செ.மீ.குறுக் களவுள்ள பெரிய இலைகள் கலக்க இருக் கின்றன. இலை, காம்பு, குச்சி ஆகியவற்றில் வெண்ணிறமுள்ள பஞ்சு போன்ற சிறு சுணை கள் அதிகம். இவைகளெல்லாம்சிறிதுவெண்மை கலந்த பசுமை நிற முடையாதாகவே இருக் கின்றன. இவை களின் மேல் ஒருவித எண் ணெய் பிசுக்கும், நறுமணமும், இளஞ் செடி களில் குறைவா கவும் முற்றிய செடிகளில் வளர்ச்சிக்கு தக்க படி அதிகமாகவும் இருக் கின்றன. நல்ல மஞ்சள் நிறப்பூக்கள் சுமார் 4செ.மீ குறுக்கள வுள்ள விருத்த வடிவமானது. பூக்களின் நடுவே மகரந்தப் பொடியைத் தாங்கி நிற்கும் மெல் லிய பஞ்சு போன்ற முட்கள் அதிகம் இருக் கின்றன. காய் விசித் திரமான அழகான சட்டி போன்ற உருவ முடையது. அடிப்பாகம் பெருத்தும் மேற் பாகம் சிறிது சிறுத்தும் இருக்கின்றன. மெல் லிய கடதாசி போன்ற தோலான சுமார் 20, 25 பைகளாலே ஒவ்வொரு காயும் பிணைக் கப்பட்டு அமைந்திருக்கின்றது. குப் பையின் ஒருபக்க வரம்புமாக தோன்றும். குப்பைகள் ஒவ்வொன்றையும் தனித்தனியே பிரித்து எடுத்து விடலாம். கருமை நிறமும் ஏலரிசி போன்ற பருமனுள்ள விதைகள் ஒவ்வொரு காயிலும் சுமார் 4 இருக்கின்றன. இச்செடி பல்லாண்டுகள் வரை உயிர் வாழும்.

**கிடைக்குமிடமும் பயிரிடுதலும்:** வெப்ப முள்ள இடங்களில் தானே முளைத்து வள ரும். தரிசு நிலங்களில் காணலாம். எல்லா வகை மண்ணிலும் பயிராகும். விதை போட்டு சிறு கன்றுகளைப் பிடுங்கி மீற்றருக்கு ஒன் றாக நட்டு வளர்க்கலாம். துவர்ப்புச் சுவை யும்,வழவழப்பும் கொஞ்சம் உண்டு. நீர் மிகக் குறைவு. வாடாத பூக்களையும் சேர்த்து உப யோகிக்கலாம்.

❖ 12g இலையோடு 5g துளசி, பொற்றி லைக்கையான், ஐந்து தும்பை இலை, ஐந்து குப் பைமேனி இலை, புளியாரை இவற்றில் ஏதா வது ஒன்றுடன் கலந்து உபயோகிக்கலாம்.

❖ இலைச்சாற்றை தக்க அனுபானத்



தோடு உண்ணலாம்.

❖புதிய பூக்களை துவையல் செய்து உண் ணலாம். இதன்மூலம்மூலநோய், அதிகவெப்பம், மலச்சிக்கல்,மூத்திரசிக்கல், புண், இரத்தவா ந்தி, இருமல், அழற்சியால் உண்டாகும் கழிச் சல் ஆகியவை போகும். நல்ல பலமுண்டா கும். ஆண்மை அதிகரிக்கும். கிராம மக்கள் இதை கறியாக செய்து உண்பார்கள். உள்ள லாற்றி, உரமாக்கி, மலமிளக்கி, சிறுநீர் பெரு க்கி ஆகிய குணங்கள் உண்டு.

❖வேறு இனங்கள்: கருந்துத்தி, சிறுதுத்தி, நிலத்துத்தி எனப் பலவகையுண்டு. எல்லாவ கைத் துத்திகளின் இலைகளையும் சமைத்து உண்ணலாம்.

❖ இந்தக் கீரையை அதிகளவு யாரும் வாங்கி சாப்பிடமாட்டார்கள். நோய் உற்ற போது மட் டும் இதை வாங்கி உபயோகிப்பார்கள். நம் வீட்டில் உபயோகிக்கும் கீரைகள் போலவே இதைபொரியல்செய்தும்கடைந்தும்சாப்பிடலாம்.

❖காமாலை நோய் கண்டவர்களுக்கு கீழா நெல்லியை எப்படி அரைத்துக் கொடுத்து குணமாக்குகின்றோமோ, நீரிழிவு நோயாளிக ளுக்கு சிறுகுறிஞ்சாக் கீரையை எப்படிக் கொடு த்து குணமாக்குகின்றோமோ அது போல மூல வியாதியால் அவதிப்படுவோர்க்கு இது ஒரு அற்புதமான மூலிகையாகும்.

❖இந்த மூலிகையை கொண்டு வந்து சுத் தம் செய்து காரமில்லாத அம்மியில் வைத்து மைபோல அரைத்து பசும்பாலில் கலந்து ஒரு மாதம் வரை உண்டால் மூல சம்பந்தமான நோய்கள் பூரணமாக குணமாகின்றன.

❖தழைகளை ஒரு வடை சட்டியில் போட்டு விளக்கெண்ணெய் ஊற்றி நன்றாக வதக்கி இலேசான கை-பொறுக்கும் சூட்டில் வாழை இலை அல்லது பெரிய வெற்றிலையில் வைத்து மூலத்திற்கு வைத்து கோமணம் கட்டுவது போல ஒரு துணியை வைத்து கட்டிக் கொள் ளலாம். இப்படி அடிக்கடி செய்தால் அடிபட்ட போது ஒத்தடம் கொடுப்பது போல இதை மூலநீக்கம், வலிகுத்தல், எரிச்சல் நீங்கி நல்ல குணத்தை உண்டாக்கும். மூல வியாதிக்கும் இம்முறை கைகண்ட மருந்தாகும்.

❖உஷ்ணத்தில் வந்த கட்டிகளுக்கு அரை த்து வைத்துக் கட்டினால் கட்டி உடையும்.

❖ இந்தக் கீரையை அடிக்கடி உபயோகித் தால் இடுப்பு வலி, வாயுவினால் ஏற்படும் சகல நோய்களும் குணமாகின்றன. மலச்சிக்க லைக் கொடுக்கும் மூலத்தில் வாயு உண்டாகி தங்கு தல், பழைய மலத்தினால் ஏற்பட்ட பூச்சிகள் அனைத்தும் குணமாகின்றன.

❖இதன் இலையை சூரணம் செய்து தோல்



சம்பந்தமான வியாதிகளுக்கு கொடுத்தால் குணமாகின்றன.

❖ இந்தத் தழையை கசாயம் தயார் செய்து சர்க்கரை கலந்து தினம் 2,3 வேளை சாப்பி ட்டால் [illegible] குடலில் உண்டாகும். புண், நீர் சுருக்கு, தொண்டைக்கம்மல், காமாலை போன்ற பல நோய்கள் குணமாகின்றன.

❖இலைச்சாறு எடுத்து அதனுடன் தேங்காய் எண்ணெய் சேர்த்து நீர் சுண்டும் அளவு நன்றாக சுண்டக்காய்ச்சி வடிகட்டி பத்திரப் படுத்தி சிறு குழந்தைகளுக்குஏற்படும்கரப்பான் போன்ற நோய்களுக்கு இதைத் தடவலாம்.

❖சிறு வெங்காயம், விளக்கெண்ணெய், துத்தி கீரையில் சேர்த்து வதக்கி மூலவியாதி உள்ளபோது சாப்பிட்டால் பூரண குணம் உண்டாகும். இலை அல்லது வேரின் குடி நீரால் வாய் கொப்பளிக்க பல் ஈறுகளிலு ண்டாகும் நோய்களும் நீங்கும்.

❖ இலையின் சாறு 24g, நெய் 12g சேர்த் துக் கொடுக்க அழற்சியால் உண்டா கும் சுழிச்சல் போகும்.துத்தி இலையைத் குடிநீரிட்டு /பாலும் சர்க்கரையும் சேர்த்து உட்கொண்டால் கழிச்சலை உண்டாக்கி கீழ் வாய்க் கடுப்பு, சூடு முதலியவைகளைத் தணிக்கும்.

❖இத்துடன் பருப்பு சேர்த்துக் சமையல் செய்து சாப்பிடுவது வீட்டு வழக்கம். மூல வாய்வுக்கு நன்மைதரும்.இதன் இரசத்துடன் பச்சரிசிமா கூட்டிக் களி கிண்டி, கட்டிகளுக்கு வைத்துக் கட்ட அவை பழுத்து உடையும்.

❖ இதன் பூவை உலர்த்திப் பொடித்து பாலும், கற்கண்டும் சேர்த்து சாப்பிட்டுவர குருதி வாந்தி, அழல் நீங்கும். தேகம் குளிர்ச்சி உண்டாகும்.ஆண்மை பெருகும்.

❖ விதையை குடிநீர் செய்து மூலம், வெள்ளை, தந்தி, வெள்ளைகட்டு உபயோகிக் கலாம். விதையை கரி நெருப்பில் போட்டு அதனி ன்று எழும்பும் புகையை வயிற்றில் சிறு புழுக்களுள்ள குழந்தைகளில் கீழ் வாயில் படும் படி செய்ய புழுக்கள் வெளிப் படும்.

இதன்வேர்-35கிராம், திராட்சை-17கிராம், நீர்-700மில்லி லீற்றர் சேர்த்துக் காய்ச்சி- 170மில்லிலீற்றராக சுண்ட வைத்துவடிகட்டி கொண்டு காலை, மாலை .இருவேளையும் உட்கொண்டுவர மேகச்சூடு, நீர்ச் சுருக்கு, தாகம் முதலியன தீரும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள் பற்றி உங்களுக்குத் தெரியுமா?



## இந்த அறிவிப்பு பொதுமக்களின் கவனத்திற்காக வெளியிடப்படுகிறது

1. **பணத்தை வைப்பிலிடும் போது, வைப்புக்களை ஏற்கும் நிறுவனம் வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கான அனுமதியைக் கொண்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும், வைப்புக்கள் தொடர்பான நியதிகள் மற்றும் நிபந்தனைகளை வாசித்து விளங்கிக் கொள்ளவேண்டும்.**

**கருத்திற் கொள்ள வேண்டிய முக்கிய தகவல்கள்:**

- வருடாந்த வட்டி வீதம் மற்றும் வருடாந்த பயன்தரும் வட்டி வீதம்
- வட்டிக் கொடுப்பனவு வழங்கப்படும் திகதி அல்லது கணக்கில் வட்டி வரவு வைக்கப்படும் திகதி
- வட்டி வழங்கப்படாத சந்தர்ப்பங்கள்
- நிலையான வைப்புக்கள் தொடர்பில், வைப்புக்காலம் மற்றும் முதிர்வுத் திகதிக்கு முன்னதான மீளப்பெறுகை தொடர்பான நியதிகள் என்பன
- மேலதிக சேவைக் கட்டணங்களும் அறவீடுகளும்

2. **கடன்களைப் பெற்றுக்கொள்ளும்போது, அக்கடன்கள் தொடர்பான நியதிகள் மற்றும் நிபந்தனைகளை வாசித்து விளங்கிக் கொள்ளவேண்டும்.**

**கருத்திற் கொள்ள வேண்டிய முக்கிய தகவல்கள்:**

- செலுத்த வேண்டிய மாதாந்த அல்லது வருடாந்த வட்டி
- வட்டி வீதம் நிலையானதா அல்லது மாறக் கூடியதா என்பது
- வட்டி கணிப்பீட்டு முறை
- கடனின் காலம்
- தவணைக் கட்டணங்களின் எண்ணிக்கை
- தவணைக் கட்டணத் தொகை
- தவணைக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டிய திகதிகள்
- பிணைகள் மற்றும் உத்தரவாதமளிப்பவர்கள் தொடர்பான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்
- தவணைக் கட்டணங்களின் கொடுப்பனவுகளில் தாமதம் ஏற்படின் அது தொடர்பான நிபந்தனைகள்
- உரிய திகதிக்கு முன்பதாக கடன்கள் மீளச் செலுத்தப்பட்டால் அது தொடர்பான நிபந்தனைகள்
- மேலதிக சேவைக் கட்டணங்களும் அறவீடுகளும்

3. **ஒரு அனுமதியளிக்கப்பட்ட நிறுவனத்துடன் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் போது கீழ்க்கண்ட நடைமுறைகளை பின்பற்றுதல் வேண்டும்.**

- எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களையும் மேற்கொள்ள முன்னர், அக்கொடுக்கல் வாங்கல் தொடர்பான நியதிகள் மற்றும் நிபந்தனைகள் பற்றிய உங்கள் சந்தேகங்களை தெளிவுபடுத்திக் கொள்ளல்.
- விண்ணப்பப்படிவங்கள் மற்றும் ஏனைய ஆவணங்களை கவனமாக வாசித்து அறிந்த பின்னர் அவற்றை பூர்த்தி செய்தல்.
- எந்தவொரு வெற்றுப் படிவங்களிலும் கையொப்பமிடாது இருத்தல்.
- கணக்குகள் தொடர்பான தனிநபர் அடையாள இலக்கங்கள் மற்றும் கடிதப் போக்குவரத்துக்களை பாதுகாத்தல்.
- அனுமதியளிக்கப்பட்ட நிறுவனத்திற்கு உண்மையான தகவல்களை வெளிப்படுத்துதல்.
- முகவரி மாற்றங்களை அறிவித்தல்.
- சந்தேகத்திற்கிடமான அல்லது மோசடியான கொடுக்கல்வாங்கல்களை அறிவித்தல்.
- எந்தவொரு பிரச்சினையையும் முதலில் அனுமதியளிக்கப்பட்ட நிறுவனத்துடன் கலந்துரையாடி தீர்ப்பதற்கு முடியுமானவளவு சகல முயற்சிகளையும் மேற்கொள்ளுதல்.

**மேற்குறிப்பிட்ட முறையில் பிரச்சினைகள் தீர்க்கப்படாது போனால் கீழ்க்கண்டவற்றுடன் தொடர்பு கொள்ளமுடியும்:**

- *நிதிசார் குறைகேள் அதிகாரி, இல. 143ஏ, வஜிர வீதி, கொழும்பு 5.*
  *தொலைபேசி: 011 2595624-5, மின்னஞ்சல்:* forsril@sltnet.lk
- *கடன்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு மாத்திரம்:*
  *கடன் ஆலோசனை நிலையம், இல. 58, சிறி ஜயவர்த்தனபுர மாவத்தை, இராஜகிரிய. தொலைபேசி: 011 2887006, மின்னஞ்சல்:* upadeshana@gmail.com

**மேற்கூறப்பட்டவை உங்களது நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான முக்கிய தகவல்கள் மாத்திரம் என்பதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும். உங்களது கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக மேலதிக விபரங்களை கேட்டறிதல் முக்கியமானதாகும்.**

**இலங்கை மத்திய வங்கி**

இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 1
தொலைபேசி: 0112477100, 0112398539, 0112477115
தொலைநகல்: 0112477711
மின்னஞ்சல்: banksup@cbsl.lk, இணையத்தளம்: www.cbsl.gov.lk

(C-4473)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்படி என்னதான் இருக்கிறது மெட்ராஸ் கஃபே படத்தில்...?

தமிழகத்தில் ஒரே ஆண்டில் மூன்றாவது முறையாக ஒரு படத்தின் வெளியீடு தள்ளிப் போயிருக்கிறது. கமலஹாசனின் விஸ்வரூபம், விஜயின் தலைவா ஆகிய படங்களைத் தொடர்ந்து இந்தித் திரைப்படமான மெட்ராஸ் கஃபே தமிழகத்தில் மட்டும் வெளியாகவில்லை.

சூஜித் சர்கார் இயகத்தில் ஜான் ஆப்ரகாம் நடித்திருக்கும் மெட்ராஸ் கஃபே திரைப்படம் முன்னாள் இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதன் பின்னணியில் நடந்த விடயங்களை அலசும் படம். இந்தப் படத்தில் தமிழீல விடுதலைப் புலிகளைப் பற்றிய காட்சிகள் நிச்சயம் இடம்பெற்றிருக்கக்கூடும் என்று அனுமானித்த தமிழக ஈழ ஆதரவு அமைப்புக்கள் படத்தைத் தங்களுக்குப் போட்டுக் காண்பிக்க வேண்டும் என்று வலியுறுத்தின. அந்த கோரிக்கை ஏற்கப்பட்டு மெட்ராஸ் கஃபே படத்தின் தமிழ்ப் பதிப்பு படத்தைப் பார்த்துவிட்டு வெளியேறிய நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான், இந்தப் படம் விடுதலைப்புலிகள் அமைப்பை தீவிரவாத அமைப்பாகவும் அதன் தலைவர் கொடியவராகவும் சித்தரிப்பதால் படத்துக்கு நிரந்தரத் தடை



விதிக்க வேண்டும் என்றும் கோரினார். பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் மருத்துவர் ராமதாஸும் இதே கோரிக்கையை முன்வைத்தார். ம.தி.மு.க தலைவர் வை.கோவும் படத்துக்கு தடை விதிக்க வேண்டும் என்று கோரும் நீண்ட கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

இதையடுத்து தமிழகமெங்கும் எதிர்ப்பலை பரவியது. பல்வேறு தமிழீழ ஆதரவு அமைப்புக்கள் படத்தின் தமிழ்ப் பதிப்பை மட்டுமல்லாமல் இந்திப்பதிப்பையும் தமிழகத்தில் வெளியிடக்கூடாது என்று பல்வேறு வகையான போராட்டங்களில் ஈடுபட்டன. பல திரையரங்குகளின் வாசலில் வைக்கப்பட்டிருந்த மெட்ராஸ் கஃபே படத்தின் பதாகைகள் கிழித்து எறியப்பட்டன. சென்னையில் உள்ள ஸ்கைவான் என்னும் திரையரங்கத்தில் கணிசமான இளைஞர்களைக் கொண்ட நூற்றுக்கணக்கான ஈழ ஆதரவு அமைப்பினர் கூடி படத்தை எதிர்த்து கோஷம் எழுப்பினர். பதாகைகளைத் தீயிட்டுக்கொழுத்தினர். படத்தை வெளியிட்டால் திரையரங்கத் திரைகள் கிழிக்கப்படும் என்று சில அமைப்புகள் மிரட்டல் விடுத்தன. முகநூலிலும் பல்வேறு ஈழ ஆதரவு சிந்தனையாளர்கள் படத்தில் மறைக்கப்பட்டுள்ள உண்மைகளையும் படத்துக்குத் தடை விதிக்க் வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தி நிலைத் தகவல்களை வெளியிட்டனர். மும்பை, ஐதராபாத் உள்ளிட்ட வேற்று மாநில நகரங்களிலும் தமிழர் அமைப்புகளும் படத்துக்கு தடை கோரிப் போராடினார்கள்.

இந்நிலையில் மெட்ராஸ் கஃபே படத்தைத் தடை செய்யவேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இதை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை அமர்வு, மெட்ராஸ் கஃபே படத்தின் இந்திப்பதிப்புக்கு ஏற்கனவே மத்திய திரைப்படத் தணிக்கை குழு சான்றிதழ் வழங்கிவிட்டதால் படத்தின் வெளியீட்டுக்குத் தடை விதிக்க முடியாது என்று தீர்ப்பளித்துவிட்டது. இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்ட நேரத்தில் இந்தப் படத்தின் தமிழ்ப் பதிப்புக்கு தணிக்கை வாரிய சான்றிதழ் வழங்கப்படவில்லை என்பதால் சான்றிதழ் இல்லாமல் படம் வெளியாகக் கூடாது என்றும் அந்த நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

தமிழ்ப் பதிப்புக்கும் தணிக்கைச் சான்றிதழ் கிடைத்துவிட்டாலும் தமிழகத்திரையரங்க உரிமையாளர்கள்



மெட்ராஸ் கஃபேயின் இரண்டு பதிப்புக்களையும் வெளியிட மறுத்துவிட்டனர். படத்தை வெளியிடும் திரையரங்குகள் ஆபத்துக்களை சந்திக்க நேரிடும் என்று சில அமைப்புக்கள் மிரட்டல் விடுத்திருந்ததால் அந்த ஆபத்தைப் பொறுத்துக்கொண்டு படத்தை வெளியிடும் அளவுக்கு இந்தப்படத்துக்கு வணிக வெற்றிச் சாத்தியமும் இருப்பதாகத் தெரியவில்லை என்று திரையரங்க் உரிமையாளர் சங்கம் அறிவித்திருக்கிறது. மெட்ராஸ் கஃபே படத்தைத் திரையிட மறுத்த திரையரங்கு உரிமையாளர்களுக்கு கைகோ நன்றி தெரிவித்து அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

தமிழ் இனப்படுகொலை செய்த கூட்டுக்குற்றவாளிகள் தங்கள் தரப்பை நியாயப்படுத்திக்கொள்ள சிங்களப் பேரினவாத அரசின் பேருதவியுடன் தமிழர்களைப் பயங்கரவாதிகளாக சித்தரித்து எடுக்கப்பட்ட மெட்ராஸ் கஃபே திரைப்படம் வெளியிடக் கூடாது என கொந்தளிக்கும் உணர்வுடன் விடுத்த வேண்டுகோளை ஏற்று 23.08.2013 வெளியிடுவதாக இருந்த திரைப்படம் திரையிடப்படவில்லை. தமிழகத்தில் அதிக திரையரங்குகளில் இப்படத்தை திரையிட இயக்குனரும் தயாரிப்பாளரும் பல வகையில் முயற்சி செய்து இலாபத்தில் பங்கு தருவதாக ஆசை வார்த்தை கூறிய போதும் தமிழர்களின் உரிமைகளுக்காக சுயநலமின்றி போராடும் எங்களின் வேண்டுகோளை ஏற்று தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து மெட்ராஸ் கஃபே திரைப்படத்தை திரையிடாமல் ஒத்துழைப்பு நல்கியிருக்கின்ற திரையரங்கு உரிமையாளர்களுக்கும் விநியோகத்தர்களுக்கும் திரையுலகத்தினருக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று அவர் தன் அறிக்கையில் கூறியிருக்கிறார்.

அப்படி என்னதன் இருக்கிறது மெட்ராஸ்கஃபே படத்தில்....? படத்தின் கதை இதுதான்:

1980 களில் முடிவில் இலங்கையில் இனக்கலவரம் உச்சத்தில் இருந்த போது அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி அங்கு நடக்கும் கலவரத்தை அடக்க இந்திய அமைதிப்படையினரை அனுப்பினார். ஆனால், பல்வேறு காரணங்களால் அமைதிப்படை திரும்பப் பெறப்படுகிறது. அந்தச் சூழலில் இலங்கையில் என்ன நடக்கிறது என்பதை அறிய இந்திய உளவுத்துறை நிறுவனமான ரா விக்ரம் சிங்க என்னும் ரகசிய உளவாளியை அங்கு அனுப்புகிறது. இலங்கைக்குச் செல்லும் விக்ரம் சிங் அங்கு இந்தியப் பிரதமரைக் கொல்ல எல்.டி.எஃப் என்னும் தீவிரவாத அமைப்பு சதித்திட்டம் தீட்டுவதை பிரிட்டன் வாழ் இந்தியப்பெண் நிருபரின் துணையுடன் கண்டறிகிறார். எல்.டி.எஃப் அமைப்பின் தலைவர் அண்ணா பாஸ்கரனைக் கண்காணிக்கிறார். பாஸ்கரனின் சக போராளி ஒருவரை அவருக்கெதிராக திசை திருப்பி பிரதமரைக் கொல்வதற்கான சதித்திட்டத்தை முறியடிக்க முயற்சிக்கிறார். ஆனால், திட்டமிட்டபடி இந்தியப் பிரதமர் கொல்லப்படுகிறார்.

இந்தப் படத்தில் எல்.டி.எஃப் என்று சுட்டப்படும் அமைப்பு எல்.டி.டி.ஈ என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பையே குறிக்கிறது. டைகர்ஸ் எனும் இந்த அமைப்பினர் படத்தில் குறிப்பிடப்படுகிறார்கள். மெட்ராஸ் கஃபே என்ற இடத்தில் தான் ராஜிவைக் கொல்வதற்கான திட்டம் தீட்டப்பட்டது என்பதால் படத்துக்கு இந்தத் தலைப்பை வைத்திருக்கிறார்கள். முதலில் இந்தப் படத்துக்கு ஜாஃப்னா என்ற தலைப்பு பரிசீலிக்கப்பட்டதாக விக்கிபீடியா இணைய தளம் கூறுகிறது. இந்தத் தகவல்கள் வெளிப்படையானவை. படக்குழுவினர் உட்பட யாரும் இவற்றை மறுக்கவும் இல்லை.

இலங்கை இனக்கலவரப் போரை ஒருதலைப்பட்சமாக அணுகி வரலாற்றை திரிக்கும் வேலையில் இந்தப் படம் ஈடுபடுவதாகத் தமிழ் உணர்வாளர்கள் குற்றம்சாட்டுகிறார்கள்.

ராஜிவ் காந்தியால் அனுப்பப்பட்ட இந்திய அமைதிப்படை இலங்கைத் தமிழர்களுக்கு இழைத்த கொடுமைகளை இந்தப் படம் கண்டு கொள்ளவில்லை என்பதிலிந்தே இதன் ஒரு பக்கச்சார்பு அம்பலப்பட்டுவிடுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு மற்றும் அதன் தலைவரைப் பற்றிய தகவல்களும் உண்மைக்கு நெருக்கமாக இல்லை. படம் முன்னிறுத்த விரும்பும் ஆதார செய்திக்கு இசைவாகவே உண்மைகள் திரிக்கப்பட்டிருக்கின்றன.

மேலும் காந்தியைக் கொன்ற ஆர்.எஸ்.எஸ். இயக்கம் பற்றியும் இந்திரா காந்தியைக்கொன்ற சீக்கியர்கள் பற்றியும் படம் எடுக்க இந்திய அரசு சம்மதிக்குமா? அப்படி இருக்கும் போது இவ்வளவு பெரிய இனவழிப்பு நடந்து முடிந்த பிறகு ராஜிவ் காந்தியின் கொலையின் பின்னணியில் விடுதலைப்புலிகள் உள்ளனர் என்பதை பற்றிய பொய்யான.பல தகவல்களை திரட்டி படம் எடுக்க வேண்டிய அவசியம் என்ன என்று கேள்வி எழுப்பியுள்ளார் இயக்குனர் ஆர்.கே. செல்வமணி.

விடுதலைப்புலிகளை கெட்டவர்களாகவும் இந்திய அமைதிப் படையும் சிங்கள அரசும் நல்லவர்களாகவும் காட்டியுள்ள இந்தப் படத்தை தமிழகத்தில் மட்டுமல்ல உலகெங்கும் தடைசெய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வைத்துள்ளனர் தமிழ் அமைப்புகள் மற்றும் கட்சிகள்.

உலகில் எங்கு திரையிட்டாலும் தமிழர்கள் அங்கு போராட்டம் செய்வார்கள். தமிழகத்தில் எந்த திரையரங்கிலும் இந்தப் படத்தைக் காண்பிக்க அனுமதிக்க மாட்டோம் என்று நாம் தமிழர் கட்சியும் மற்ற தமிழ் அமைப்புகளும் கூறியுள்ளன.

(தொடரும்)

**தமிழகத்திலிருந்து**
**கோபாலகிருஸ்ணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 வகை பால்மா வகைகளில் டிசிடி இரசாயனம் இல்லை

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

**அங்கர், மலிபன் மற்றும் லக்டோஜன் அடங்கலான இறக்குமதி செய்யப்படும் 12 வகை பால்மா மாதிரிகளில் டிசிடி இரசாயனம் கிடையாது என இரசாயன பரிசோதனை மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்தது.**

பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிலையத்திற்கு ஆய்விற்காக அனுப்பப்பட்ட 12 பால்மா மாதிரிகளில் பொட்யூலியம் பக்டீரியா கிடையாது. அதனால் அவற்றை துறைமுகத்தில் இருந்து சந்தையில் விட அனுமதி அளித்துள்ளதாகவும் அமைச்சு நேற்று முன்தினம் தெரிவித்தது.

இறக்குமதி செய்யப்படும் பால்மா மற்றும் பாலுற்பத்திகள் தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினையையடுத்து 200 இற்கும் அதிகமான பால்மா மற்றும் பாலுற்பத்தி மாதிரிகள் ஆய்விற்காக கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திற்கும் ஐ.ரி.ஐ. மற்றும் மருத்துவ ஆராய்ச்சி நிலையத்திற்கும் அனுப்பப்பட்டன.

இந்த விவகாரம் தொடர்பில் நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவின் ஆலோசனைக்கமைய இது தொடர்பான பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்படி மலிபன் பால் உற்பத்தி கம்பனி, பொன்டெரா கம்பனி, லயிட் சேர்ப் தனியார் கம்பனி என்பவற்றினூடாக தருவிக்கப்படும் 12 பாலுற்பத்தி மாதிரிகளில் டிசிடி கிடையாது என்பது உறுதி செய்யப்பட்டது.

இது தவிர லீ2 புரோட்டின் உள்ள 8 குழந்தைகள் பால்மா மாதிரிகளிலும் டிசிடி இரசாயனம் கிடையாது என உறுதியாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

அத்துடன் மைலோ உற்பத்திகளுக்காக உள்நாட்டு பாலுடன் லீ2 புரோட்டின் உள்ளடங்கிய பொருட்களை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மைலோ நிறுவனம் பிரான்ஸை தளமாகக் கொண்டு இயங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளதோடு இதன்படியே புரோட்டின் அடங்கிய பொருட்களைக் கொண்டு மைலோ உற்பத்திகளை மேற்கொள்ளவும் சந்தைப்படுத்தவும் விற்கவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

வே புரோட்டின் மற்றும் டிசிடி இரசாயனம் தொடர்பான விவகாரத்தினால் இறக்குமதி செய்யப்படும் பல பால்மா வகைகள் மற்றும் பாலுற்பத்திகளுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தன.

இதனால் அதிகமான பால்மா வகைகள், பாலுற்பத்திகள் என்பவற்றை துறைமுகத்தில் இருந்து சந்தைக்குவிடுவதும்தடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் ஒரு மாத காலத்திற்கு மேலாக நீடித்த பால்மா தொடர்பான பிரச்சினைக்கு முடிபு எட்டப்பட்டுள்ளது. (அ-2)

# மாற்றுத் திறனாளிகள் உறவினரின் உதவியுடன் வாக்களிக்க அனுமதி

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலின் போது மாற்றுத் திறனாளிகள் தமது வாக்கினை பதிவு செய்வதற்காக உறவினர் ஒருவரது உதவியை பெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் வாக்காளரின் உடல் நிலையை விளக்கும் மருத்துவ சான்றிதழ் ஒன்றை வாக்களிப்பு நிலைய அதிகாரிகளிடம் சமர்ப்பிக்க வேண்டியது அவசியம் என தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-20)

# தொழிலதிபர் வீட்டில் கொள்ளை; இலங்கை தமிழர்கள் நால்வர் கைது

(சென்னை)

சென்னைநீலாங்கரையில்தொழிலதிபர் வீட்டில் 120 பவுண் தங்க ஆபரணங்களை கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் இலங்கைத் தமிழர் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

தொழிலதிபர் கே.கோபிதாஸ் கடந்த 16 ஆம் திகதி குடும்பத்துடன் ஊட்டிக்கு சுற்றுலா சென்றார்.

இந்நிலையில் 17 ஆம் திகதி இவர் வீட்டின் பின்பக்க கதவை உடைத்து அலுமாரியில் இருந்த 120 பவுண் தங்க நகைகள் 10 இலட்சம் ரூபா பணம் திருடப்பட்டிருந்தது.

இது குறித்து தொழிலதிபரின் உறவினரான பென்சிங் முறைப்பாடு செய்திருந்தார். இதனடிப்படையில் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை செய்தனர்.

விசாரணையில் கோவளத்தைச் சேர்ந்த இலங்கைத் தமிழர்கள் 6 பேர் இந்த கொள்ளையுடன் சம்பந்தப்பட்டிருப்பது தெரியவந்தது.

இதையடுத்து இவர்களை கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார், 4 பேரை உடனடியாக கைது செய்தனர். இவர்களிடமிருந்து 70 பவுண் தங்க நகைகள், 4 இலட்சம் ரூபா ரொக்கம் ஆகியவை கைப்பற்றப்பட்டன.

இந்நிலையில் மற்றுமொரு சந்தேக நபர் ஆலந்தூர் நீதிமன்றில் சரணடைந்துள்ளார். இக் கொள்ளைச் சம்பவத்தில் தொடர்புடைய முக்கிய சந்தேக நபரான சலீமை பொலிஸார் தேடி வருவதாக தெரிவித்துள்ளனர். (அ)

# நவநீதம்பிள்ளைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தாதீர்கள்

## கோமின் தயாசிறி அறிவுரை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு எதிராக ஏதேனும் எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும் என்றால் அதனை அறிவைப் பயன்படுத்தியும் இராஜதந்திர ரீதியிலுமே அதனை செய்ய வேண்டும் என சிரேஷ்ட சட்டத்தரணி கோமின் தயாசிறி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆர்ப்பாட்டங்களை நடத்தி எதிர்ப்புக்களை வெளியிடுவதில் பெரிய பயன்கள் கிடைக்கப் போவதில்லை. இதனால் இலங்கைக்கு ஒரு விதத்தில் சாதகமற்ற நிலைமை ஏற்படக் கூடும்.

ஆர்ப்பாட்டங்களை நடத்தி பலத்தை காட்டினாலும் அதன் மூலம் கிடைக்கும் நன்மை குறைவானதாகவே இருக்கும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் என்ற முறையில்நவநீதம்பிள்ளைக்கு இலங்கையில் ஆய்வுகளை மேற் கொள்ள உரிமை உள்ளது.

அதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையர்ளர் நவநீதம்பிள்ளையின் வருகையானது பாதகமாக அமையலாம் எனவும் அந்தப் பாதக நிலைமையைச் சீர் செய்ய ஆர்ப்பாட்டங்களை செய்யாது அதனைப் புத்திசாலித்தனமாக அணுக வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# நடிகரின் துறவறத்துக்கு பௌத்த பிக்குகள் எதிர்ப்பு

பிரபல நடிகர் சனத் குணதிலக்கவின் துறவற வாழ்விற்கு பௌத்த பிக்குகள் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

முழுச் சங்க சமூகத்தையும் அவமரியாதை செய்யும் வகையில் சனத் குணதிலக்க பௌத்த பிக்குவாக துறவறம் பூண்டுள்ளார் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

பௌத்த துறவறத்தின் மீது அக்கறையுடையவர்கள் இந்த நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கியிருக்க மாட்டார்கள்.

நடிப்பு நோக்கத்திற்காக துறவறத்தில் நுழைவது ஏற்றுக் கொள்ளக் கூடியதா? உலக ஆசைகளைத் துறந்து மெய்யான அர்ப்பணிப்புடன் பௌத்த பிக்குவாக மாறியிருக்க வேண்டும்.

மாறாக அனுபவம் பெற்றுக்கொள்ளும் நோக்கில் பௌத்த துறவறத்தை பூணுவது கண்டிக்கப்பட வேண்டியது என சோபித தேரர் தெரிவித்துள்ளார். (அ-2)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கலை வட்டம் மற்றும் நுண்கலைத்துறையின் ஆதரவில் கொழும்பு காண்பிய மற்றும் ஆற்றுகைக் கலைப் பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளர் சந்திரகுப்த தேனுவரரவின் கலையென்பது எதிர்ப்பு என்னும் தலைப்பிலான உரையரங்கு காண்பியங்களுடன் இன்று புதன்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக புதிய கலைப்பீடக் கட்டடத் தொகுதியில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஓவியர்கள், மாணவர்கள், கலை ஆர்வலர்கள் கலந்து கொண்டு பயன்பெறலாம் என யாழ்.பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது. (அ-20)




- 1349 - கொள்ளை நோயைக் காரணம் காட்டி ஜேர்மனியின் மாயின்ஸ் நகரில் 6 ஆயிரம யூதர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1619 - ஜேர்மனியின் இரண்டாம் பேர்டினண்ட் புனித ரோமப் பேரரசன் ஆனான்.
- 1789 - வில்லியம் ஹேர்ச்செல் சனிக் கோளின் புதிய சந்திரனைக் கண்டுபிடித்தார்.
- 1844 - பிரெட்ரிக் எங்கெல்ஸ் மற்றும் கார்ல் மார்க்ஸ் இருவரும் பாரிசில் சந்தித்தனர்.
- 1845 - சயன்டிஃபிக் அமெரிக்கன் முதலாவது இதழ் வெளிவந்தது.
- 1849 - ஒரு மாதகால முற்றுகையின் பின்னர் வெனிஸ் நகரம் ஆஸ்திரியாவிடம் வீழ்ந்தது.
- 1867 - ஐக்கிய அமெரிக்கா மிட்வே தீவைப் பிடித்தது.
- 1879 - சூளுக்களின் கடைசி மன்னன் செட்ஸ்வாயோ பிரித்தானியர்களினால் சிறை பிடிக்கப்பட்டான்.
- 1898 - காலெப் பிராடம் தான் கண்டுபிடித்த மென்பானத்திற்கு பெப்சி கோலா எனப் பெயரிட்டார்.
- 1913 - நெதர்லாந்தின் அரசி வில்ஹெல்மினா த ஹேக் நகரில் அமைதி அரண்மனையைத் திறந்தார்.
- 1922 - ஜப்பான் சைபீரியாவில் இருந்து தனது படைகளை விலக்கச் சம்மதித்தது.
- 1924 - சோவியத் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக ஜோர்ஜியர்கள் கிளர்ச்சியை ஆரம்பித்தனர்.
- 1931 - பிரான்சும், சோவியத் ஒன்றியமும் போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்தின.
- 1943 - நாசி ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக டென்மார்க்கில் பொது வேலை நிறுத்தம் ஆரம்பமானது.
- 1963 - மார்ட்டின் லூதர் கிங், 2 இலட்சம் பேருடன் 'என் கனவு யாதெனில்...' என்ற புகழ்பெற்ற வார்த்தைகளுடன் சொற்பொழிவாற்றினார்.
- 1964 - பிலடெல்பியாவில் இனக்கலவரம் ஆரம்பித்தது.
- 1991 - சோவியத்திடம் இருந்து உக்ரைன் விடுதலை பெற்றது.
- 1996 - வேல்ஸ் இளவரசர் சார்ல்ஸ், இளவரசி டயானா மணமுறிவு ஏற்பட்டது.
- 2006 - இலங்கையில் பத்தாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் முடிவடைந்தன.

**பிறப்புக்கள்**

- 1828 -லியோ டால்ஸ்டாய், உருசிய எழுத்தாளர் (இ. 1910)
- 1855 - ஸ்ரீ நாராயணகுரு, இந்து ஆன்மீகவாதி (இ. 1928)
- 1983 - லசித் மலிங்க, இலங்கைத் துடுப்பாட்ட அணியின் அதிவேகப் பந்து வீச்சாளர்

**இறப்புகள்**

- 430 - புனித அகஸ்டீன், மெய்யியலாளர் (பி. 354)
- 1891 - ராபர்ட் கால்டுவெல், பிரித்தானியத் தமிழறிஞர் (பி. 1814)
- 1973 - முகவை கண்ண முருகனார், கவிஞர், தமிழறிஞர் (பி. 1890)

**சிறப்பு நாள்**

- புனித அகஸ்டீன் கிறிஸ்தவத் திருவிழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி மாதம் பிறந்தவர்களின்

உங்களுக்கு தாராள மனப்பான்மை இயல்பாக அமைந்திருக்கும். செலவுகளை சிலசமயங்களில் கட்டுப்படுத்த இயலாது. சாதாரண பொருட்களில் நீங்கள் அதிக ஆசை வைக்கமாட்டீர்கள். தன் வாழ்க்கைநிலை தாழ்ந்த நிலையாக இருந்தாலும் ஆடம்பரமானதும் விலையுயர்ந்ததும் மதிப்புடையதுமான பொருட்க ளையே அன்றாட உபயோகப் பொருட்களாக பயன்படுத்த விரும்புவீர்கள். நீடித்து உழைக்கக்கூடிய பொருட்களையேதேர்ந்தெடுத்துக் கொள்வீர்கள். பழக்கப்பட்ட பொருட்களை இழந்துவிட்டால் அதற்காக மிகவும் வருந்துவீர்கள். மூக்குக் கண்ணாடியாக இருந்தாலும் சரி முகம் பார்க்கும் கண்ணாடியாக இருந்தாலும் சரி கையெழுத்துப் போடும் பேனாவாக இருந்தாலும் சரி கைத்தடியானாலும் சரி அதை உறுதி வாய்ந்ததாகவே தம் வாழ் நாள் பூராகவும் உழைக்கக் கூடியதாகவே விரும்பி வாங்கி பயன்படுத்துவீர்கள்.

நீங்கள் சட்டென்று பிறரிடம் பழகிவிட மாட்டீர்கள். பழகிவிட்டால் நட்புக்காக எத்தகைய தியாகத்தையும் செய்யக் கூடிய உயிர்த்தோழராகப் பழகும் குணம் உங்களுக்கு இயற்கையாகவே அமைந்திருக்கும்.

செல்வங்கொழிக்கும் தொழில் நிறுவனங்களில் நீங்கள் பணியாற்ற நேரலாம். பாங்குகள், வட்டிக் கடைகள், வியாபாரம் செய்யும் தரகுக் கம்பனிகள் , கொடுக்கல் வாங்கல் செலாவணி நடத்தும் சீட்டுக் கம்பனிகள் உண்டியல் வியாபாரம் நடத்தும் திட்டங்கள் ஆகிய இடங்களில் நீங்கள் பணியாற்றவில்லை என்றாலும் கூட உங்களுக்கும் அந்தத் தொழில் துறைக்கும் ஏதாவது ஒரு வகையில் தொடர்போ பிணைப்போ ஏற்படும். நீங்கள் பிறருக்காகக் பொருள் தேடிக் கொடுப்பதிலும் பணத்தைக் கையாள்வதிலும் உங்கள் திறமையை அதிகம் காட்டுவீர்கள். பிறர் பொருளைச் செலவு செய்வதில் உஷாராகவும் இருப்பீர்

ஜோதிடக்களம்

கள். பிறருடைய ஆலோசனையாளராகவோ செயலாளர்களாகவோ செயலாற்றும் போது செயல்முறைகள் சிறப்பான பயன்களைத் தருவதாக அமையும். சுயமாகவோ சொந்தமாகவோ செய லாற்றினால் அவ்வளவாகப் பயன் தராது. உங்களிடம் ஏற்படக் கூடிய பெரியகுறை, சோம்பலும் அலட்சிய புத்தியும் தான். பொதுவாக நீங்கள் எந்த விடயத்திலும் ஆழ்ந்த பற்றுடையவர்களாக இருப்பது அரிது. அதனால் உங்களுக்கு எதிர்ப்புகளும் எதிரிகளும் அவ்வளவாக இருக்கமாட்டார்கள்.

உங்களோடு பழகியவர்கள் உங்களை விட்டுப் பிரிவதற்குச் சங்கடப்படுவார்கள். உங்களில் சிலரால் உங்கள் வாழ்க்கையில் பொருட்களைச் சேர்க்க முடியாமற் போனாலும் உலகப் போக்கு உங்களுக்கு ஒத்துவராமற் போனாலுங்கூட உங்கள் அகவாழ்வில் ஆன்மீகத் துறையில் நீங்கள் அதிக கவனஞ் செலுத்துவீர்கள். உலகில் பெறவேண்டிய நன்மைகளிலும் நலன்களிலும் பங்கு பெற முயல்வதில் தெய்வத்தின் துணையை நாடுவீர்கள்.

உங்களுக்கு இயல்பாகவே போதிய வசதிகள் அமைந்திருக்கும். அமையாவிட்டாலும் அமைந்தே தீரும். நீங்கள் சமூகத்தில் ஒரு தூண் போல விளங்குவீர்கள். பிறர் நம்புவதற்குத் தக்கவர்களாகவும் செயலில் உறுதியோடு உழைப்பவராகவும் அழுத்தமான பிடிப்புடன் செயலாற்றுபவராகவும் திகழ்வீர்கள். மண்வாகுக்கு ஏற்ப தாவரங்கள் செழிப்பது போல உலக வாழ்வில் கிடைக்கும் வாய்ப்புகளுக்கு ஏற்ப உங்கள் வாழ்வில் நீங்கள் வளம் பெறுவீர்கள். எதையும் மிகைப்படுத்துவது உங்களுக்குப் பிடிக்காது. அதற்கு நேர்மாறாக நடப்பதையும் நடத்துவதையும் நாணயமாகவும் கண்ணியமாகவும் நடத்துவீர்கள். குடும்பம், வீடு ஆகியவற்றில் குடும்ப வாழ்வின் அவசியத் தேவைகளையும் அன்றாடத் தேவைகளையும் அவ்வப்போது நிறைவு செய்து கொள்வீர்கள். விருந்தினர்களை உபசரிப்பதென்றாலே உங்களுக்கு உள்ளூர மகிழ்ச்சியாக இருக்கும். அதிதிகளாயினும் நண்பர்களாயினும் அவர்களுக்கு உபசாரம் செய்வதைப் பெருமையாகக் கருதுவீர்கள்.

உங்கள் தகுதியை எப்போதும் நிலை நிறுத்த முயல்வீர்கள். நீங்கள் உணவு, அருந்தும் போதும் உங்க ளுக்கு விருப்பமான பொருட்கள் அன்றாடம் அமைவதில் அக்கறை செலுத்துவீர்கள். உங்கள் குடும்ப கௌரவத்தை நீங்கள் பெரிதும் உயர்த்த விரும்பி உறுதியாக உழைப்பீர்கள். பரம்பரை ரீதியான விடயங்களை அனுசரிப்பதோடு உங்கள் குழந்தைகள் உறவினர்கள் நண்பர் களோடு பழகுவதில் உண்மையான மகிழ்ச்சியை அடைவீர்கள்! நீங்கள் வாழும் வீட்டை அலங்கரித்துக் கொள்வதில் கலை நுணுக்கத்தோடு எந்தப் பொருளையும்

## குணாதிசயங்கள்

சேகரித்துக் கொள்வீர்கள். நெற்றி வேர்வை நிலத்தில் விழப்பாடுபட வேண்டும் என்பது உழவனுக்கு மட்டுமே உரியதல்ல. அது உங்கள் வாழ்வில் உங்கள் செயலில் நீங்கள் கொண்டிருக்கும் உறுதியான கருத்தாக இருக்கும்.

நீங்கள் உங்கள் சக்தியை எல்லாம் செலவிட்டு செயல்களைச் செய்யச் சிரமப்படுவீர்கள். எதையும் எளிதில் முடித்துவிட நினைக்கமாட்டீர்கள். நீங்கள் செயல் செய்ய எண்ணிவிட்டால் மிகவும் வலிமையோடும் முழுபலத்துடனும் உறுதியுடனும் செய்து முடிப்பீர்கள். எதைப் பற்றியும் நிச்சயம் செய்வதில் சலனப்படவோ சபலமடையவோமாட்டீர்கள்.

எனவே, செயலில் வெற்றி இயல்பாகவே அமைந்து விடுவதுண்டு. உண்மயாக அனுபவத்தில் கண்டறிந்தவற்றை ஏற்பதில் நீங்கள் தயக்கமடைய மாட்டீர்கள்.

புதியவைகளையும் முயன்று பாராத முதல் முயற்சிகளையும் நீங்கள் விரும்பமாட்டீர்கள். உங்கள் கௌரவத்தைப் பாதிக்கும் எந்த விடயத்தையும் விலக்கிவிடுவீர்கள். உங்கள் வாழ்வின் ஆரம்ப காலத்தில் உங்களுக்குப் பழக்கப்பட்ட சிந்தனைகளையும் செயல்களையும் உங்களால் பிற்கால வாழ்வில் மாற்றிக் கொள்வது கடினம். நீங்கள் அவற்றையே பிடிமானமாகக் கடைப்பிடிப்பீர்கள்.

ரிஷபம், குரல்வள்ளை சம்பந்தப்பட்டது. எனவே நீங்கள் செயல் புரியும் அளவிற்கு அதிகமாகப் பேசமாட்டீர்கள். பெரும்பாலான பாடகர்களும் சங்கீத வித்துவான்களும் இந்த ரிஷபத்தில் பிறந்தவர்களாக இருக்கிறார்கள்.

கலை நுணுக்கமான எண்ணங்கள் உங்க ளுக்கு மிகவும் அதிகமாகத் தோன்றும் என்றாலும் அந்த எண்ணங் களைப் பிரதிபலிக்கும் வகையில் வீட்டின் உட்புற அமைப்பு ஆடையணி கலன்கள் ஆகியவற்றை அழகுபடுத்திக் கொள்வீர்கள். கலை கலைக்காகத் தான் என்று கருதமாட்டீர்கள். நீங்கள் எதையும் எளிதில் புரிந்து கொள்வீர்கள். நீங்கள் எதையும் சுற்றிவளைத்து சிந்தித்த பிறகே ஏற்பீர்கள். மொத்தத்தில் நீங்கள் மிகவும் நல்ல இயல்புடையவராகவும் உங்களைச் சுற்றியுள்ளவர்களை மெய்யாக நேசிப்பவராகவும் திகழ்வீர்கள்.

ஆனால் உங்களுக்குக் கோபம் வந்துவிட்டாலோ உங்களுக்குக் கோபம் வரும்படிச் செய்துவிட்டாலோ காளை மாட்டுக்குக் கோபம்வருவது போலத்தான் கோபம் வரும். அந்தக் கோபத்தில் இடிஇடிக்கும் பெருஞ் சூறாவளியாகக் கோபக் கனல் வீசும்! சரிக்கட்ட முடியாத சந்தர்ப்பங்களில் உங்களுக்கு இடைஞ்சலான சூழல்களிலும் உங்களுக்கு ஏதாவது செய்தேயாக வேண்டும் என்ற நிலையிலும் கூட உங்களுக்குக் கோபம் மூண்டுவிடும். மேலும் பத்தாம் பசலித்தனமான சமூகக் கொள்கைகள் உங்களுக்குப் பிடிக்காது.

# 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் நவநீதம்பிள்ளை கேள்வியெழுப்பினார்

## அமைச்சர் வாசு தெரிவிப்பு

(கொழும்பு)

வட மாகாண சபையை தமிழ் தேசிய கூட்டமைப்பு கைப்பற்றுமானால் அதன் பின்னர் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான அரசாங்கத்தின் விசேட பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்துகொள்ள வேண்டிய கட்டாயம் உருவாகும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஐ.நா. வுக்கு இலங்கை மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. தனியொரு அமைப்பே எதிர்ப்பு தெரிவித்துள்ளது. எதிர்காலத்தில் அது தனித்து போய்விடுமென்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழுவின் ஆணையாளர் நாயகம் நவநீதம் பிள்ளை நேற்று முன்தினம் சமூக ஒருமைப்பாடு மற்றும் தேசிய மொழிகள் தொடர்பான அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவை ராஜகிரியவிலுள்ள அமைச்சு அலுவலகத்தில் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்திய போதே ஆணையாளர் நாயகம் தேசிய பிரச்சினை தீர்வு தொடர்பாக கேள்வி எழுப்பிய போதே மேற்கண்டவாறு பதிலளித்ததாக அமைச்சர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் காலை 11.55 மணியளவில் நவநீதம்பிள்ளை ராஜகிரிய விலுள்ள சமூக ஒருமைப்பாடு மற்றும் தேசிய மொழிகள் தொடர்பான அமைச்சுக்கு வருகை தந்தார்.


11.55 மணிக்கு வருகை தந்த ஆணையாளர் நண்பகல் பகல் 12.40 மணிவரை பேச்சுக்களை நடத்திவிட்டு அங்கிருந்து வெளியேறினார்.

இப்பேச்சுவார்த்தைகளின் போது அமைச்சின் செயலாளர் உட்பட உயர் அதிகாரிகளும் வெளிநாட்டமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

பேச்சுவார்த்தையை அடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் இங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

முஸ்லிம் பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள், அடக்கு முறைகள், எதிர்க் கருத்துக்கள் தெரிவிக்கப்படுவது தொடர்பாக ஆணையாளர் நாயகம் என்னிடம் கேள்வியெழுப்பினார்.



இலங்கையில் வாழும் இனங்கள், மதங்களுக்கு எதிராக குரோதத்தை ஏற்படுத்தும் விதத்தில் கருத்துக்களை வெளியிடுவது, எழுதுவது பிரசாரம் செய்வதை தடை செய்ய வேண்டுமென்றும் அவ்வாறான செயற்பாடுகள் தண்டனைக்குரிய குற்றமாக சட்டமாக்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தி புத்திஜீவிகள் நிபுணர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி அது அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு அதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தையும் கோரியுள்ளதாக தெளிவுபடுத்தினேன்.

இதன் பின்னர் தேசிய பிரச்சினை தீர்வு தொடர்பில் எமது அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்பாக கேள்வி யெழுப்பினார்.

அதிகாரப் பரவலாக்கல் அர்த்தமுள்ளதாக மேற்கொள்ளப்பட வேண்டுமென்றால் சிங்கள தமிழ் இரு மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

அதற்கான நடைமுறை சாத்தியமான திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். கட்டாயம் சிங்களம் ,தமிழ் மொழிகள் கற்க வேண்டுமென்ற கொள்கையை நடைமுறை சாத்தியமாக முன்னெடுக்கின்றோம். அது தொடர்பில் தயாரிக்கப்பட்ட திட்ட அறிக்கையையும் கையளித்தோம். இப்படியான இரு மொழிக் கொள்கை கனடாவிலும் இல்லையென்றும் தெரிவித்தேன்.

இதற்கு பதிலளித்த ஆணையாளர் நாயகம் எனது கூற்றை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தார்.

பாராளுமன்ற விசேட தெரிவுக்குழு தொடர்பாக ஆணையாளர் நாயகம் என்னிடம் கேள்வியெழுப்பினார். 13ஆவது திருத்தத்தின் எதிர்காலம் தொடர்பிலும் கேட்டார்.

13ஆவது திருத்தத்தில் அதிகாரங்கள் குறைக்கப்படுமா திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமா என்பது தொடர்பில் தற்போது எதனையும் கூற முடியாது. இதற்காக விசேட பாராளுமன்ற தெரிவுக் குழுவை அரசாங்கம் அமைத்துள்ளது.

இதில் அனைத்து கட்சிகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். எனவே இதுவொரு நீண்ட கருத்துப் பரிமாற்றங்களுடனான செயற்பாடாகும். குறுகிய காலத்தில் தீர்வை எட்ட முடியாது என தெரிவித்தேன்.

வட மாகாண சபைத் தேர்தலுக்கு பின்னர் அங்கு ஆட்சியதிகாரம் உருவாக்கப்பட்ட பின்னர் அது எவ்வாறு இயங்குகின்றது என்பதை அவதானித்து மாகாண சபை முறைமை தொடர்பில் தீர்மானங்களை எடுப்பதற்கு வாய்ப்பு கிடைக்கும்.

கொழும்பில் மும்மொழிகளிலும் பெயர் பலகைகள் காணப்படுகின்றன. ஆனால் வடக்கில் தமிழ் மொழி மூலமான பெயர் பலகைகளை அகற்றி சிங்கள மொழி மூலமான பெயர் பலகைகளை அரசாங்கம் போடுகின்றதே என்ற கேள்வியை ஆணையாளர் நாயகம் என்னிடம் எழுப்பினார்.

வடக்கில் சில இடங்களில் இராணுவம் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இது பிழையானதாகும். இராணுவத்துக்கு இதற்கான அதிகாரம் கிடையாது. இது நிறுத்தப்பட வேண்டுமென இராணுவ தளபதிக்கு அறிவித்துள்ளதாகவும் பதிலளித்தேன்.

அத்தோடு மும்மொழி கொள்கையை கடுமையாக அமுல்படுத்த நடவடிக்கைகளை மேற கொண்டு வருவதாகவும் தெரிவித்தேன்.

ராவணா பலயவுக்கு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்த உரிமை உள்ளது. அன்று அமெரிக்கா வியட்நாம் மீது தாக்குதல் நடத்திய போது நாம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினோம்.

ஆனால் ஐ.நா. இலங்கைக்கு எதிராக போர் தொடுக்கவில்லையே? நவநீதம் பிள்ளைக்கு எதிராக, ஐ.நா.வுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தும் உரிமை ராவணா பலயவுக்கு உள்ளது.


ஆனால் இந்த எதிர்ப்போடு இலங்கை மக்கள் இணையவில்லை. ராவணா பலய தனித்து விட்டது.

வடமாகாண சபையை தமிழ் தேசிய கூட்டமைப்பு கைப்பற்றுமானால் அரசுடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிலைமை உருவாகும்.

அவ்வாறானதொரு நிலைமையில் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண அமைக்கப்பட்டுள்ள விசேட பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்துகொள்ள வேண்டிய .கட்டாயம் உருவாகும் என்றும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போன உறவுகளுக்காக கண்ணீரில் நனைந்தது யாழ். நகரம்




படங்கள்: எஸ்.ஆர்.கரன், உ.சாளன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடம்பன் சோலை விவசாயிகளுக்கு உரியவசதிகள் ஏற்படுத்தப்படவில்லை

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை சிறுபோகத்தில் அமோக விளைச்சல் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் புதுமுறிப்பு குளத்திற்கு கீழான அடம்பன் சோலையில் சிறு போகம் செய்த சிவநகர் கிராம விவசாயிகள் பாரிய நஷ்டத்தை அடைந்துள்ளனர்.**

உரியகாலத்தில் உரவகைகள் கிடைக்காமையும் நீர்வசதி உரிய முறையில் கிடைக்காது வாய்க்கால்கள் எவையும் சீர்செய்யப்படாமல் உள்ள நிலையுமே இதற்கான பிரதான காரணமென இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

களைகளை கட்டுப்படுத்துவதற்கு பாவித்த களை நாசினிகளும் நல்ல முறையில் செயற்படவில்லை.

இதனால் மட்டு மல்லாது அதிக வெப்பம் காரணமாக சடையன் நோய் கூடுதலாக பாதித்ததில் விவசாயிகள் நெல் விளைச்சல் கூடுதலாக பெற முடியாமல் பாரிய நஷ்டத்தை அடைந்துள்ளனர்.

1984 ஆம் ஆண்டு இப் பகுதியில் நெற்செய்கையை ஆரம்பித்த இம் மக்கள் தமக்கான உணவுத் தேவைக்காகவே இந்த நெற்செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

இருப்பினும் குறிப்பிட்ட காலப் பகுதியில் இருந்து இப்பகுதி வயல்களுக்கான வாய்க்கால்கள் சீரமைப்போ வீதிகள் ஒழுங்கமைப்போ எதுவுமே இதுவரை நடைபெறவில்லை.

பல அபிவிருத்திகள் நடைபெற்று வருவதாக பெரிதாக கூறப்படும் நிலையில் 236 வயற்காணிகளில் அபிவிருத்திகளை செய்து தருவதற்கு எவருமே முன் வருவதில்லை என இப்பகுதி விவசாயிகள் ஆழந்த கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக தற்போதைய சிறு போக நெற்செய்கையின் போது 8 ஆயிரம் ரூபாவிற்கு மேற்பட்டதாக தண்ணீர் பங்குகளை வாங்கி விதைத்த தோடுமட்டுமல்லாது, வங்கிகளில் பெற்ற கடனையும் திருப்பி செலுத்துவதற்கு முடியாத அவலம் ஏற்பட்டுள்ளதாக தெரவிக்கின்றனர்.

எனவே துறைசார்ந்தவர்கள் இப்பகுதியின் அபிவிருத்திக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நேரடியாக வருகைதந்து பார்வையிட்டு இவ்விவசாயகளில் அக்கறை கொண்டு செயற்படுமாறு அப்பகுதி விவசாயிகளால் வினயமாக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ம-254)




# வீதிகளை புனரமைத்து போக்குவரத்திற்கு உதவுங்கள்



(குருமன்காடு)


வவுனியா நகர சபை மற்றும் பிரதேச சபைக்குட்பட்ட பல வீதிகள் புனரமைக்கப்படாமையால் பயணிப்போர் பல அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர்.

போரினால் இடம் பெயர்ந்து மீளக் குடியேறி மூன்று வருடங்களாகியும் சேதமடைந்த வீதிகள் இன்னமும் புனரமைக்கப்படவில்லை.

பண்டாரிக்குளம், உக்கிளாங்குளம், சிதம்பரபுரம், கோவில்குளம், கோமரசன் குளம், தோணிக்கல், கூமாங்குளம், தவசிக்குளம் ஆகிய வீதிகள் உட்பட பல வீதிகள் புனரமைக்கப்படாதுள்ளது.

பாடசாலை மாணவர்கள் மற்றும் பயணிகள் வீதிகள் புனரமைக்கப்படாமையால் விபத்துக்களை எதிர்கொள்ளவேண்டிய நிலை உள்ளது.

எனவே துறைசார்ந்த அதிகாரிகள் இதனை கருத்திற்கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதிகளின் மக்களும் பயணிகளும் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர். (ம-250)



விசுவமடு வண்டிச் சவாரித்திடலில் மாட்டுவண்டிச்சவாரி போட்டி அண்மையில் இடம் பெற்றபோது....

# பூநகரி கமநல சேவை பிரிவில் காலபோக விவசாயக் கூட்டம்

(பூநகரி)

பூநகரி கமநல சேவை பிரிவில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் கால போக வேளாண்மை ஆரம்பிக்கவுள்ள நிலையில் 20 கமக்கார பிரிவுகளுக்கான 2013/2014 கால போக விவசாயக் கூட்டத்தை நடத்து வதற்கான ஒழுங்குகள் மேற்கொள் ளப்பட்டுள்ளதாக பூநகரி கமநல சேவை அலுவலர் திருமதி நிர்மலா தேவி பாலச்சத்திரன் கமக்கார அமைப்புகளுக்கு அறிவித்துள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி காலை 10 மணிக்கு மட்டுவில் நாடு கிழக்கு விவசாயிகளுக்கும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி காலை 10 மணிக்கு வாடியடி விவசாயிகளுக்கும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி காலை 10 மணிக்கு ஆலங்கேணி விவசாயிகளுக்கும் அதேதினம் பி.ப. 2 மணிக்கு சாமிப் புலம் விவசாயிகளுக்கும் நடைபெறவுள்ளது.

இக்கூட்டங்கள் யாவும் அந்தந்த கிராமங்களில் உள்ள பொது நோக்கு மண்டபங்களில் இடம்பெறவுள்ளது.

இக் கூட்டத்தில் கமத்தொழில் காப்புறுதி அவலுவலர், கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாய போதனாசிரியர், கிராம சேவை அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டு விளக்கமளிக்கவுள்ளதால் அனைத்து விவசாயிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கமநல சேவை அலுவலர் அறிவித்துள்ளார். (ம-84)

# கட்டாக்காலிகளால் சிரமத்தை எதிர்கொள்ளும் மக்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கட்டாக்காலிகள் அதிகமாக நடமாடுவதால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக கட்டாக்காலிகள் முல்லைத்தீவு மாவட்ட செயலக முன்னறல், சிலாவத்தை சந்தி, முல்லைத் தீவு பட்டணம், முள்ளியவளை பொதுச் சந்தை போன்ற இடங்களில் அதிகமாகக் காணப்படுகின்றன.

இதனால் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதுடன் விபத்துக்களும் இடம்பெறலாமென பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, இதற்கு தீர்வைப் பெற்றுத் தருமாறு மக்கள் சம்பந்தப்பட்டோரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-267)

# வருடாந்த உற்சவம்

பூநகரி ஜெயபுரம் அருள்மிகு வரசித்தி வழிப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி திங்கட்கிழமை மகா சங்காபிஷேக நிகழ்வு சாவகச்சேரி சிவ ஸ்ரீ பாலகுமார குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

உற்சவ கால 10 நாட்களும் சமய சொற்பொழிவுகளும் சுற்றாடலில் உள்ள ஆலயங்களில் கூட்டுப் பிரார்த்தனை குழுக்களினால் [illegible] பிரார்த்தனை இடம்பெறவுள்ள தென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ம-84)

# மாற்றுவலுவுள்ளோருக்கு சமூக நலனோம்பு அடையாள அட்டை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் மாற்று வலு வுள்ளோர்களுக்கு சமூக நலனோம்பு அடையாள அட்டை வழங்குவதற்கான இறுதிக் கட்ட வேலைத் திட்டம் நாளை வியாழக்கிழமையும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் நடைபெறவுள்ளது.

வட மாகாண சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்களின் இரு குழுவினர் ஒரே நேரத்தில் இவ் வேலைத் திட்டத்தில் ஈடுபடவுள்ள னர்.

இதில் நாளை வியாழக்கிழமை முதலாவது குழுவினர் காலை 8.30 மணி முதல் 10.30 மணிவரை சிவிக் சென்ரர் கிராம அலுவலர் பிரிவிலும் காலை 10.40 மணி முதல் பிற்பகல் 1.40 மணி வரை வட்டக்கச்சி கிராம அலுவலர் பிரிவிலும் பிற்பகல் 1.45 மணி முதல் மாலை 3.45 மணி வரை மாயவனூர் கிராம அலுவலர் பிரிவிலும் பிற்பகல் 4 மணி முதல் மாலை 6 மணி வரை மாவடியம்மன் கிராம அலுவலர் பிரி விலும் இவ் வேலைத் திட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

அதே தினம் இரண்டாவது குழுவினர் 8.30 மணி முதல் 10.30 மணி வரை புதுமுறிப்பு கிராம அலுவலர் பிரிவிலும் காலை 10.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை ஊற்றுப் புலம் கிராம அலுவலர் பிரிவிலும் பிற்பகல் 12.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை கோணாவில் கிராம அலுவலர் பிரிவிலும் மாலை 4.30 மணி முதல் பிற்பகல் 6.30 மணி வரை கண்ணகைபுரம் கிராம அலுவலர் கிராம அலுவலர் பிரிவிலும் இவ் வேலைத் திட்டம் மேற்கொள்ளவுள்ளனர்.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முதலாவது குழுவினர் காலை 7.30 மணி முதல் காலை 11 மணி வரை இராமநாதபுரம் கிராம அலுவலர் பிரிவிலும் இவ் வேலைத் திட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

அதே தினம் இரண்டாவது குழுவினர் காலை 7.30 மணி முதல் காலை 10 மணி வரை ஸ்கந்தபுரம் கிராம அலுவலர் பிரிவிலும் காலை 10 மணி முதல் 11.30 மணி வரை அக்கராயன் குளம் கிராம அலுவலர் பிரிவிலும் காலை 11.30 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை ஆனை விழுந்தான் கிராம அலுவலர் பிரிவிலும் 1.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை வன்னேரிக்குளம் கிராம அலுவலர் பிரிவிலும் இவ் வேலைத் திட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

இதற்காக அவர்கள் தமது குடும்ப அட்டை, அடையாள அட்டை சகிதம் அறிவிக்கப்படும் இடங்களில் உள்ள கிராம அலுவலர் அலுவலகங்களுக்கு உரிய நேரத்தில் சமூகமளிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-254)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புரிந்து கொள்ளாத போதும் பொறாமைப் படும் போதும் மனிதன் மற்றவனை முட்டாளாகக் கருதிவிடுகிறான்.

– ஷேக்ஸ்பியர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கிருஷ்ணர் சென்ற தூதை நவநீதம்பிள்ளை அறியவேண்டும்.

கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையில் சமரச முயற்சியில் ஈடுபட்டவர்கள் பலர். எனினும் எவருடைய சமரசத்தையும் கௌரவர் சேனையின் தலைவனான துரியோதனன் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஈற்றில் கிருஷ்ண பரமாத்மா தூது செல்கிறார். தூதுவனாக வருவது கிருஷ்ண பரமாத்மா என்று தெரிந்திருந்தும், துரியோதனன் தன் கபடப் புத்தியைக் காட்டவே செய்தான். தூதுவர் கிருஷ்ணன் அமர்வதற்கென பொறிப்பந்தல் அமைத்து, கிருஷ்ணரை அதில் இருத்தி அவரைப் பரலோகம் அனுப்பச் சதிசெய்தான்.

எனினும் உலகளந்த பெருமானாகிய கிருஷ்ணர் துரியோதனனின் அனைத்துக் கபடத் தனங்களையும் அழித்து துரியோதனனுடன் சமரசப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகிறார்.

தூதுவராக வந்தவரின் பலத்தை அறியாத அவன் சமரசத்தை நிராகரிக்கின்றான். இந்த இடத்தில்தான் குருஷேத்திரப் போருக்கு அறிவிப்பு விடுக்கிறார் கிருஷ்ணர்.

துரியோதனனின் அதர்மத்தையும் கபடத்தனத்தையும் நன்குணர்ந்த கிருஷ்ணர் போரை நடத்தி முடித்து, தர்மத்தை நிலைநாட்டத் திடசங்கற்பம் பூண்டார். குருஷேத்திரப் போர் ஆரம்பமாகிறது.

பார்த்தனுக்கு தானே சாரதியாக இருந்து தேரோட்டுகிறார் கிருஷ்ணர்.

சமரசத் தூது சென்றவர் தேர்ச் சாரதியாக வந்தது மட்டுமன்றி, போர்க்களத்தில் சோர்வுறும் அருச்சுனனுக்கு கீதோபதேசமும் செய்கிறார்.

பாரத இதிகாசத்தில் இவ்விடம் மிகவும் அற்புதமானது. இந்த இடத்தை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அறிந்திருப்பது அவசியமானது. இலங்கைக்கான அவரின் விஜயம் இந்த நாட்டில் அல்லல்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கச் செய்வதாகும். நீதியை நிலைநாட்ட – தர்மத்தை நிலைநிறுத்த வருகைதரும் நவநீதம்பிள்ளைக்கு எதிராக தென்பகுதியில், புத்தபிக்குகள் கூட ஆர்ப்பாட்டம் செய்தனர். தமிழர்களுக்கு எதிராக நடந்த அநீதிகளைப் புரிந்து கொள்வதற்கு இந்த ஆர்ப்பாட்டம் ஒன்றே போதுமானதாகும்.

இதுதவிர, யாழ்ப்பாணத்திற்கும் வன்னிப் பிராந்தியத்திற்கும் வருகைதந்த நவநீதம்பிள்ளை வடபுலத்தின் சமகால நிலைமைகளை சுதந்திரமாக அறிந்து கொள்வதற்கு அரசு அனுமதி கொடுத்திருக்க வேண்டும். இவ்வாறு அனுமதி கொடுத்திருந்தால், பிள்ளைகளை இழந்து கதறி அழும் தாய்மாருடன் நவநீதம்பிள்ளை கலந்துரையாடச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கும். ஆனால் இதற்கெல்லாம் சந்தர்ப்பம் வழங்கப்படாததன் மூலம் தமிழ் மக்களின் அவலத்தை அவர் உணரமுடியும்.

எனவே கிருஷ்ண தூதின்படி நவநீதம்பிள்ளை நடந்து கொள்வதே ஒரே வழி. இதற்காக அவர் தேரோட்ட வேண்டாம். ஜெனிவாவில் இருந்து கடிவாளத்தைப் பிடித்தால் போதும் தர்மத்தின் தேர் இலங்கையில் ஓடும்.

# வெளிநாட்டுத் தூதுவர்களை சந்தித்தார் நவநீதம்பிள்ளை

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கான அமெரிக்கா மற்றும் இந்தியா உள்ளிட்ட முக்கியமான நாடுகளின் தூதுவர்கள் சிலரைச் சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளார்.

கொழும்பிலுள்ள சினமன்லேக் நட்சத்திர விடுதியில் மூடப்பட்ட அறைக்குள் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது மனிதவுரிமை விவகாரம் மற்றும் நல்லிணக்க முயற்சிகள் குறித்து முக்கிய கவனம் செலுத்தப்பட்டதாக தெரியவருகிறது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் சிஸன், இந்தியத் தூதுவர் யஸ்வன்ந்த் குமார் சின்ஹா, அவுஸ்திரேலியத் தூதுவர் றொபின் முடி, பிரான்ஸ் தூதுவர் கிறிஸ்ரின் றொபிசொன் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இராஜதந்திர விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரி ரெர்ஹி லெரினென் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டுள்ளனர்.

இதன்போது நல்லிணக்க முயற்சிகள் தொடர்பில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் யஸ்வன்ந்குமார் சிங்ஹாவும் இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்து ஏனைய மேற்கத்தைய நாடுகளின் தூதுவர்களும் கருத்துக்கள் தெரிவித்ததாக அறியக்கிடைக்கிறது.

அத்துடன், இலங்கைக்கான தனது பயண நிகழ்ச்சி நிரல் குறித்து வெளிநாட்டுத் தூதுவர்களிடம் ஐ.நா மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இந்தச் சந்திப்பில் எடுத்துக் கூறியதாகவும் தெரியவருகிறது. (எ-1)

# இலங்கைக்கும் பெலாரஸுக்கும் இடையில் ஏழு உடன்படிக்கைகள்

(கொழும்பு)

இலங்கைக்கும் பெலாரஸுக்குமிடையில் ஏழு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

பெலாரஸ் நாட்டுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்நாட்டு ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகன்ஷன்கோவை சந்தித்த வேளை இவ் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் மாலை பெலாரஸ் அலெக்சாண்டர் லுகன்ஷன் கோவை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

கலந்துரையாடலின் பின்னதாக இரு நாட்டு தலைவர்களின் முன்னிலையில் உடன்படிக்கைகள்கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இதன்பிரகாரம் வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கை குற்றவியல் தொடர்பான விடயங்களின்போது பரஸ்பர சட்ட ஒத்துழைப்பு தொடர்பான சாசனம், சட்டம் தொடர்பான புரிந்துணர்வு உடன் படிக்கை, இராஜதந்திர மற்றும் உத்தியோகபூர்வ விமான பயணச் சீட்டுடையவர்களை விசாக்களிலிருந்து விடுவித்தல், இரு நாடுகளுக்குமிடையிலான இரட்டை வரிவிதிப்பை தடுக்கும் உடன்படிக்கை, சுற்றுலாத்துறையின் ஒத்துழைப்பு தொடர்பான உடன்படிக்கை மற்றும் இராணுவத்துறையில் தொழில் நுட்ப ஒத்துழைப்பு தொடர்பான உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

## இந்துவாக வாழ்வோம்

நல்லைக் கந்தப்பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்கள்

27.08.2013க்கான வினாவும் விடையும்:-

வினா:-வேலின் தத்துவம் யாது?

விடை: வேல் ஞானத்தைக் குறிக்கின்றது. ஞானமானது ஆழமானதாகவும் அகன்றதாகவும் கூர்மையானதாகவும் இருக்க வேண்டும். (ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே... சிவபுராணம்)

28.08.2013: வினா:- சடங்குகளுக்கும் சம்பிரதாயங்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் எவை?

விடை நாளை...

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடைகளை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி (01.09.2013) நண்பகல் 12 மணிமுதல் பிற்பகல் 4 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் கையளிக்கும் போது துணுக்குகளில் வரும் கேள்விகளுக்கு சரியான பதிலைச் சொல்லும் அனைவருக்கும் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும். 18 வயதிற்குட்பட்டவர்கள் மட்டும் பங்குபற்றலாம்.

சின்மயா மிஷன்
யாழ்ப்பாணம்

இல.9, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்.

## தேரேறி வருகின்றான் எங்கள் நாராயணன்



பொன்னாலையில் கோயில்கொண்ட
எங்கள் வரதராஜனே
ஆமைவடிவம் கொண்டாய்–நீ
பாற்கடலில் பள்ளி கொள்ளும்
பரந்தாமனே எங்கள் நாயகனே
துன்பம் துடைக்க வந்த மாதவனே
துதிக்கின்றோம் நிதமும் உன்னை
அலைகடலில் அமர்ந்தாய்– நல்ல
அற்புதங்கள் புரிகின்றாய்
இன்று தேரேறி வருகின்றாய்– எம்
அஞ்ஞானத்தை அழிப்பதற்கும்
நல்ஞானம் தருவதற்கும்– கோபாலனே
இன்று தேரில் ஏறி வருகின்றாய்

வி.ஹரிச்சந்திரன், சுழிபுரம்

## மின்னல் தாக்கி குடும்பப் பெண் பலி

(மல்லாவி)

மின்னல் தாக்கி குடும்பப் பெண் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணியளவில் மாங்குளம் நீதிபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பெண் கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்துக்கொண்டு வீட்டுக்குச் செல்லும் போது மின்னல் தாக்கி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கோபாலபிள்ளை நிர்மலா தேவி (வயது 26) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்தவராவார்.

சடலம் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைக்காக மாங்குளம் பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-1)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## நிஜமான படிப்பு எது?



❖மீன்கொத்திப் பறவைபோன்று உலகத்தில் வாழ்ந்திரு. அது நீருக்குள் மூழ்குகின்ற போது சிறகுகளில் கொஞ்சம் நீர் ஒட்டிக்கொண்டிருக்கிறது.

❖வெளியில் வந்து சிறகுகளைக் குலுக்கியதும் ஒட்டிக் கொண்டிருக்கும் நீர் அகன்றுவிடுகிறது. அதுபோல் உலக வாழ்க்கையில் பற்றற்றவராய் இருங்கள்.

❖பணபலம் உடையவர்கள் தங்களுடைய செல்வத்தை சொந்த நலனுக்கு மட்டுமல்லாது தங்களுக்குத் தெரிந்து கஷ்டப்படுகின்ற மக்களுக்கும் பிணியால் வாடும் நோயாளிகளுக்கும் உதவி புரிவதைத் தங்களின் தலையாய கடமையாகக் கொள்ள வேண்டும்.

❖ உலகைப் படைத்த இறைவனே அனைத்துமாய் இருக்கிறார் என்ற மெய்ஞ்ஞானம் வரும் வரையில் மனிதனுக்குப் பிறவிகள் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கும் வெறும் படிப்பால் மட்டுமே பயன் ஒன்றும் விளையாது.

❖ கற்பது என்பதே கடவுளைப் பற்றி அறிவதற்கான உபாயம் என்பதை உணர்ந்து கற்கவேண்டும். மற்ற படிப்பெல்லாம் வெறும் உலகியல் கல்வியாகும்.

❖கடவுளை அறிவது என்பது என்றென்றும்உறுதுணையாய் நம்முடனே வரும். தெய்வீகப் படங்களை நமது அறையில் கண்பார்வையில் படும்படி மாட்டி இருப்பது நல்லது. ஏனென்றால் நாம் காணுகின்ற காட்சியினால் மனம் நல்ல அருள் உணர்வுகளை மேலும் பலப்படுத்திக்கொள்ளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதலாவது கரீபியன் பிறீமியர் லீக்கின் இறுதியாட்டம் அண்மையில் குயின்ஸ்பார்க் ஓவல் மைதானத்தில் இடம்பெற்றது.
இந்த இறுதி ஆட்டத்தில் ஜமைக்கா அணியை எதிர்த்து கயானா அணி மோதியது. இவ் ஆட்டத்திலே ரசிகர் ஒருவர்........

# சச்சினின் சாதனையை நெருங்குவாரா கலிஸ்?



தென்னாபிரிக்காவின் சகல துறை வீரர் ஜக்கலிஸ் துடுப்பெடுத்தாடும்போது நிலைத்து நின்று ஆட ஆரம்பித்தால் பின்னர் அவரை ஆட்மிழக்கச் செய்வது என்பது எளிதான காரியமல்ல. இது பாடசாலை நாட்களிலிருந்தே அவருடைய இயல்பாக இருந்தது என்று அவருடைய சிறிய வயது பயிற்சியாளரும், வழிகாட்டியுமான கீத் ரிச்சர்ட்சன் தெரிவித்தார்.

விரோதம் பாராட்டும் அவுஸ்திரேலியர்கள் கூட கலிஸ் விளையாட ஆரம்பித்தால் தனி உலகத்தில் இருப்பார் என்று ஒரு முறை தெரிவித்துள்ளார்கள்.

கலிஸ் இதுவரை 162 டெஸ்ட் (274 இன்னிங்ஸ்) போட்டிகளில் ஆடி 13,128 ஓட்டங்கள் எடுத்துள்ளார். அவரது சராசரி ஓட்ட விகிதம் 56.10 ஆக உள்ளது. சச்சின் டெண்டுல்கர் 198 போட்டிகளில் (327 இன்னிங்ஸ்) ஆடி 15,837 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

இவரது ஓட்ட விகித சராசரி 53.86ஆக உள்ளது. எனவே, கலிஸ தொடர்ந்து 327 இன்னிங்ஸ் விளையாடினால், தற்போது அவருக்கு உள்ள ஓட்ட விகிதத்தில் நிச்சயம் சச்சின் டெண்டுல்கரின் சாதனையை முறியடிப்பார் என்று கூறப்படுகின்றது.

சச்சினை விட இரண்டரை வயது சிறியவரும், ஆட்டத்திறன் கொண்டவருமான கலிஸ் கடந்த 17 டெஸ்ட் போட்டிகளில் 46 ஓட்டங்கள் சராசரியில் 1181 ஓட்டங்கள் எடுத்துள்ளார். சச்சின் 31 ஓட்டங்கள் சராசரியில் 872 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதனைக் கணக்கிடும்போது, கலிஸின் பயிற்சியாளரான கீத் ரிச்சர்ட்சன். அவர் சச்சினின் சாதனையை முறியடிக்காமல் ஓய்வுபெறமாட்டார் என்று உறுதிபடக் கூறுகின்றார்.

# அடுத்த சுற்றுக்குள் நடால்

அமெரிக்காவின் நியூயோர்க் நகரத்தில் யுஎஸ் திறந்த ரெனிஸ் சுற்றுப் போட்டிகள் நேற்று ஆரம்பமாகின. இதில், ரபேல் நடால் முதல் சுற்றில் ரயான் ஹாரிசனை எதிர்கொண்டார். 6-4,6-2,6-2 என்ற நேர்செட்களில் ஹாரிசனை தோற்கடித்து நடால் எளிதாக அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். இது கடின ஆடுகளத்தில் அவர் பெறும் 16ஆவது தொடர் வெற்றியாகும். இந்த சீசனில் இதுவரை ஐந்து தோல்விகளை மட்டும் சந்தித்து 54 வெற்றிகளைப் பெற்றுள்ள நடால் இந்த சாதனையை 28 வெற்றியாளர்களுடன் பகிர்ந்து கொள்கின்றார். இந்த வெற்றி குறித்து தனது மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொண்ட நடால், முதல் போட்டியில் வெற்றி பெறுவது முக்கியமானதாகும் என்று குறிப்பிட்டார்.

# சம்பியன்ஸ் லீக் போட்டிகளில் இருந்து ஒதுங்கினார் மலிங்க

சம்பியன்ஸ் லீக் ருவென்ரி ருவென்ரி தொடரில் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க பங்குபெற மாட்டார் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்தோடு, இலங்கையின் சிம்பாவே தொடரிலும் அவர் பங்குபெறுவது சந்தேகத்திற்குரியதாக மாறியுள்ளது.

சிம்பாவே தொடரில் பங்குபற்றாது விடுவதற்கான கோரிக்கையை லசித் மலிங்க இலங்கை கிரிக்கெட் சபையிடம் விடுத்துள்ளார். தனிப்பட்ட காரணங்கள் காரணமாகவே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இந்தக் கோரிக்கை லசித் மலிங்கவால் முன்வைக்கப்பட்டதாகவும், அது தொடர்பான முடிவு இன்னமும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவித்த இலங்கை கிரிக்கெட் சபையின் செயலாளர் நிஷாந்த ரணதுங்க.



ஆஷஸ் தொடரின் வெற்றியை ரசிகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றார் இங்கிலாந்தின் அதிரடி வீரர் கெவின் பீற்றர்சன்.

# இங்கிலாந்து பிறீமியர் லீக் போட்டி முடிவுகள்



இடம்பெற்றுவரும் இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடரின் இரண்டாவது வார இறுதிக்கான போட்டிகள் இடம்பெற்று முடிந்துள்ளன.

பெரும்பாலான போட்டிகளில் எதிர்பார்த்த அணிகள் வெற்றிபெற்றிருந்த போதிலும், மன்செஸ்ரர் சிட்டி அணி அதிர்ச்சித் தோல்வியடைந்தது.

கார்ட்டிஃப் சிட்டி அணிக்கும், மான்செஸ்ரர் சிட்டி அணிக்குமிடையிலான போட்டியில் கார்டிஃப் சிட்டி அணி 3 - 2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

கார்டிஃப் சிட்டி சார்பாக பிரேஷியர் கம்ப்பெல் 2 கோல்களையும், அரோன் கண்ணர்ஸொன் ஒரு கோலையும் பெற்றனர். மான்செஸ்ரர் சிட்டி சார்பாக டின் ஸெகோ, அல்வரோ நிக்ரெடோ இருவரும் தலா ஒரு கோலைப் பெற்றனர்.

ரொட்டென்ஹம் ஹொட்ஸ்பர்ஸ் அணிக்கும், ஸ்வன்சீ சிட்டி அணிக்குமிடையிலான போட்டியில் றொபேர்ட்டோ சொல்டோ 58 ஆவது நிமிடத்தில் பெற்றுக் கொடுத்த கோலின் உதவியுடன் ரொட்டென்ஹம் ஹொட்ஸ்பர்ஸ் அணி 1 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஃபுல்ஹாம் அணிக்கும், ஆர்சனல் அணிக்குமிடையிலான போட்டியில் ஆர்சனல் அணி 3 - 1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. ஆர்சனல் சார்பாக லூகாஸ் பொடோல்ஸ்கி 2 கோல்களையும், ஒலிவர் கிரோட் ஒரு கோலையும் பெற்றதோடு, ஃபுல்ஹாம் சார்பாக டெரன் பென்ற் ஒரு கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

எவேர்ட்டன், வெஸ்ற் ப்ரோம்விச் அணிகளுக்கிடையிலான போட்டி கோல்களெவையும் பெறப்படாது சமநிலையில் முடிவடைந்தது.

ஹள் சிட்டி அணிக்கும், நோர்விச் சிட்டி அணிக்குமிடையிலான போட்டியில் ஹள் சிட்டி அணி சார்பாக றொபேர்ட் பிராடி பெற்றுக் கொடுத்த கோலின் காரணமாக அவ்வணி 1 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

நியூகாசில் யுனைட்டட் அணிக்கும், வெஸ்ற் ஹாம் யுனைட்டட் அணிக்குமிடையிலான போட்டி கோல்களெவையும் பெறப்படாது சமநிலையில் முடிவடைந்தது.

சௌதம்டன், சண்டர்லாண்ட் அணிகளுக்கிடையிலான போட்டி 1 - 1 என்ற கோல் கணககில் சமநிலையில் முடிவடைந்தது. சௌதம்டன் சார்பாக ஜோஸ் மிகுவேல் பொன்ரியும், சண்டர்லான்ட் சார்பாக எமானுவேல் கியச்செரினியும் கோல்களைப் பெற்றனர்.

ஸ்ரோக் சிட்டி அணிக்கும், கிறிஸ்ரல் பலஸ் அணிக்குமிடையிலான போட்டியில் ஸ்ரோக் சிட்டி அணி 2 - 1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. ஸ்ரோக் சிட்டி சார்பாக சார்லி அடம், றயன் ஷாவ்க்றொஸ் ஆகியோர் தலா ஒரு கோலையும், கிறிஸ்ரல் பலஸ் அணி சார்பாக மரோனே சமக் ஒரு கோலையும் பெற்றனர்.

லிவர்பூல், அஸ்ரன் வில்லா அணிகளுக்கிடையிலான போட்டியில் லிவர்பூல் அணி 1 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. அவ்வணி சார்பாக டானியல் ஸ்ரர்ட்ஜ் கோலொன்றைப் பெற்றுக் கொடுத்தார்.


YAMAHA

விசேட விலைக்கழிவு

நீங்கள் விரும்பும் YAMAHA
மோட்டார் சைக்கிள் இப்போது
புதிய வர்ணங்களிலும்
புதிய விலைகளிலும்



40,000 ஆயிரம் தொடக்கம்
52,000 ஆயிரம் வரை விசேட விலைக்கழிவு



| | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| Ray | 215,000.00 | 211,000.00 |
| SZ-X | 316,000.00 | 278,000.00 |
| SZ-R | 326,000.00 | 298,000.00 |
| FZ-16 | 375,000.00 | 335,000.00 |
| FZ-S | 399,000.00 | 347,000.00 |
| Fazer | 436,900.00 | 393,000.00 |

கையிருப்பு உள்ளவரை மட்டுமே!

உங்கள் தெரிவுகளுக்கு இன்றே முந்துங்கள

A.M.W. (Pvt) Ltd இன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்

டிஜிற்றல் எலக்ரோனிக்ஸ்

62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 0776623824/ 2224040

குஞ்சர் கடைச் சந்தி, நெல்லியடி. 0779893343

(சி-4483)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொளுத்தும் வெயிலில் கதறினர்...

பதியின் பாதுகாப்புப்பிரிவினர் அவரை நூலகத்தின் பின் வாயிலால் அழைத்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

காணாமல் போனோரை மீட்டுத்தாருங்கள் என கோரி நவநீதம் பிள்ளையின் வருகையினை அடுத்து யாழ்.பொது நூலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

இப் போராட்டத்தில் ஆயிரக் கணக்கானோர் பங்கேற்று தமது உறவுகளினை கண்டு பிடித்து தருமாறு வீதியில் கிடந்து கதறியழுதனர்.

நவநீதம்பிள்ளை அம்மையாரின் சந்திப்பதற்காக நின்ற இம் மக்கள் இறுதியில் அவரை சந்திக்க முடியாதவாறு ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவினர் அழைத்து சென்றமையினால் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் ஆணையாளரினை சந்திக்க முடியாமல் ஏமாற்றமடைந்தனர்.

ஆயிரக்கணக்கில் திரண்ட மக்கள் வடக்கில் இடம்பெறுகின்ற காணி அபகரிப்பு, இராணுவத்தின் அடக்குமுறை, காணாமல் போதல்கள், தென்பகுதி மீனவர்களின் அத்து மீறல் என்பவற்றுக்கு எதிராக குரலெழுப்பியதோடு மீள்குடியேற்றம், காணாமல் போதல்களினை நிறுத்தக்கோரியும் கோசம் எழுப்பினர்.

காணாமல் போனவர்களினை கண்டுபிடித்து தாருங்கள் என காணாமல் போனவர்களின் உறவுகள் ஒன்றித்து கதறியழுததனால் அவ்விடம் முழுவதும் சோக மயமாக காட்சியளித்ததோடு ஊடகவியலாளர்கள் மற்றும் சில தமிழ்ப் பொலிஸாரின் கண்களில் இருந்தும் கண்ணீர் பெருக்கெடுத்தோடியது.

இழப்பதற்கு இனியொன்றுமில்லை அரசினை நம்பியும் இனி பயனில்லை அதனால் தான் நாம் நவநீதம்பிள்ளை அம்மையாரிடம் எமது பிரச்சினைகளினைக் கூற வந்தோம் என கூறி கதறியழுதனர்.

காணாமல் போன எமது உறவுகளினை மீட்டுத்தாருங்கள், காணி உரிமையினை அடிப்படை உரிமையாக ஏற்று அதை யாப்பில் உள்ளடக்க ஒன்றிணைவோம், முள்ளிக்குளம் மக்களிற்கு சொந்தமான இரண்டாயிரத்து 500 ஏக்கர் காணி மற்றும் வீடுகள் கடற்படையினருக்கு 215 குடும்பங்கள் 6 மறிச்சிக் கட்டி காட்டிற்குள் அகதிமுகாமில், அம்மையாரே உங்களை வரவேற்கின்றோம் நாம் எமது மண்ணில் குடியேற உதவி செய்யுங்கள்.

மக்களின் காணிகளை கொள்ளையிடுவதை உடன் நிறுத்து ! மீனவர் விவசாயி தொழிலாளர்கள் நாங்கள் பிறந்த மண்ணிலிருந்து அவர்களை அகதியாக்காதே, வலி வடக்கில் நிலங்களை அபகரிக்காதே, என பல கோசங்கள் எழுப்பியதோடு பதாகைகளினையும் ஏந்தியிருந்தனர்.

காணாமல் போனோரின் படங்களினை ஏந்தியவாறு உறவுகள் கதறியழுதமையினால் யாழ். நகரமே சோகத்தில் மூழ்கியது போன்று காணப்பட்டது.

இறுதிப் போரில் காணாமல் போனமை, இராணுவத்தினால் கொண்டு செல்லப்பட்டமை என பல்வேறு சந்தர்ப்பங்களில் காணாமல் போன உறவுகளின் உறவுகளே கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நவநீதம்பிள்ளையினை பொது நூலகத்திற்கு சென்று சந்திக்க முயன்ற போதிலும் பொலிஸாரும், புலனாய்வாளர்களும் அம்மக்களினை தடுத்து நிறுத்தினர்.

நவநீதம்பிள்ளை பொதுநூலகத்திற்கு வருவதற்கு முன்னதாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களிடம் நவநீதம் பிள்ளையின் வருகை பிற்போடப்பட்டுள்ளது என பொலிஸார் கூறியதாக பாதிரியார் ஒருவர் தெரிவித்தார்.

எனினும் எம்மை அவ்விடத்திலிருந்து துரத்தியதன் பின்னர் நவநீதம்பிள்ளை இவ்விடத்திற்கு குறிப்பிட்ட நேரத்திற்கு அழைத்து வரப்பட்டார் எனவும் அப் பாதிரியார் மேலும் தெரிவித்தார்.

நவநீதம்பிள்ளை பொதுநூலகத்தினை விட்டுச் சென்றதும் காணாமல் போனோரின் உறவுகள் ஏமாற்றத்தின் மிகுதியினால் இறைவா! ஏன் எங்களினை இந்தளவிற்கு சோதிக்கின்றாய் என கூறி கதறியழுதமை பார்ப்போர் நெஞ்சங்களில் கனதியினைத் தந்தது.

பின்னர் அவ்விடத்தில் ஒரு மணித்தியாலம் வரையில் வீதியல் இருந்து கதறியழுத பின்னர் அவ்விடத்தினை விட்டு இயலாமையினால் வெளியேறினர்.

கவனயீர்ப்பு போராட்டத்தில் மன்னார், திருகோணமலை உட்பட அனைத்து மாவட்ட மக்களும் பங்கேற்றிருந்த போதிலும் ஒரு தொகை மக்கள் இராணுவத்தினால் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர் எனவும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் குற்றஞ் சாட்டியுள்ளது.

இவ் கவனயீர்ப்பில் தமிழ்த் தேசிய முன்னணி, தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், காணாமல் போனோரை தேடியறியும் குழு, அரசியல் கைதிகளை விடுதலை செய்வற்கான அமைப்பு, வலி வடக்கு மீள்குடியேற்றக் குழு, மற்றும் மன்னாரினைச் சேர்ந்த பாதிரியர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாதிரியர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர். (எ-4,6)

# இராணுவ ஆட்சியின்...

வர்களின் உறவினர்கள் கண்ணீர் விட்டு அழுதபடி தெரிவித்தனர்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை நேற்றைய தினம் முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட அதாவது இறுதிக்கட்டப் போரின் போது அதிகளவான மக்கள் கொல்லப்பட்ட முள்ளிவாய்க்கால் பகுதிக்கு பிற்பகல் 2.30 மணியளவில் சென்று அப்பகுதியில் மீள் குடியேற்றப்பட்ட மக்களைச் சந்திதது கலந்துரையாடினார்.

இதன்போதே ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் காணாமல் போனவர்களின் உறவினர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இதேவேளை புதுமாத்தளன் பகுதியில் மக்களை ஆணையாளர் சந்தித்த போதும் காணாமல் போனவர்கள் தொடர்பாக உறவினர்கள் முறையிட்டனர்.

ஆணையாளருடனான சந்திப்பின் போது அவர்கள் மேலும் கூறியதாவது,

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு நான்கு வருடங்கள் நிறைவடைந்த நிலையிலும் கூட இன்றுவரை யுத்தகால பகுதியில் காணாமல் போன எமது பிள்ளைகளையும் உறவினர்களையும் தேடியலைந்து திரிகின்றோம்.

எத்தனையோ போராட்டங்களை நடத்தியுள்ளோம். இருப்பினும் எந்தவித பயனும் இல்லை. மேலும் வீடுகள் அமைத்து தரப்படவில்லை. மலசல கூடவசதிகள் இல்லை, குடிநீர் வசதியில்லை, இர்ாணுவக் கட்டுப்பாட்டு பிரதேசமாகவே எமது வாழ்விடங்கள் காணப்படுகின்றன.

நீங்கள் இங்கு வரப்போகிறீர்கள் என்று அறிவிக்கப்பட்ட பின்பு பல மாற்றங்களை இராணுவத்தினர் இரவோடு இரவாக மேற்கொண்டுள்ளனர்.

இராணுவக் காவலரண்களையும் இறுதிக்கட்டப் போரின்போது சேதமடைந்த வாகனங்களின் குவியல்களையும் அப்புறப்படுத்தி இங்கு எதுவுமே நடக்கவில்லை என்ற தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

ஆனால் நீங்கள் சென்றபின்பு மீண்டும் தாங்கள் அந்த இடங்களில் இராணுவ காவலரண்களை அமைக்கவுள்ளதால் அந்த இடங்களுக்கு யாரும் செல்லக் கூடாது எனவும் எமக்கு உத்தரவு போட்டுள்ளனர்.

இவ்வாறு இராணுவ அடக்கு முறைகளுக்கு மத்தியில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

அபிவிருத்தி செய்வதாகக் கூறுகின்றனர். ஆனால் தற்போதும் தொழில் வாய்ப்புகள் ஏதுமின்றி தொழிலுக்குச் செல்ல முடியாத நிலையிலுமே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

எமது பிரச்சினைகளை நாம் உங்களிடம் கூறிவிட்டோம். எமக்கு எவ்வாறான பிரச்சினைகள் ஏற்படப் போகிறதோ தெரியவில்லை. அதற்குப் பயந்து உண்மைகளை நாம் மறைக்க முடியாது.

எமது காணிகள் சுவீகரிக்கப் படுகின்றன. எங்களை அடித்து விரட்டிவிட்டு சிங்கள மக்களை கொண்டுவந்து குடியேற்றுகிறது இந்த அரசாங்கம்.

ஜனாதிபதி வந்து எங்களுடைய காணிகளில், குடியேற்றப்பட்ட சிங்களவர்களின் குடும்பங்களுக்கு உறுதிகளைக் கொடுத்து விட்டுச் செல்கிறார்.

இதுதான் எமது அவல நிலை என ஆணையாளர்நவநீதம பிள்ளையிடம் மக்கள் நேரடியாகவே தெரிவித்தனர். (எ-6,267)

# தமிழருக்குத் தீர்வு...

இறுதிக்கட்டப் போரின்போது தமிழர்கள் அதிகளவில் கொல்லப்பட்ட முள்ளிவாய்க்கால் பகுதியில் மீள்குடியேற்றப்பட்ட மக்களுடன் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் சந்திப்பினை மேற்கொண்ட போதே நவநீதம்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

உங்களைச் சந்திப்பிதற்காக நீண்ட தூரத்திலிருந்து வருகை தந்துள்ளேன். என்னால் முடிந்தளவு உங்களுடைய பிரச்சினைகளை பிரதிபலிக்கும் வகையில் நான் வேலை செய்வேன்.

அரசாங்கத்தரப்பினருடன் கொழும்பில் சந்திப்பினை மேற்கொள்ளும்போது கண்டிப்பாக உங்களுடையப் பிரச்சினைகள் தொடர்பாக கேள்வி எழுப்புவேன்.

ஐக்கிய நாடுகள் சபை ஊடகவும் வேறுபல உதவிகளையும் வழங்க நடவடிக்கை எடுப்பேன்.

என்னால் முயற்சி செய்ய மட்டுமே முடியும். இருப்பினும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் என்ற ரீதியில் உங்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் வரை அதிகாரத்தை பிரயோகிப்பேன்.

இந்த முறை மட்டுமல்லாது தொடர்ந்தும் உங்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் வரை முயற்சிப்பேன் எனக் கூறிய போது, அம்மா முதலில் எங்களுடைய பிள்ளைகளை மீட்டுத்தாருங்கள என சந்திப்பில் கலந்து கொண்டிருந்த பெண் ஒருவர் கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

# வேட்பாளர்களிடையே...

சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக அங்கஜன் இராம நாதனின் பிரத்தியோக செயலாளர் சீலன் தெரிவிக்கையில்,

தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முடித்துக் கொண்டு யாழ.நோக்கி திரும்பிக்கொண்டி ருந்தபோது சாவகச்சேரி மிருசுவில் பகுதியில் வைத்து வடமாகாண சபை தேர்தலில் போட்டியிடும் எஸ். சர்வானந்தாவும் அவரது ஆதரவாளர்களும் அங்கஜன் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் இதன்போது அங்கஜனின் பொலிஸ் பாதுகாவலர் திஸா நாயக்க என்பவர் தோள் பட்டையில் காயமடைந்ததாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் எஸ்.சர்வானந்தா தெரிவிக்கையில்,

சாவகச்சேரி மிருசுவில் பகுதியில் அமைந்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்சி அலுவலகத்தில் நானும் எனது சகாக்களும் நின்று கொண்டிருந்த போது அங்கஜனும் அவரின் சகாக்களும் வாகனத்தில் வந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் இதில் சிறி என்பவர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

இச் சம்பவம் தொடர்பில் இரு தரப்பினராலும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-4,6,11)

## விபத்தில் தந்தை பலி; மகன் படுகாயம்

வல்வெட்டித்துறை உடுப்பிட்டிப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் தந்தை உயிரிழந்ததுடன் மகன் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இவ் விபத்தில் தொண்டைமானாறு பிரதேசத்தைச் சேர்ந்த மோகனறஞ்சன (வயது 37) என்பவர் உயிர் இழந்துள்ளார். அவரது மகனான முகிலன் (வயது 10) படுகாயமடைந்துள்ளார்.

தொண்டைமானாறுப் பகுதியில் இருந்து வல்வெட்டித்துறை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த போது தனியார் பேருந்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தில் தந்தையும் மகனும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவேளை தந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (எ-60)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது ஊரில் புகழ் பூத்த பெருமை
வாய்ந்த காரைநகர் களபூமி
விளானையில் வசித்த கந்தையா
மாஸ்ரரின் பேரனும் யாழ்ப்பாண
வைத்தியசாலை இரத்த வங்கி
பொறுப்பதிகாரியான காலஞ்சென்ற
பொன்னம்பலம் ஐயா அவர்களின்
மூத்த புதல்வரும் காரைநகர் திக்கரை
முருகமூர்த்தி ஆலய அறங்காவலரும் எமது
ஊரே பெருமை கொள்ளும் அளவிற்கு பொது அறிவு,
நுண் அறிவு வித்தகருமான எனது ஆருயிர் தம்பி உமாசங்கர்
அவர்கள் முதுகலாமாணி பட்டம் பெறுவதனையிட்டு
பாராட்டுவதோடு எமது ஊரின் அறிவுக் கடலான தம்பி
உமாசங்கர் தொடர்ந்தும் சாதனை படைத்து பட்டங்கள் பல
பெற்று வாழ மனதார வாழ்த்துகின்றேன்.

தம்பி க.மு. தம்பிராசா
தேர்த் திருவிழா உபயகாரரும்
தமிழ்த் தேசிய கூட்டமைப்பின்
தமிழரசுக் கட்சியின் வேட்பாளரும்.

(3808)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வட மாகாண சபைத் தேர்தல் - 2013



**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)
யாழ் மாவட்ட வேட்பாளர்

**சீ.வீ.கே.சிவஞானம்**

பட்டயச் செயலாளர்
ஓய்வுநிலை மாநகர ஆணையாளர்
துணைப் பொதுச்செயலாளர் - இ.த.அ.க

8

(E-0009)

சலுகைக்கு முடிவும்
உரிமைக்கு விடிவும்!!!



## சுவிஸ் செல்லும் பயணிகளுக்கு

யாழ் மக்களுக்காக
24 மணித்தியாலய சேவையை
விஸ்தரித்துள்ளோம்

கொழும்பு - சுவிஸ் 87300/=
Colombo-Swiss
RTN (மாதாந்த கொடுப்பனவுமுறையில்) 8900/= HNB

**Nation Popular Travels & Tours**
#128,Brown Road, Jaffna
**0214 920 920**



## AFTER A/L?

யாழ் மாவட்டத்தில் புகழ்பூத்த எமது ஆங்கிலப் பாடநெறிகளில் இணைவதன் ஊடாக ஆங்கில மொழியினை சரளமாக பேசிடுங்கள்.

**DIPLOMA IN ENGLISH**

A/L எடுத்த மற்றும் 16 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்குமானது
புதிய பிரிவுகள் ஆரம்பம்

**02.09.2013 @ 9.00 A.M**
(அனுமதிகள் வழங்கப்படும்)
இப்பிரிவானது சனி/ஞாயிறு தினங்களில் நடைபெறும்

E-CITY FEEL BRILLIANT FUTURE
COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT
Srilanka's NO:#1 English Language, Other Languages and Computer Training Centre

இல.372D, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரகாளி அம்மன் கோவில் அருகில்)
0770610271 / 0774924166 / 0773400418



## VACANCYES

After O/L, A/L சர்வதேச முன்னணி நிறுவனத்தின் புதிய கிளைகளுக்கு 21 பேர் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர்.

பயிற்சியின் போது 12,000/=
பயிற்சியின் பின் 40,000/=

இம்முறை A/L தோற்றியவர்களும் இணைந்து கொள்ளலாம்.
(3806)
0779298842, 0779994807, 0214993166



## மனதால் பூரிப்படைகின்றோம்



திரு. P.உமாசங்கர்
{B.Com(Jaf),
M.Com.(Kelaniya),
PGDE (NIE)
NDBF,
SPL Trd.Com}

எமது நண்பரும் கொழும்பு மருதானை தொழில்நுட்ப கல்லூரியின் விரிவுரையாளரும் காரைநகர் திக்கரை முருகன் ஆலய அறங்காவலரும் இலங்கையின் முன்னணி பொது அறிவு நுண்அறிவு எழுத்தாளரும் விரிவுரையாளருமான திரு.P.உமாசங்கர் இன்று BMICH இல் நடைபெறும் களனி பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் முதுவணிகமாணி (M.com) பட்டம் பெறுவதனையிட்டு வாழ்த்துவதுடன் விரைவில் கலாநிதி பட்டமும் பெற எமது வாழ்த்துக்கள்.

**நல்லூர் நண்பர்கள்**


## அண்ணா...

முன்பாக நேற்றைய தினம் இடம்பெற்ற காணாமல்போனோரின் உறவுகளின் ஆர்ப்பாட்டத்தின் போதேசிறுமிகதறியழுதார்.

மஹிந்தன் எனப்படும் குறித்த சிறுமியின் சகோதரன் கடத்தப்பட்டு இதுவரையும் அவரது நிலை தெரியவில்லை இந் நிலையில் நேற்று யாழ்.நூலகத்துக்கு முன்னால நடைபெற்ற கவனயீர்ப்புப் போராட்டத்தில் குறித்த சிறுமிகலந்து கொண்டிருந்தார்.

அங்கு'ஏன்என்னுடைய அண்ணாவை கடத்தி வைத்துள்ளீர்கள்', 'என்ர அண்ணன் எனக்கு வேணும்', 'நான் சாப்பிடாட்டாலும் பரவாயில்லை, செத்தாலும் பரவாயில்லை என்ர அண்ணாவை தராமல் இவ் விடத்திருந்து போக மாட்டேன்', என்ர அண்ணா எனக்கு வேணும், ஏன் அண்ணாவை வைச்சிருக்கிங்க? ஏதாவது ஒரு முடிபு சொல்லுங்கோ என அந்த பாலகி தன் அண்ணனை பறி கொடுத்த துயரத்தில் எரிக்கும் வெயிலிலும் கதறியழுதார்.

ஒரு கட்டத்தில் அச்சிறுமி மயங்கும் நிலைக்கும் போய் விட்டார். ஆர்ப்பாட்டம் முடியும் வரை அச்சிறுமியின் அவலக்குரல் ஓயவில்லை.

ஆனால்அரசஉயர் அதிகாரிகளோ ஐ.நா. ஆணையாளர் நவநீதம்பிள்ளையோ அச்சிறுமியின் கோரிக்கைகளைக் கண்டு கொள்ளாமை தான் பெரும் துயராகி விட்டது என அங்கு கூடியிருந்தவர்கள் தெரிவித்தனர். (எ-4,6)

## முள்ளி...

டத்திற்குட்பட்ட அதாவது இறுதிக்கட்ட போரின் போது அதிகளவிலான தமிழர்களின் உயிர்கள் பறிக்கப்பட்ட புதுமாத்தளன் பகுதிக்கும் அதன்பின்னர் 2.30 மணியளவில் முள்ளி வாய்க்கால் பகுதிக்கும் சென்றார்.

அதனைத் தொடர்ந்து கேப்பாப்புலவில் சீனியாமோட்டை பகுதியில் குடியேற்றப்பட்ட மக்களையும் சென்று சந்தித்திருந்தார்.

அத்தோடு பிற்பகல் 4.30 மணியளவில் கிளிநொச்சியிலுள்ள நைற்றா நிறுவனத்திற்கும் சென்று செயற்பாடுகளைப் பார்வையிட்டார்.

இதனையடுத்துவடகிற்கான தனது பயணத்தை முடித்துக் கொண்டு கொழும்புக்கு புறப்பட்டுச் சென்றார். (எ-6,267)


## வீடு வாடகைக்கு

கந்தர்மடத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரு அறைகளை உடைய வீடு நாள் வாடகைக்கு உண்டு.

தொடர்பு :
**0712581598**



## உணவு, இருப்பிடம் இலவசம்
## மாதம் 2 இலட்சம் ரூபாய் சம்பாதிக்கலாம்

ஐரோப்பிய நாடான (Holland) நெதர்லாந்தில் படிக்க, உழைக்க சட்ட ஆலோசனை

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
(C-4484)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**தி.ந.P.உமாசங்கர்**
(B.Com, M.Com.PGDE
SPl Trd.Com, NDBF)

எமது நண்பரும் மருதானை தொழில்நுட்ப கல்லூரி விரிவுரையாளரும் காரைநகர் திக்கரை முருகன் ஆலய அறங்காவலரும் பொது அறிவு, [illegible] அறிவு வித்தகருமான P.உமாசங்கர் களனி பல்கலைக்கழகத்தின் முதுவணிகமாணி (M.com) பட்டம் பெறுவதனை இட்டு பாராட்டுகின்றோம்

**நண்பர்கள்,**
(3690) தமிழ், கமல், நிறோஸ், பரமேஸ், தீபன், விஜயன்


## மரண அறிவித்தல்



## இராசரத்தினம் சிறிதரன் (சிறி)

வட்டுக்கிழக்கு சித்தன்கேணியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் சிறிதரன் அவர்கள் 27/08/2013 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் இராசரத்தினம் (காலஞ்சென்ற), இரத்தினவல்லி தம்பதிகளின் புதல்வரும், தங்ககணபதி (காலஞ்சென்ற), மகேஸ்வரி தம்பதிகளின் மருமகனும், வாணிசிறி அவர்களின் அன்புக் கணவரும், நிரோஜன், அனோஜா, துவிஜா, அபிநயா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கௌரி, சிவசக்தி, திருநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 28/08/2013 புதன்கிழமை இன்று முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
ம. மகேந்திரராஜா (மகேந்திரம்)
(மைத்துனர்)

வட்டுக் கிழக்கு
சித்தன்கேணி.
C-4488)


## உள்ளத்தால் உவகை அடைகின்றோம்

எமது கல்வி நிறுவனத்தின் முன்னாள் ஆசிரியரும் மருதானை தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல் துறை விரிவுரையாளருமான P.உமாசங்கர் இன்று BMICH இல் நடைபெறும் கணனி பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் முதுவணிகமாணி (M.Com) பட்டம் பெறுவதனையிட்டு வாழ்த்துவதுடன் இவர் தொடர்ந்து கலாநிதிப் பட்டம் பெறவும் எமது வாழ்த்துக்கள்.



**திரு.P.உமாசங்கர்**
(B.Com, M.Com.PGDE
SPI Trd.Com, NDBF)

நிறுவன அதிபர், ஆசிரியர்கள்
**சயன்ஸ் அக்கடமி**
நல்லூர் அரியாலை.
(3696)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.